விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 சித்திரை 25 புதன்கிழமை (08.05.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 140

## சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகள் இடம்பெறாது என்பதை உறுதிப்படுத்துக

யாழ். பல்கலை சமூகத்திடம் யாழ். கட்டளை தளபதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் எதிர்காலத்தில் சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகள் இடம்பெறாது என்பதை உறுதிப்படுத்துமாறு யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி அறிவுறுத்தியுள்ளார்.



அத்துடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் இராணுவத்தினரின் சோதனை 23

## பொலநறுவை – வெலிகந்த பகுதியில் தௌஹீத் ஜமாத் அமைப்பின் பயிற்சி முகாம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

தடைசெய்யப்பட்ட தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காகத் திட்டமிடப்பட்டிருந்த பயிற்சி முகாம் ஒன்று பொலநறுவை - வெலிகந்த பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வெலிகந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் இந்த பயிற்சி முகாம் சுற்றிவளைக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். 23

## விமானங்களை தாக்கும் 85 குண்டுகள் வவுனியாவில் மீட்பு



24

# தமிழர்கள் மீது அரசின் நம்பிக்கையின்மையே விடுதலைப்புலிகள் பலம் பெறக்காரணம்

## பாராளுமன்றில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

தமிழர்கள் மீதான அரசின் நம்பிக்கையின்மையே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு பலம்பெறக் காரணம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். நாட்டின் தற்போதைய பாதுகாப்பு குறித்து பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (24ஆம் பக்கம் பார்க்க)



## ஐ.எஸ்.அமைப்பில் பயிற்சி பெற்ற மேலும் ஐவர் கைது

(கொழும்பு)

ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பில் பயிற்சி பெற்ற மேலும் ஐவர் அரச புலனாய்வுப் பிரிவினரினால் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டனர்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டு 23

## பயங்கரவாதிகளுக்கு சொந்தமான 41 வங்கிக் கணக்குகள் 13 வீடுகள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுடன் தொடர்புடைய பயங்கரவாதிகளின் 13 வீடுகளும் 41 வங்கிக் கணக்குகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு அன்று 23

## பெருந்தொகையான வெடிபொருட்கள் அநுராதபுரத்தில் கண்டுபிடிப்பு



24

## குற்றப் புலனாய்வு பிரிவு சஹ்ரான் வீட்டை பொறுப்பேற்றது

(கொழும்பு)

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் இலங்கை தலைவர் சஹ்ரானுக்குச் சொந்தமான வீட்டை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பொறுப்பேற்றுள்ளனர். 23

## பளையில் கஞ்சாவுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

பளைப் பகுதியில் 2 கிலோ கிராமிற்கும் அதிகமான கேரள கஞ்சாவுடன் இளைஞரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நாட்டில் இடம்பெற்ற தொடர் தற்கொலை குண்டுத் 24

## தற்கொலையாளிகள் சிரியாவில் பயிற்சி பெற்றவர்கள்
## பயங்கரவாத அச்சுறுத்தல் இன்னும் முடியவில்லை – பிரதமர் எச்சரிக்கை

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தற்கொலையாளிகள் அனைவரும் சிரியாவில் பயிற்சி பெற்றவர்கள் என தெரிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இலங்கையில் உள்ள பயங்கரவாதிகள் பிடிக்கப்பட்டாலும் இந்த பயங்கரவாத அச்சுறுத்தல் இன்னும் முடியவில்லை. இவர்கள் வேறு எந்த வழியிலும் மீண்டும் வரலாம் எனவும் எச்சரிக்கை விடுத்தார். 23

## ஜனாதிபதியின் அறிக்கை சபையில் சமர்ப்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி பயங்கரவாத தாக்குதல் குறித்து ஆராய ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையை ஜனாதிபதி 23

## யாழ்.பல்கலைக்கழகத்துக்கு தகுதி வாய்ந்த அதிகாரியாக பேராசிரியர் கந்தசாமி நியமனம்

(யாழ்ப்பாணம்)



1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் படி ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைப்பயன்படுத்தி, யாழ். பல்கலைக் கழகத்துக்கு தகுதி வாய்ந்த அதிகாரியாக (Compitent Authority) 23

## முஸ்லிம்களை அச்சத்துடனும் சந்தேகத்துடனும் தமிழ், சிங்கள மக்கள் பார்க்கின்றனர்

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலாளிகளை கைது செய்து விட்டதாகவும், எஞ்சியுள்ள ஒரு சிலரையும் விரைவில் கைது செய்து விடுவோம் என தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே இதனை தெரிவித்தார்.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்ட 56 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதில் 12 பேர் மிக முக்கியமானவர்கள். 13 வீடுகள். 41 வங் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கேபிள் ரீவி கம்ப விவகாரம்
# யாழ். மாநகரசபைக்கு எதிரான மேன்முறையீட்டு வழக்கு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையினால் சட்ட விரோத கேபிள் ரீவி கம்பங்களை அகற்றியமைக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்த நீதவான் நீதிமன்றத் தீர்ப்பை சவாலுக்குட்படுத்தும் வகையில் இன்று புதன்கிழமை யாழ் மாவட்ட மேல் நீதிமன்றத்தில் வழக்கு இடம்பெறவுள்ளது.

இவ்வருடம் (2019) யாழ் நீதவான் நீதிமன்றத்தில் யாழ் மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் கேபிள் ரீவி சேவையை வழங்கும் நிறுவனத்தின் கம்பங்களை அகற்றியமைக்கு எதிராக குறித்த நிறுவனத்தால் யாழ் பொலிஸ் நிலையத்தில் தெரிவித்த முறைப்பாட்டின் அடிப்படையில் யாழ். நீதவான் நீதிமன்றில் வழக்கு இடம்பெற்றது.

இவ்வழக்கின் தீர்ப்பில் யாழ் மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் சேவை வழங்கும் குறித்த தனியார் நிறுவனம் மாநகரசபையின் சட்டதிட்டங்களுக்கு அமைய தனது ஒளிபரப்பை மேற்கொள்ள வேண்டுமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த நீதிமன்றத் தீர்ப்பை சவாலுக்குட்படுத்தும் வகையில் அந்த தனியார் ஒளிபரப்பு நிறுவனத்தால் மேன்முறையீடு செய்யப்பட்ட வழக்கு இன்று இடம்பெறவுள்ளது. (ம-10)

## வவுனியாவில் வீடொன்றிலிருந்து
# அடையாள அட்டைகள் உட்பட பல ஆவணங்கள் மீட்பு

(குருமன்காடு)

வவுனியா மன்னார் வீதி சாளம்பைக்குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் பதினைந்து அடையாள அட்டை மற்றும் பல ஆவணங்களை பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் நேற்று கையகப்படுத்தியுள்ளனர்.



இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து சாளம்பைக்குளம் பகுதியில் முன்னெடுத்த சோதனை நடவடிக்கையின் போது பூட்டியிருந்த வீட்டிலிருந்து அச்சுப்பிரதி செய்து லெமினெட் செய்யப்பட்ட பதினைந்து அடையாள அட்டைகள் மற்றும் சில ஆவணங்களை மீட்டெடுத்துள்ளனர்.

மீட்கப்பட்ட அடையாள அட்டைகள் மற்றும் ஆவணங்கள் பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்தில் இராணுவத்தினர் ஒப்படைத்துள்ளனர்.

எனினும் இது தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-250)

# முஸ்லிம்களை வருத்தாது மகிந்த அணியை விசாரியுங்கள்
## பாராளுமன்றில் சிறீதரன் எம்.பி

(கொழும்பு)

நாட்டில் அரங்கேற்றப்பட்ட கொடூரங்கள் தொடர்பாக அப்பாவி முஸ்லிம் மக்களை வருத்தாது, முன்னாள் ஜனாதிபதி உள்ளிட்ட அணியினரை விசாரிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு குறித்து பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அடிப்படைவாதத்தை மையமாகக் கொண்டு ஒருகுழு ஈடுபட்டிருக்கையில், அதற்காக முஸ்லிம்கள் பழிவாங்கப்படுவதும், மனரீதியில் பாதிக்கப்படுவதும் உடனடியாக நிறுத்தப்படவேண்டிய ஒன்றாகும் எனத் தெரிவித்தார்.

மேலும், தமிழினம் இம்சிக்கப்படுவதை இராணுவம் மகிழ்ச்சியோடு பார்க்கிறது என்றும் அவர் விமர்சித்துள்ளார். இராணுவம் இவ்வாறு மகிழ்வுடன் ஒரு இனத்தை அடக்க முயல்கின்றமையானது, இவ்விடயங்களின் பின்னணியில் இராணுவம், புலனாய்வுத்துறை மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் அணியினர் காணப்படுகின்றனர் என்பதை வெளிப்படுத்துகிறது.

எனவே, அப்பாவி முஸ்லிம்களை வருத்தாது, முன்னாள் ஜனாதிபதி உள்ளிட்ட அணியினரை விசாரித்து உண்மையை கண்டறியுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-3)

## சிறுநீரக மாற்று சிகிச்சைக்கு
# கருணை உள்ளம் படைத்தவர்கள் உதவி செய்ய முன்வருக

(யாழ்ப்பாணம்)

பலாலி வீதி 2ம் ஒழுங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயாரான 46 வயதுடைய திருமதி நாகேந்திரன் சாந்தினி என்பவருக்கு இரண்டு சிறுநீரகங்களும் பாதிப்படைந்த நிலையில் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவருக்கான இரண்டு சிறுநீரகங்களையும் மாற்றுவதற்கு பெருமளவு நிதி தேவைப்படுவதனால் கருணை உள்ளம் படைத்தவர்கள் உதவ விரும்பின் 0776031358 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது நேரடியாகவோ தொடர்பு கொண்டு நிதி உதவியை செய்யுமாறு கேட்கின்றார். (ம)


WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com


# மரண அறிவித்தல்

மலர்வு 1926 . 10 . 01



உதிர்வு 2019 . 05 . 07

## தம்பிப்பிள்ளை செல்லத்துரை

கன்னாகத்தை பிறப்பிடமாகவும், நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் தம்பிப்பிள்ளை செல்லத்துரை அவர்கள் நேற்று (07.05.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், அமரர் செல்லமணி அவர்களின் கணவரும், அமரர் கருணாநிதி, ஜெகநாதன், ஜெகராசன், ஜெகராகினி, ஜெகசீலன் (டிலக்சனா ரவல்ஸ் உரிமையாளர்), ஜெகபாலன் (தலைவர் - மக்கள் நலன்பேணும் அமைப்பு), ஜெகமோகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வரதராஜா (முன்னாள் தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர்) அவர்களின் சிறிய தந்தையும், சிவசாமி, ஜெகதீஸ்வரி, ஞானலோசனி, றமிளா, ஜெயந்தினி, கஜேந்தினி, கமலினி ஆகியோரின் அன்பு மாமனாரும், தமிழ்ச்செல்வன், தயாநிதி, தயாழினி, அமரர் தயாமதி, யாழினி, அமரர் பகீரதன், ஹீர்த்தனா, தர்சனா, சிந்துஜா, பிரசாந், நிஷாந், கிரிஷாந், கார்த்திக், அமரர் லதுரஷன் மற்றும் லாவண்யா, மதுமினன், சுஜிந்தன், டிலக்ஷனா, சிதாஞ்சலி, கதிர்விழி, சுமித்திரன், நிக்ஷன், சீத்திகன், சாருஜன், கலையகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.05.2019) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் நாவற்குழி பிணமுருங்கை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாடசாலை வீதி, நாவற்குழி, கைதடி.

தகவல்: குடும்பத்தினர்

(சி-6322)

# மரண அறிவித்தல்

மண்ணில் 25 . 11 . 1955



விண்ணில் 06 . 05 . 2019

## திருமதி சாந்தினி அருந்தவபாலன்

(ஓய்வுநிலை ஆசிரியை- பளை மத்திய கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி)

வேலாயுதம் வீதி, நுணாவில் மத்தி சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி சாந்தினி அருந்தவபாலன் நேற்று முன்தினம் (06.05.2019) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா மகேசன் - ஞானபூங்கோதை தம்பதியினரின் மூத்த புதல்வியும், அருந்தவபாலன் (ஓய்வுநிலை அதிபர் - சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், திருவதனி (அவுஸ்திரேலியா), தனஞ்செயன் (அவுஸ்திரேலியா), சித்தார்த்தன் (சிங்கப்பூர்), பார்த்தீபன் (விரிவுரையாளர், தொழில்நுட்ப பீடம் -யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இரத்தினம் தேவானந்த் (அவுஸ்திரேலியா) அவர்களின் அன்பு மாமியும், சிவனயா, சோபியா, சமந்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற தர்மபாலன் மற்றும் ஜெயபாலன் (பிரான்ஸ்), மாலினி (ஜேர்மனி), விக்னகுமார் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும், குளோரியா, கேதீஸ்வரி, அன்ரன் அழகராசா, தாமராதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (10.05.2019) வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வேலாயுதம் வீதி, நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்

(சி-6323)

### மக்கள் இனி அச்சம் கொள்ளத் தேவையில்லை

# பயங்கரவாதத் தாக்குதல்களுக்கான திட்டங்கள் அனைத்தும் முறியடிப்பு

## பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன உறுதி



(கொழும்பு)

**இலங்கையில் எதிர்காலத்தில் தாக்குதல்களை முன்னெடுக்கும் முனைப்பில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த அனைத்து வெடிபொருட்களும் மீட்கப்பட்டுள்ளதால் மக்கள் இனி அச்சம் கொள்ளத் தேவையில்லை என பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்ன தெரிவித்தார்.**

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களுடன் நேரடியாக தொடர்புபட்ட அனைவரும் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் ஒரு சிலர் தடுத்து வைக்கப்பட்டுள்ள அதேவேளை, ஏனையோர் கொல்லப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வெடிகுண்டுகள் தொடர்பாக சிறந்த அறிவை கொண்டிருந்த பயங்கரவாதக் குழுவின் இரு உறுப்பினர்களும் கொல்லப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பை பாதுகாப்பு படையினர் உறுதிப்படுத்தியுள்ள நிலையில், மக்கள் இனி அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# வலுவான நாடுகளுடன் நேரடியாக மோத திறனில்லாத ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள்

## நான் அதிர்ச்சியடைந்துள்ளேன்-ஜனாதிபதி மைத்திரி வெளிப்படுத்தல்

- ஐ.எஸ்.தனது இருப்பை வெளிப்படுத்த இலங்கையில் தாக்குதல்
- உலகில் எங்கும் குண்டுவெடித்தால் ஜனாதிபதி பதவி விலகுவதில்லை
- சவாலை எதிர்கொள்ள அவசியமான நடவடிக்கையே எனது பணி



ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு தனது இருப்பை வெளிப்படுத்துவதற்காக இலங்கையில் தாக்குதல்களை மேற்கொள்ள திட்டமிட்டிருக்கலாம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பிபிசியின் பிராந்திய மொழிச் சேவையொன்றிற்கு வழங்கியுள்ள பேட்டியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நான் அதிர்ச்சியடைந்துள்ளேன் அவர்கள் ஏன் இலங்கையில் தாக்குதலை மேற்கொள்ள தீர்மானித்தார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

உலகின் வலுவான நாடுகளுடன் நேரடியாக மோதுவதற்கான திறன் இல்லாத காரணத்தினாலா ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் அமைப்பு அமைதி நிலவும் நாடொன்றில் தாக்குதலை மேற்கொள்வதற்கு தீர்மானித்தது என நான் கேள்வி எழுப்பவிரும்புகின்றேன் என மைத்திரி தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாத அமைப்பு இன்னமும் அழிந்துவிடவில்லை என் பதை சொல்வதற்காக தனது இருப்பை வெளிப்படுத்துவதற்காக இலங்கையில் தாக்குதலை மேற்கொள்ள தீர்மானித்ததா எனவும் மைத்திரி கேள்வி எழுப்பியுள்ளார்.

புலனாய்வுப் பிரிவின் உயர் மட்டத்தில் உள்ளவர்களுக்கு தாக்குதல்கள் இடம்பெறலாம் என்ற தகவல் கிடைத்தது. எனினும் அவர்கள் அதனை எனக்கு தெரியப்படுத்தவில்லை எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அவர்கள் தங்கள் கடமையை புறக்கணித்தனர். அதன் காரணமாகவே அவர்கள் மீது நான் நடவடிக்கை எடுத்தேன் எனவும் தெரிவித்துள்ள மைத்திரி இவர்களை பதவியிலிருந்து நீக்கியுள்ளேன், விசாரணைகளுக்காக குழுவொன்றை நியமித்துள்ளேன் எனவும் தெரிவித்துள்ளார்.

உலகின் எந்த நாட்டிலும் குண்டுவெடிப்பைத் தொடர்ந்து ஜனாதிபதி பதவிவிலகுவதில்லை எனவும் மைத்திரி தெரிவித்துள்ளார்.

இந்தச் சவாலை எதிர்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதே எனது பணி என நான் கருதுகின்றேன் என மைத்திரி தெரிவித்துள்ளார். (இ-7)

# பயங்கரவாதி சஹ்ரானுக்கு பெருந்தொகை நிதி வழங்கிய மத்திய கிழக்கு நாடுகள்

(கொழும்பு)

மத்திய கிழக்கைச் சேர்ந்த இரண்டு நாடுகள் தீவிரவாதிகளுக்கு நிதியுதவி வழங்கியுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் சஹ்ரானுக்கு இவ்வாறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன.

சஹ்ரான் ஹாசிம் மத்திய கிழக்கின் முக்கிய நாடு ஒன்றின் ஊடாக துருக்கி சென்று அங்கிருந்து சில தடவைகள் சிரியாவிற்கு சென்றுள்ளான்.

2017ஆம் ஆண்டில் சஹ்ரானுக்கு எதிராக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள போதிலும் அவனைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதேவேளை, சஹ்ரானின் காத்தான்குடியில் அமைந்துள்ள முஸ்லிம் பள்ளிவாசலை நிர்மாணிப்பதற்கும் மத்திய கிழக்கைச் சேர்ந்த முக்கிய நாடு ஒன்றே



நிதியுதவி வழங்கியுள்ளது எனவும் குறித்த ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. (இ-7)

### யாழ்.பல்கலைக்கழகத்தின்

# இந்து கற்கைகள் பீடத்திற்கு

## பீடாதிபதியாக கலாநிதி சுகந்தினி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புதிதாக (11 ஆவது பீடமாக) அமைக்கப்படுகின்ற இந்து கற்கைகள் பீடத்தின் பதில் பீடாதிபதியாக கலாநிதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பெண் பேராசிரியையும் இந்து நாகரிகத் துறையில் இருந்துதான் உருவாகினார். அவர் பேராசிரியர் கலைவாணி இராமநாதன். இந்து கற்கைகள் பீடத்திற்கும் பெண் ஒருவர் (பதில்) பீடாதிபதியாக நியமனம் பெற்றிருப்பது பெருமைக்குரியதாகும்.

கலாநிதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் என்பதும் தமிழ்ச் சங்கம் சார்ந்த பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-9)




# சென்னை 'வெயிட்டிங்'


மும்பை அணியை இறுதிக்கு அழைத்துச் சென்ற சூர்யகுமார் யாதவ் அரைச்சதம் அடித்தபோது...

## ஒரே பாய்ச்சலில் மும்பை இறுதியில்

ஐ.பி.எல்., தொடரின் இறுதிக்கு முன்னேற சென்னை அணி காத்திருக்க வேண்டும். நேற்று நடந்த தகுதிச்சுற்று 1ல் 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்ந்தது. மும்பை அணி அசத்தலாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இந்தியாவில் 12வது ஐ.பி.எல்., 'ரி20' தொடர் நடக்கிறது. நேற்று முதல் 'பிளே ஓப்' சுற்று தொடங்கின. சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடந்த தகுதிச்சுற்று 1ல் 'நடப்பு சம்பியன்' சென்னை - மும்பை அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

நாணயச்சுழற்சியில் வென்ற சென்னை அணித் தலைவர் தோனி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். சென்னை அணியில் காயத்தால் விலகிய கேதர் ஜாதவுக்குப் பதில் முரளி விஜய் சேர்க்கப்பட்டார். மும்பை அணியில் மெக்லீனகனுக்குப் பதில் ஜெய்ந்த் யாதவ் இடம் பெற்றார்.

**சரிந்த ஆரம்பம்**

சென்னை அணிக்கு டு பிளசி, வோட்சன் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. மலிங்க வீசிய முதல் ஓவரில் ஒரு ஓட்டம் மட்டும் எடுக்கப்பட்டது. குர்னால் பாண்ட்யா பந்தில் பவுண்டரி அடித்த டு பிளசி (6), சகார் சுழலில் சிக்கினார்.

அடுத்து ஜெயந்த் யாதவை அழைத்தார் ரோகித் சர்மா. இவரது முதல் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ரெய்னா (5) மூன்றாவது பந்தில் அவரிடமே 'பிடி' கொடுத்து 'பெவிலியன்' திரும்பினார்.

பும்ரா ஓவரில் வோட்சன் இரண்டு பவுண்டரி அடித்து நம்பிக்கை கொடுத்தார். முரளி விஜய் தன் பங்கிற்கு குர்னால் பந்துகளை எல்லைக் கோட்டுக்கு விரட்டினார். ஓட்டவேகத்தை அதிகரிக்க முயற்சித்த வோட்சன் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 6 ஓவர்களில் சென்னை அணி 32/3 ஓட்டங்கள் என திணறியது.

**பெரிய சிக்கல்**

12வது சீசனில் 'பவர் பிளே' ஓவர்களில் குறைந்தது 3 அல்லது அதற்கும் மேல் விக்கெட்டுக்களை இழந்த அணிகள் 3ல் தான் வென்றன. 10 போட்டிகளில் தோற்றன. இதனால் சென்னை ரசிகர்கள் சோகத்தில் ஆழ்ந்தனர். இதிலிருந்து மீள்வதற்குள் முரளி விஜயும் (26), சகார் வலையில் சிக்கினார். தோனி, அம்பதி ராயுடு இணைந்து அணியை மீட்பர் என நம்பப்பட்டது. இதற்கேற்ப ஜெயந்த் ஓவரில் இருவரும் தலா ஒரு சிக்சர் அடிக்க, 17.1 வது ஓவரில்தான் சென்னை அணியின் ஓட்டஎண்ணிக்கை 100ஐ எட்டியது.

கடைசி நேரத்தில் மலிங்க ஓவரில் தோனி அடுத்தடுத்து இரண்டு சிக்சர் அடிக்க, சென்னை ரசிகர்கள் உற்சாகம் அடைந்தனர். பும்ரா வீசிய கடைசி ஓவரில் 9 ஓட்டங்கள் மட்டும் எடுக்கப்பட்டன.

20 ஓவர்களில் சென்னை அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 131 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. தோனி (37), அம்பதி ராயுடு (42) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**சபாஷ் சூர்யகுமார்**

எளிய இலக்கைத் துரத்திய மும்பை அணிக்கு ஆரம்பம் சரியாக அமையவில்லை. சகார் வீசிய முதல் ஓவரின் முதல் பந்தில் பவுண்டரி அடித்த ரோகித் (4) அடுத்த பந்தில் ஆட்டமிழந்தார். குயின்ரன், 8 ஓட்டங்கள் எடுத்தார்.

பின் இணைந்த சூர்யகுமார் யாதவ், இஷான் கிஷான் ஜோடி சீரான ஓட்டக் குவிப்பை வெளிப்படுத்தியது. இம்ரான் ஓவரில் இரண்டு பவுண்டரி அடித்த சூர்யகுமார், ஐ.பி.எல்., அரங்கில் 7வது அரைசதம் அடித்தார். 3வது விக்கெட்டுக்காக 80 ஓட்டங்கள் சேர்த்தபோது, இம்ரான் சுழலில் இஷான் கிஷான் (28), குர்னால் பாண்ட்யா (0) அடுத்தடுத்து வீழ்ந்தனர்.

இருப்பினும் எளிய இலக்கு என்பதால், மும்பை அணி 18.3 ஓவரில் 4 விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

சூர்யகுமார் (71), ஹர்திக் பாண்ட்யா (13) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**இன்னொரு 'சான்ஸ்' இருக்கு**

சென்னை ரசிகர்கள் அதிகம் கவலைப்படத் தேவையில்லை. தகுதிச்சுற்று 1ல் தோற்ற போதும், இறுதிப் போட்டிக்கு செல்ல இன்னொரு வாய்ப்பு உள்ளது. இன்று நடக்கும் 'எலிமினேட்டர்' போட்டியில் வெல்லும் அணியுடன் வரும் 10ஆம் திகதி நடக்கும் தகுதிச்சுற்று 2ல் மோத வேண்டும். இதில் சென்னை வென்றால், மே 12ல் நடக்கும் இறுதிப் போட்டியில், மீண்டும் மும்பை எதிர்த்தாடலாம்.


**பறந்தது 'துடுப்பு மட்டை'**

நேற்று 20வது ஓவரை வீசினார் பும்ரா. 144.2 கி.மீ., வேகத்தில் வந்த முதல் பந்தை தோனி வேகமாக அடித்தார். அப்போது துடுப்பு மட்டை இவரது கையை விட்டு பறந்தது. பந்தை இஷான் கிஷான் 'பிடி' செய்ய, ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்தனர். 'ரீப்ளேயில்' பும்ரா 'நோ போல்' வீசியது தெரியவர, நல்லவேளையாக தோனி தப்பினார்.




# வெல்லுமா டில்லி?

## ஹைதராபத்துடன் இன்று மோதல்



ஐ.பி.எல்., கிரிக்கெட் தொடர் இறுதிக் கட்டத்தை எட்டி உள்ளது. இன்று விசாகப்பட்டனத்தில் நடக்கவுள்ள 'எலிமினேட்டர்' போட்டியில் டில்லி, ஹைதராபாத் அணிகள் மோதவுள்ளன.

டில்லி 'கேப்பிடல்ஸ்' என்ற பெயர் மாற்றம் கைகொடுக்கிறது. 2012க்குப்பின், ஐ.பி.எல்., அரங்கில், புள்ளிப்பட்டியலில் முதல் 4 இடங்களை பிடித்துள்ளது. ஆரம்ப ஜோடியான தவான் (486 ஓட்.), பிரித்வி ஷா (292) அசத்துகிறது. 24 வயதான ஸ்ரேயஸ் ஐயர், அணித் தலைவராகவும், தனிப்பட்ட துடுப்பாட்டத்திலும் (14 போட்டி, 442 ஓட்.,) ஜொலிக்கிறார். விளாசல் வீரர் ரிஷாப் பன்ட் திறமை, ராஜஸ்தானுக்கு எதிராக (36 பந்து, 78 ஓட்.,) நன்றாக வெளிப்பட்டது. இங்ராம், ருதர்போர்டின் பங்களிப்பும் நிச்சயம் தேவை.

**ரபாடா இல்லை**

வேகப்பந்துவீச்சாளர் ரபாடா, தென்னாபிரிக்கா திரும்பியது பின்னடைவு. போல்ட், இஷாந்த் உள்ளிட்ட 'வேகங்கள்' சுமையை சுமக்க தயாராக உள்ளனர். சுழல் பணியில், அமித், அக்சர் கூட்டணி மிரட்டினால் வெற்றி பெறலாம்.

**தடுமாறும் ஹைதராபாத்**

ஐ.பி.எல்., அரங்கில், மூன்றாவது முறையாக 12 புள்ளியுடன் 'பிளே ஓப்' சுற்றுக்கு முன்னேறிய அணியானது ஹைதராபாத். வோர்னர், பேர்ஸ்டோவ் இருவரும் ஆபத்தான ஆரம்ப ஜோடியாக வலம் வந்தனர். இவர்கள் தாயகம் திரும்ப, கடைசி இரண்டு போட்டியிலும் வீழ்ந்தது. சகா, கப்டில் வலுவான ஆரம்பம் கொடுக்க மறுக்கின்றனர். மணிஷ் பாண்டே, அணித் தலைவர் வில்லியம்சன் மட்டுமே நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்கின்றனர். விஜய் சங்கர், யூசுப் பதானின் சூழ்நிலைக்கேற்ற ஆட்டம் இன்று தேவை.

அனுபவ வேகப்பந்துவீச்சாளர் புவனேஷ்வருக்கு, இளம் பந்துவீச்சாளர் கலீல் அகமட் கைகொடுக்கிறார். பசில் தம்பியும் மாற்றுகிறார். ரஷிட் கான், நபியின் 'சுழல்' ஜாலம் எடுபட்டால் நல்லது.

# 'சுப்பர்' வீரர் குளூஸ்னர்



உலக கிண்ண அரங்கில் 'சகலதுறை வீரராக' அவதாரம் எடுத்த லான்ஸ் குளூஸ்னர், மிகவும் தாமதமாகத்தான் கிரிக்கெட்டில் காலடி எடுத்து வைத்தார். இளம் பருவத்தில் கரும்பு தோட்டத்தில் சுற்றித் திரிந்த சிறுவர்களுடன் கால்பந்து, கிரிக்கெட் ஆடினார். பின் இராணுவத்தில் சேர்ந்த போதுதான் 'சீரியசாக' கிரிக்கெட் விளையாட ஆரம்பித்தார். ஆங்கிலம் தவிர, ஆபிரிக்காவின் 'ஜுலு' மொழியிலும் சரளமாக பேசக் கூடியவர் என்பதால், 'ஜுலு' என்று செல்லமாக அழைக்கப்பட்டார்.

தென்னாபிரிக்க அணியில் 1996ல் அறிமுகமானார் குளூஸ்னர். 1999ல் நடந்த உலகக் கிண்ணத் தொடரில் விஸ்வரூபம் எடுத்தார். 'பேஸ்போல்' பாணியில் அதிரடியாக 'துடுப்பாட்டம்' செய்தார். பாகிஸ்தானுக்கு எதிரான 'சுப்பர் 6' போட்டியில் வாண வேடிக்கை காட்டிய இவர், 41 பந்துகளில் 46 ஓட்டங்கள் எடுத்து, அணிக்கு வெற்றி தேடிக் கொடுத்தார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான பரபரப்பான அரையிறுதியில் 16 பந்துகளில் 31 ஓட்டங்கள் விளாசினார். ஆனால், டொனால்ட் துரதிர்ஷ்டவசமாக 'ரன் அவுட்டாக' போட்டி 'சமன்' ஆனது. பின், 'சுப்பர் 6' பிரிவில் பெற்ற அதிக நிகர ஓட்ட சராசரி ('ரன்-ரேட்') அடிப்படையில் அவுஸ்திரேலியா இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தென்னாபிரிக்கா இறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பை இழந்த போதும் குளூஸ்னர், 'தொடர் நாயகன்' விருதை கைப்பற்றினார். இத்தொடரில், 9 போட்டிகளில், 2 அரைசதம் உட்பட 281 ஓட்டங்கள் (சராசரி 140.50), 17 விக்கெட்டுக்களை சாய்த்தார். மூன்று உலக கிண்ணத் தொடரில் (1996, 99, 2003) பங்கேற்ற இவர், ஒட்டுமொத்தமாக 14 போட்டிகளில், 372 ஓட்., 22 விக்கெட் வீழ்த்தினார். கடந்த 2000ல் 'விஸ்டன்' சிறந்த வீரராக தேர்வு செய்யப்பட்டார்.

கடந்த 2004ல் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற குளூஸ்னர், 2012 முதல் 2016 வரை தென்னாபிரிக்காவின், டொல்பின்ஸ் அணிக்கு பயிற்சியாளராக செயற்பட்டார். கடந்த 2016ல் சிம்பாப்வே அணியின் துடுப்பாட்ட பயிற்சியாளராக செயற்பட்ட இவர், தமிழக பிரிமியர் லீக் தொடரில் கோவை கிங்ஸ் அணிக்கு பயிற்சி அளித்தார்.

**'வேகம்' தந்த சோகம்**

கடந்த 1983ல் நடந்த உலகக் கிண்ணத் தொடரின் லீக் போட்டியில் மே. தீவுகளின் 'வேகப்புயல்' மல்கம் மார்ஷல் வீசிய பந்து, இந்திய வீரர் வெங்சர்க்காரின் தாடைப் பகுதியை பலமாக தாக்கியது. இதனால், இந்தியா கிண்ணம் வென்ற இறுதிப் போட்டியில் இவரால் விளையாட முடியாமல் போனது.

## சரத்பொன்சேகாவுக்கு சட்டம் ஒழுங்கு சந்தேகம்

# அமைச்சுக்களில் மாற்றத்தை ஏற்படுத்தி பயங்கரவாதத்தை ஒழிக்க முடியுமா?

### அரச தரப்பிடம் தயாசிறி கேள்வி





(கொழும்பு)

சட்டம் ஒழுங்கு அமைச்சு கடந்த நான்கரை வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சியிடமே இருந்தது. ஆனால் அவர்களால் சாதாரண போதைப் பொருள் கடத்தல்காரர்களைக் கூட கைது செய்ய முடியவில்லை. அவ்வாறிருக்கையில் தற்போது அமைச்சுக்களில் மாற்றத்தை ஏற்படுத்துவ தால் மாத்திரம் பயங்கரவாதத்தை முற்றாக ஒழிக்க முடியுமா? என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர எம்.பி. கேள்வி எழுப்பினார்.


சுதந்திரக் கட்சி காரியா லயத்தில் நேற்று இடம்பெ ற்ற ஊடகவியலாளர் சந் திப் பின்போது, பீல்ட் மார் ஷல் சரத்பொன்சேகாவுக்கு சட் டம் ஒழுங்கு அமைச்சு வழ ங்கப்பட வேண்டும் என்று ஐ.தே.க. ஜனாதி பதியிடம் வலியுறுத்தி யுள்ளமை குறி த்து ஊட கவியலாளர்கள் வினவிய போதே அவர் மேற்கண் டவாறு கேள்வி எழுப்பியு ள்ளார். (இ-7)

# மரண அறிவித்தல்

மண்ணில் 01.06.1948

## திரு.வி.சச்சிதானந்தன் (SLPS-1)

விண்ணில் 06.05.2019



### திரு.வி.சச்சிதானந்தன் (SLPS-1)

| | |
|---|---|
| யா/அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயம் - ஆசிரியர் | 01.09.1971 |
| இ/ பலாங்கொடை ஜெயலானி ம.வி. - ஆசிரியர் - | 01.01.1974 |
| இ/பரிலூக்கா ம.வி. - ஆசிரியர் - | 01.02.1974 |
| கொ/ கொம்பனித்தெரு றோ.க.த.க.வி.- ஆசிரியர்- | 01.01.1976 |
| கொ/ பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி - ஆசிரியர்- | 01.04.1979 |
| யா/ யூனியன் கல்லூரி - ஆசிரியர்- | 01.01.1982 |
| யா/ யூனியன் கல்லூரி- ஆசிரிய ஆலோசகர்- | 01.09.1985 |
| யா/ வறுத்தலை விளான் அ.மி.த.க.வி. தரம் III அதிபர்- | 01.01.1991 |
| யா/ அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் தரம் II அதிபர்- | 01.02.1991 |
| யா/ மல்லாகம் மகா வித்தியாலயம் தரம் 1C அதிபர் - | 05.11.1993 |
| தி/ விவேகானந்தா கல்லூரி தரம் 1AB தற்காலிக இணைப்பு:- | 05.01.1998 |
| யா/ மல்லாகம் மகா வித்தியாலயம் தரம் 1C அதிபர்- | 01.01.1999 |
| யா/ நடேஸ்வராக் கல்லூரி தரம் 1AB அதிபர்- | 07.04.2000 |
| யா/ இணுவில் இந்துக் கல்லூரி தரம் 1C அதிபர் - | 05.09.2003 |

கரம்பனைப் பிறப்பிடமாகவும் சூராவத்தை சுண்டிக்குளி ஆகியவற்றை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. விக்கினராசா சச்சிதானந்தன் அவர்கள் 06.05.2019 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விக்கினராசா மங்களம் ஆகியோரின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- சவுந்தரம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் கலைமகளின் (ஓய்வுநிலை ஆசிரியை, யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்) அன்புக் கணவரும், Dr.மயூரதி (தேசிய வைத்தியசாலை, கொழும்பு), அரிகரன் (இலங்கை கணக்காளர் சேவை) ஆகியோரின் அருமைத் தந்தையும்,

சயந்தனின் (பொறியியலாளர் Global Digital (PVT) Ltd ) அன்பு மாமனும் வெண்பாவின் அருமைப் பேரனும் காலஞ்சென்ற சபாநாதன் (நீர்கொழும்பு) மற்றும் தில்லையம்பலம் (கொழும்பு), கனகாம்பிகை (கனடா) மற்றும் காலஞ்சென்ற சரோஜினிதேவியின் அன்புச் சகோதரனும் வேலணையைச் சேர்ந்த கனகநாயகம் பானுமதியின் சம்பந்தியும் திருமதி சுந்தரலட்சுமி, கனடாவைச் சேர்ந்த கனகசபாதி, நடராஜா ஆகியோரின் மைத்துனரும்

காலஞ்சென்றவர்களான தெய்வானை நடராஜா (சுருவில்), சீதையம்மா சதாசிவம் (சுண்டிக்குளி), பொன்னம்மா கந்தையா (மானிப்பாய்), மாணிக்கம் சுப்பையா (சுருவில்) ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் தங்கரத்தினம் (கனடா) ஆகியோரின் பாசமிகு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2019) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம். (8708)

30B, விதானையார் வீதி, சுண்டிக்குளி.

தகவல்: குடும்பத்தினர்.

## இராசி பலன்

**மீனம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், தொலை பேசி வழியில் சுப செய்தி கள் வந்து சேரலாம்.

**மேடம்:** சவால்களை சமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், குடும் பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெற லாம், செய்தொழில் மேன்மை யுண்டு.

**இடபம்:** பொதுவாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயரும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வியா பார விருத்திக்கு வித்திடு வீர்கள்.

**மிதுனம்:** உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறை யலாம், கற்பனை மிகுதி யான நாள்.

**கும்பம்:** புதுமனை கட்டி குடியேறும் எண்ணம் உருவாகும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

கிரகநிலை: சுக் | சூரி,புத | ராகு,சந் செவ் | சனி., குரு. கேது

இராசி பலன்

கிரகநிலை

சந்திராஷ்டமம்

கேட்டை, மூலம்

08.05.2019

சித்திரை 25, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

சதுர்த்தி பின்னிரவு 1.23 மணிவரை

மிருகசீரிடம் பிற்பகல் 4.31 மணிவரை

ஆயிலியம் பின்னிரவு 3.08 மணிவரை

சுபநேரம் 4.25-5.55 மணிவரை

இராகுகாலம் 11.55-1.25 மணிவரை.

சர்வதேச செஞ்சிலுவை தினம்

சதுர்த்தி விரதம்

வளவன்

**கடகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், மனச்சஞ்ச லங்கள் கூடும் நாள்.

**மகரம்:** எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், ஆரோக்கி யமான நாள், செய்தொ ழிலில் சிறப்புகளைப் பெறு வீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**சிம்மம்:** அதிர்ஷ்டமான நாள், இல் லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய் ப்புண்டு, வருமானம் திரு ப்தி தரும் வகையில் அமை யும்.

**தனுசு:** நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், குடும்பத் தேவைகளில் ஆர்வம் காட் டுவீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறை வேறலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தினரிடையே கோப மாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற் படலாம், திருடர் பயமுண்டு, உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள்.

**துலாம்:** தொழில் ரீதியாக சிலர் உங்க ளிடம் உதவி கேட்டு வரலாம், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பயணங்களால் பல னுண்டு, சுணங்கிய காரியங்க ளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி:** புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், கௌர வமான நாள்.

# இலங்கையின் சாகச சுற்றுலா அமைவிடங்களின் வரைபடம் தயாரிக்க அரசு நடவடிக்கை



(கொழும்பு)

இலங்கையின் ஒட்டுமொத்த சுற்றுலா அபிவிருத்தியில் சாகச சுற்றுலாத் துறையானது துரிதமாக வளர்ந்து வரும் மிகப் பிரபல்யமான ஒரு துணைத் துறையாக மாறி வருகின்றது. இந்தத் துறையின் திட்டமிட்ட அபிவிருத்திக்கான முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, தேசிய பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் மத்திய செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கொள்கை அபிவிருத்தி அலுவலகம் என்பவற்றுடன் இணைந்து, இந்தத் துறையின் அபிவிருத்தி மற்றும் விரிவுபடுத்தல் என்பவற்றுடன் பாதுகாப்பு என்பன உள்ளடங்கலான சாத்தியப்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் களை மேற்கொண்டது.

இந்தக் கலந்துரையாடலின் போது, சாகச சுற்றுலாச் செயற்பாடுகள் நடைபெறும் இடங்களையும் அங்கு எந்த வகையிலான சாகசங்கள் பிரபல்யமாகவுள்ளன என்பவற்றினையும் குறிக்கும் ஒரு முழுமையான வரைபடத்தை அபிவிருத்தி செய்வதற்கு முன்மொழியப்பட்டது. இந்த நோக்கத்திற்காக, நில அளவைத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவி பெறப்படுவதோடு, உலகளாவிய நிலைப்படுத்தல் முறைமையின் (GPS) ஒருங்கிணைப்புப் புள்ளிகளை வழங்குவதன் மூலம், இந்தச் செயல்முறைக்கு உதவுவதற்கான கோரிக்கையொன்று, சாகசச் சுற்றுலா சேவை வழங்குநர்களிடமும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களிடமும் முன்வைக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

சாகசச்சுற்றுலாத்துறை வழங்குநர்கள் தங்களால் வழங்கப்படும் சாகசச்சுற்றுலா சேவைகளின் வகைகள் மற்றும் GPS ஒருங்கிணைப்புப் புள்ளிகள் உட்பட தமது விபரங்களை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சந்தன விஜேரத்னவின் Chandana @srilanka.travel என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் பிரதியொன்றை cpmunpea@gmail.com என்ற முகவரிக்கும் 31.05.2019 க்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (இ-7)

# மாணவர்களின் கைது நடவடிக்கை போர்ச் சூழலிலிருந்து மீண்டுவந்த பல்கலை.செயற்பாடுகளை குழப்பும்

## மன்றில் சட்டத்தரணி குருபரன் வாதம்



(யாழ்ப்பாணம்)

30 வருடத்துக்கு மேலாக இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் மீண்டெழுந்த யாழ்.பல்கலைக் கழகத்தின் கல்விச் செயற்பாட்டை சட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்படாத கைது நடவடிக்கை குழப்பத்தை ஏற்படுத்தி விடுமென யாழ். பல்கலைக்கழகச் சட்டத்துறைத் தலைவரும் கைது செய்யப்பட்ட மாணவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணியுமான கலாநிதி கு.குருபரன் நேற்று முன்தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் வாதத்தை முன்வைத்தார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் கைது தொடர்பில் நகல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவேளை கைது தொடர்பில் ஆட்சேபனைகளை கைது தொடர்பில் அடுக்கிய அவர் தனது வாதத்தில் உள்நாட்டுப் போர் நிறைவடைந்து 10 வருடங்கள் கடந்த நிலையில் 2015 ஆம் ஆண்டு ஐ.நா. அமர்வில் இலங்கையில் குற்றங்கள் நிகழ்ந்தன என 30 (1) தீர்மானத்தை ஏற்றுக் கொண்ட நிலையில் இனப்படுகொலையை வெளிப்படுத்தும் பொதுமக்களின் படங்களும் விடுதலைப் புலிகளின் தொலைக்காட்சி அறிவிப்பாளரான இசைப்பிரியாவின் புகைப்படமும் பத்து வருடங்களுக்கு முற்பட்டவையே. இவற்றைக் காரணம் காட்டி பயங்கரவாதச் தடைச்சட்டத்திலோ அல்லது அதன் உப ஏற்பாடுகளிலோ மற்றும் அவசரகால ஒழுங்கு விதிகளிலோ கைது செய்யக்கூடிய ஏற்பாடுகள் இல்லை எனத் தெரிவித்தார்.

மேலும் 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற சம்பவங்களை விசாரிக்க அவசர ஒழுங்கு விதிகள் கொண்டு வரப்படவில்லை எனவும் நாட்டில் அண்மையில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தை விசாரிக்கவும் அதனோடு தொடர்புடையவர்களை கைது செய்யவும் கொண்டு வரப்பட்டது எனவும் வாதம் முன்வைக்கப்பட்டது.

மேலும் பயங்கரவாத தடைச் சட்ட ஏற்பாடுகளின் பிரிவு 7 (1) படி விளக்கமறியலில் வைக்கப்படும் நபர் தொடர்பில் எஸ்.பி. (SP) தரத்துக்கும் அதற்கு மேல் தர அதிகாரியே வழங்குத் தொடர்பில் கையெழுத்திட அதிகாரம் இருப்பதாகவும் அவ்வாறில்லாமல் கோப்பாய்ப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அடிப்படைத் தகுதியற்ற வழக்கெனத் தெரிவித்த கலாநிதி குருபரன் வழக்கை தள்ளுபடி செய்யுமாறு மன்றுக்கு எடுத்துரைத்தார். வாதங்களைக் கேட்ட யாழ்ப் பாண நீதிமன்ற நீதவான் ஏ.எஸ். பீற்றர்போல் இன்று புதன்கிழமை வரை வழக்கை ஒத்தி வைத்தார். (இ-10)

# ‘இன வன்முறை இனிமேல் வேண்டாம்’

# நீர்கொழும்பு வன்முறையாளர்கள் அனைவரையும் கைது செய்யுங்கள்

## அரசு தரப்பிடம் சம்பந்தன் வலியுறுத்து

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு வன்முறையாளர்கள் அனைவரும் கைது செய்யப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

மத வன்முறை, இன வன்முறை இந்நாட்டில் இனிமேல் வேண்டாம். இவை மீண்டும் நடைபெறாதவாறு அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

முப்படையினரும் பொலிஸாரும் பக்கச்சார்பின்றி தமது பணிகளைச் செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# தௌஹீத் அமைப்பினரின் விரிவுரைகள் அடங்கிய இறுவெட்டுகள் நேற்று மீட்பு

(நாவலப்பிட்டி)

தேசிய தௌஹீத்ஜமாத்அமைப்பினரின் விரிவுரைகள் அடங்கிய இறுவெட்டுகள் தொகையொன்று பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நாவலப்பிட்டி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போதே, இந்த இறுவெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் இவை நாவலப்பிட்டி பொலிஸாரிடம் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்தனர். (இ-7)

# பாடசாலைகளுக்கு அருகிலிருந்து பெருமளவு வெற்று ரவைகள் மீட்பு



(பண்டாரவளை)

பண்டாரவளை தமிழ், சிங்கள பாடசாலைகளுக்கு அருகில் பொலித்தீன் பை ஒன்றில் சுற்றப்பட்ட நிலையில் வெற்று ரவைகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

பண்டாரவளை தமிழ் மற்றும் சிங்கள பாடசாலைகளுக்கு அருகில் பாடசாலை மாணவர்கள் பயணிக்கும் வாகனங்கள் நிறுத்துமிடத்திற்குப் பின்புறத்தில் பொலித்தீன் பையில் சுற்றப்பட்ட நிலையில் 15 வெற்று ரவைகளை பண்டாரவளைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த ரவைகள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# குற்றப் புலனாய்வு அதிகாரிகளிடம் உயிர்ப்பிச்சை கேட்டு கதறிய மதூஷ்



(கொழும்பு)

தனக்கு உயிர்ப்பிச்சை கொடுக்குமாறு பிரபல போதைப்பொருள் கடத்தல் மன்னன் மாகந்துரே மதூஷ் கண்ணீருடன் கோரிக்கை விடுத்துள்ளான்.

டுபாயில் கைது செய்யப்பட்டிருந்த மதூஷ் கடந்த 5 ஆம் திகதி நாடு கடத்தப்பட்ட நிலையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டான். குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட போது, மதூஷ் பெரும் அச்ச நிலையில் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவனிடம் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்போது தான் செய்த குற்றங்கள், சர்வதேச தொடர்பு மற்றும் ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கும் இடங்கள் உட்பட அனைத்தையும் வெளிப்படுத்துவதாக மதூஷ் தெரிவித்துள்ளான். எனினும் தன்னை உயிருடன் விடுமாறு, கண்ணீருடன் கோரிக்கை விடுத்துள்ளதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாதாள உலகக் குழுவின் முக்கிய தலைவனாகவும் போதைப் பொருள் கடத்தலில் பிரபலமானவனாக மாகந்துரே மதூஷ் காணப்படுகின்றான். இலங்கையில் பல கொலைகளை செய்தான் என்றும் மதூஷ் மீது குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இலங்கையில் போதைப்பொருள் ஆபத்தான பொருளாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள. நிலையில் மதூஷிற்கு மரண தண்டனை விதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை மதூஷிற்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களிலிருந்து விசாரணை அறிக்கைகள் பெறப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதுவரை மாகந்துரே மதூஷிற்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில், பாரிய அளவிலான 20 சம்பவங்கள் தொடர்பிலே முதற்கட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கொள்ளை, போதைப் பொருள் வர்த்தகம், கொலை மற்றும் அதற்கு உதவி புரிந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் டுபாயிலிருந்து நாடு கடத்தப்பட்ட 31 பேர் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட 7 பேரடங்கிய குழு விரைவில் ஒன்று கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பயங்கரவாதத்தை முற்றாக ஒழிக்க சர்வதேச ஒத்துழைப்பு அவசியம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



**(கொழும்பு)**

**நாட்டில் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்படவில்லை. அதனை முற்றாக அழிப்பதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பு அவசியமாகும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு குறித்து நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "பாடசாலைகள், மத ஸ்தலங்களில் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம்.

எவ்வாறாயினும், இந்தப்பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்படவில்லை. இது சர்வதேச பயங்கரவாதமாகும். இதனை தோற்கடிக்க சர்வதேசத்தின் ஒத்துழைப்புக்கள் அவசியமாகும்.

புலிகளைத் தோற்கடிக்க சர்தேச புனாய்வுப் பிரிவின் ஒத்துழைப்புக்கள் பெறப்பட்டன. சர்வதேசத்தின் ஒத்துழைப்பு என்றால் சர்வதேச இராணுவத்தை இலங்கைக்குள் அனுமதிப்பது என சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார் (இ-7)


பழைமை வாய்ந்த

**ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்**



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

றொங்கசாமி

கண்டி, அம்பத்தன்ன -077 939 5222

Viber:076 466 4153.

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்



**சமூக சேவைகள் திணைக்களம்**
**வடமாகாணம்**
**பெறுகைகளுக்கான அழைப்பு**

**கைதடி அரச முதியோர் இலத்திற்கான புதிய உலர் உணவு, மரக்கறிகளும் பழங்களும் மாமிச உணவு, பொதியிடப்பட்ட உணவுப் பொருட்கள், வெதுப்பக உணவு, பால் மற்றும் தொற்று நீக்கி பொருட்கள் விநியோகம்-2019/20**

1. வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த புதிய உலர் உணவு, மரக்கறிகளும் பழங்களும் மாமிச உணவு, பொதியிடப்பட்ட உணவுப் பொருட்கள், வெதுப்பக உணவு, பால் மற்றும் தொற்று நீக்கிப் பொருட்கள் விநியோகத்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.
2. விலைக்கேள்விதாரர் உலர் உணவு விநியோகம் தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒரு நபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
3. யாழ்ப்பாண மாவட்டத்தில் தலைமை அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. விலைமனுதாரர் கேள்வி கோரப்படும் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனங்களுக்கான உணவு வழங்கல் சேவையில் மூன்று (03) வருடத்திற்கு குறையாத முன் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. பொருத்தமான கேள்வி வைப்புப்பணம் செலுத்தப்பட்டமை பெறுகைகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
6. கேள்வி சமர்ப்பிப்பில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர் இத் திணைக்களத்தில் கிடைக்கும் "Application for Bid Documents" என்ற படிவத்தினை பூர்த்தி செய்து பெறுகைக்கு மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 3000 காசாக செலுத்தி தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 09.05.2019 தொடக்கம் 29.05.2019 வரையான காலப்பகுதியில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். மேலும் 24.05.2019 காலை 10 மணிக்கு திணைக்களத்தில் இடம்பெறும் விலைக்கேள்விகள் தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டத்திலும் கலந்து கொள்ளலாம்.
7. **"Diet Supply-2019/20, Elderss Home Kaithady, Reference No NP/24/2/Food/2019-20"** என்ற விபரம் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத விபரம் குறிக்கப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.
8. விலைக்கேள்விகள் 31.05.2019 ஆம் திகதி 14.00 மணிக்கு முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாக இத் திணைக்கள பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் இடுவதன் மூலம் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ் விலைக் கேள்விகள் 31.05.2019 ஆம் திகதி 14.00 மணிக்கு திறக்கப்படும்.

திணைக்கள பெறுகைகள் குழு,
சமூக சேவைகள் திணைக்களம்
வ.மா. கண்டி வீதி, கைதடி.

(C-6318)

வனஜா செல்வரட்ணம்
தலைவர்.



**கல்யாணமாலை**
**சர்வதேச திருமண சேவை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1970 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 3
கி.பா: 39 ¾செவ் 4 இல்
தகைமை/தொழில்: B.Cs, London
எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு
தொ.இ: B/9647

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 3
கி.பா: 79
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L,அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: B/9648

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அத்தம் 1
கி.பா: 21
உயரம்: 178cm
தகைமை/தொழில்: A/L, அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரசதொழில்
தொ.இ: B/9649

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: O/L, கமம்
மணமகன் திருமணமாகி பிரிந்தவர்
தொ.இ: B/9650

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 9 ¾ சூரிசெவ் 9 இல்
தகைமை/தொழில்:A/L,தனியார்தொழில்
எதிர்பார்ப்பு: Engineer, Accountant. உள்நாடு,வெளிநாடு
தொ.இ: G/4345

பிறப்பு: 1972 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 3 உயரம்:5'
தகைமை/தொழில்:A/L, முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது அசைவமும் ஏற்கப்படும்
தொ.இ: G/4347

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: ரோகினி 1
கி.பா: 69 ¼ சூரிசெவ் 8இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BA பட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரசதொழில்
தொ.இ: G/4368

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மூலம் 3
கி.பா: 15 ¾ உயரம்: 5'4"
தகைமை/தொழில்:B.Sc, M.Sc, M.Phill Following, அரச உத்தியோகம்
எதிர்பார்ப்பு:B.Sc பட்டதாரி,சைவபோசனம். அசைவமும் ஏற்கப்படும்
தொ.இ: G/ 4369

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## இயற்கை மூலிகைகளும் மூலிகைச் சாயப் பொடியும் முடிச்சாயத் தைலமும்

## (Natural herbal hair dyes and hair dye oils)



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

இயற்கை மூலிகைகள் உண வுகளாகவும், மருந்துப் பொருட்களாகவும் பயன் படுத்தப்படுகின்றன. அந்த வகையில் இன்றைய கால கட்டத்தில் அழகுக் கலைக் காகவும் ஆரோக்கியத்திற் காகவும் தற்போதைய கால கட்டத்தில் சோப், பவுடர், கிறீம்கள், Baby Spray, உதட்டுசாயம், கண்மை, தலைப்பூச்சு போன்ற





ஒப்பனைப் பொருட்கள் மக்கள் மத்தியில் பிரபல் யூமான அதிகபடியான பாவனைக்குள்ளாகின்றன. அதேவேளை இவ்வகையான செயற்கைப் பொருள் சேர்க்கப்பட்ட ஒப்பனை பொருட்களால் ஆரோக்கியத்திற்கு உபத்திரங்கள் ஏற்படுகின்றன. அவை தோல் நோய், ஒவ்வாமை, ஆஸ்மா என்பவும் ஏற்படுகின்றது. இரசாயனப் பொருட்கள் கலந்துள்ளதால் மக்கள் பலருக்கு ஒத்துக் கொள்வதில்லை. இதனாலே மக்கள் இயற்கை மூலிகையின் பக்கம் திரும்பியுள்ளனர். காரணம் இயற்கையிலிருந்து கிடைக்கும் மூலிகைக்கு எதுவித பக்க விளைவுகளும் அற்றது.

எமது முன்னோர்கள் கூந்தற்தைலம், கண்மை, பற் பொடி, நகப்பூச்சு போன்றவற்றை மூலிகைகளிலிருந்து தயாரித்து பயன் படுத்தினர். குளிப்பதற்கு மூலிகை குளியல் பொடி இயற்கை வாசம் நிறைந்த நீர், மூலிகை பொட்டு, மூலிகை சிகைக்காய் என்பவற்றை பயன்படுத்தினர். இதனால் தான் அக் காலத்தவர்க்கு முகப்பரு, வழுக்கை தலை, ஒவ்வாமை, புழுவெட்டு ஆகியவற்றின் பாதிப்பின்றி ஆரோக்கியமாகவும், ஆயுளுக்கு பாதிப்பின்றியும் நீண்ட ஆயுள், நீண்ட முடியையும் பெற்று வந்துள்ளனர். ஆகவே இவற்றை கவனத்திற்கொண்டு எவ்வாறு சாயப் பொடியும், சாயத் தைலமும் தயாரிக்கலாம் எனப் பார்ப்போம்.

நாம் வாழும் சீதோஸ்ண நிலை மைக்கு ஏற்ப எண்ணெய்க் குளியல், தலைக்கு எண்ணெய் தடவுதல் அவசியமாகிறது. அதுபோன்று மூலிகை சாயம் பொடியை பயன்படுத்தும் போது பொடுகு இல்லை என்பதை உறுதிப் படுத்த வேண்டும். செயற்கை சம்பூ பாவிப்பதையும் தவிர்க்க வேண்டும்.

பொடுகை நீக்க

சம்பூ பவுடர்

பொடுதலை-100கிராம், சிகைக் காய்-100 கிராம், வெந்தயம் - 50 கிராம், நிழலில் உலர்த்திய செவ்வரத்தம் பூ-50 கிராம், உலர்ந்த புனலைப்பழம்/ பூவந்திக் கொட்டை - 50கிராம் மேற்கூறிய எல்லாவற்றையும் நிழலில் உலர்த்தி பத்திரப் படுத்தி வைக்கவும். தேவையான போது பொடியை எடுத்து இளஞ்சூட்டு நீரில் கரை த்து தலைக்கு தேய்த்து 10 நிமிடம் ஊறவிட்டு கழுவவும்.

பொடுதலை இடித்த சாறு - 200 மில்லிலீற்றர், நல்ல எண்ணெய் - 200 மில்லிலீற்றர் இரண்டையும் கலந்து காய்ச்சி வடிகட்டி பூசிவர பொடுகு நீங்கும்.

கொஞ்சம் யூகலிப்டஸ் தைலத்தை சூடாக்கி பொடு தலையில் அடிமயிரில் படும்படி தேய்த்து துவாயினை சுடுநீரில் படும்படி தோய்த்து பிழிந்து தலையில் கட்டி விடவும். அப்படி சில நாட்கள் செய்ய பொடுகு மறையும்.

இயற்கை முடிச்சாயப் பொடி

(Natural herbal hair dye)

வெள்ளை கரிசலாங்கண்ணி- 100 கிராம், மருதாணி இலை - 100 கிராம், கறிவேப்பிலை - 100 கிராம் இம் மூன்றையும் நிழலில் உலர்த்தி மென்மையாகப் பொடி செய்து இப் பொடியை தலையில் எண்ணெய்த் தன்மை இல்லாத போது தேயிலைச் சாயத்துடன்/ வெந்நீரில் கலந்து ஊறவைத்து ஒரு பிரஷ்ஷினால் அடி மயிரில் படும் படியாகப் பூசி 1/2 - 1 மணித்தியாலம் வரை ஊற வைத்துத் தலை முழுகிவர முடிகருமையாகும் இது இரசாயனக் கலப்பற்ற இயற்கையானதாகக் காணப்படுவதால் வாரத்திற்கு ஒரு முறை பயன்படுத்தலாம்.

முடிச்சாயத்தைலம்

தே.பொட்கள்:- தேங்காய் எண்ணெய்-1 லீற்றர், மஞ்சள் கரிசாலை, நொச்சி தளிர், கறிவேப்பிலை - 150 கிராம், ஆமணக்கம் இலை- 5 கொழுந்திலை,கற்றாழை- 2 மடல், செம்பருத்தியிலை- 4கைப்பிடி, முருங்கைக் கீரை-150 கிராம், செவ்வரத்தம் பூ-5, எலுமிச்சைப்பழம் - 2, சி. வெங்காயம் - 10, சுரைக்காய் -1, நெல்லிக்காய் - 10, கசகசா - 6 தேக்கரண்டி, பாதாம் பருப்பு- 10கிராம், வேப்பிலை, அவுரியிலை - 150 கிராம், மருக்கொழுந்து உலர்ந்தது-25 கிராம், கருவேலன் பட்டை- 25 கிராம். 1 லீற்றர் தேங்காய் எண்ணெயில் 300 மில்லிலீற்றர் எண்ணெயினை வாணலியில் ஊற்றி கருவேலம்பட்டை 1 நாள் ஊறவிட எண்ணெய் சிவக்கும். மேற்படி இலைகளை தனித்தனியாக கொய் தெடுத்து விதை நீக்கிய நெல்லிக்காயை சேர்த்து பழச்சாறு விட்டு விழுதாக அரைத்து 6 தேக்கரண்டி கசகசாவையும் பாதாம் பருப்பையும் சேர்த்து 12 மணிநேரம் நீரில் ஊற விட்டு அரைத்து பசையாக்கவும். மருக்கொழுந்தையும் பொடித்து வைக்கவும். மீதமுள்ள தேங்காய் எண்ணெய் 750 மில்லிலீற்றர் இல் 200 மில்லிலீற்றர் தேங்காய்ப்பால், 200 மில்லிலீற்றர் சுரைக்காய் சாறு என்பனவிட்டு சிறு தீயாக எரித்து அடுப்பேற்றி இலைகளின் விழுதையும், மருக்கொழுந்து பொடியையும் சேர்த்து காய்ச்சி கருமையாக வரும் போது தைலபாகத்தில் இறக்கி சிவப்பாக வந்த கருவேலம்பட்டையூறிய தைலத்தையும் சேர்த்து வடித்து வைத்து தலைக்கு வைக்க பயன் படுத்தவும்.


முடிசாயத்தைலம் - 2

மருதோன்றியிலை - 100 கிராம், கறிவேப்பிலை -100 கிராம், மஞ்சள் கரிசாலை -100 கிராம் இவற்றை நிழலில் உலர்த்தி தனித் தனியான பொடித்து வைத்துக் கொண்டு 300 மில்லிலீற்றர் நல்லெண்ணெயில் கலந்து புது வானலியில் விட்டு 21 நாட்கள் வெயிலில் வைத்து (காயவிடவும்) பின் வடித்து காற்றுப் புகாத போத் தலில் பத்திரப்படுத்தி வைத்து கொள்ளவும். இதனை தலைக்கு வைத்துவர தலை முடி கருமையாக வளரும்.

செம்பட்டை மறைய

நிலாவரை இலையையும், மருதாணி இலையையும் பச்சையாக ஒவ்வொரு கைப்பிடி அளவு எடு த்து அடி மயிரில் பூசி, ஒரு மணிநேரம் ஊறிய பின் தலை முழுகி வர செம் பட்டை மறையும்.

எலுமிச்சங்காயளவு கறிவேப்பிலையை விழுதாக அரைத்து தே.எண்ணெய் 200 மில்லிலீற்றர் இல் காய்ச்சி வடிகட்டி செம்பட்டைக்குத் தடவவும்.



ஒலிவ் எண்ணையை செம்பட்டையில் தேய்த்து வர செம்பட்டை நீங்குவதுடன் முடிவரட்சி நீங்கும்.

மகிழம் பூ விதையையும் வெந் தயத்தையும் தேங்காய் எண்ணொயில் ஊறவைத்து ஊறியவற்றை எடுத்து போட்டு விட்டு எண்ணெயை மட்டும் பூசிவர குணமாகும்.

மருதாணி இலைச்சாறு - 100 மில்லிலீற்றர், நெல்லிக்காய்சாறு - 100 மில்லிலீற்றர், தே.எண்ணெய் - 250 மில்லிலீற்றர் இவைகளை ஒன்றாகக் கலந்து காய்ச்சி சாறு வற்றியதும் இறக்கி தினமும் தலையில் பூசிவர செம்படை மறையும்.

இளநரை நீங்க

வெள்ளை கரிசாலை - 100 கிராம், கொட்டை கரந்தை இலை - 100 கிராம் இவற்றை நன்றாக உலர்த்தி பொடி செய்து காலை, மாலை தேனில் குழைத்து 48 நாட்கள் உண்டுவர முடி கருமையாகும்.

வெள்ளை கரிசாலை சாற்றையும், கடுக்காய் ஊறிய நீரை யும் சம அளவு கலந்து தலை யில் தேய்த்து சிறிது நேரம் ஊறிய பின் தலை முழுகி வர முடி கருமை பெறும்.

அதிமதுரம், பசுப்பால், நெல் லிக்கனி இவை மூன்றையும் சம அளவு கலந்து குடிநீராக்கி வடித்து அந்தக் குடிநீரை தேங் காய் எண்ணெய் கலந்து நரைக்கு பூச கருமையாகும்.

நெல்லிக்காய் சாற்றுடன் சம அளவு நல்லெண்ணெய் கலந்து காய்ச்சி இளநரைக்கு தேய்த்து வர குணம் கிடைக்கும்.

பொன்னாங்காணிச்சாறு -250மில்லிலீற்றர், கரிசாலை சாறு - 250 மில்லிலீற்றர், பசுப்பால் - 250 மில்லிலீற்றர், தேங்காய் எண்ணெய் -1 லீற்றர், கடுக்காய்-25 கிராம், நெல்லிக்காய் - 25 கிராம் இவைகளை ஒன்றாகக் கலந்து காய்ச்சி தேய்த்து வரை நரை மாறும்.

மொசுமொசுக்கை இலைச்சாறு- 250 மில்லிலீற்றர், ந.எண்ணெய் - 250 மில்லிலீற்றர் இரண்டையும் ஒன்றாகக் கலந்து காய்ச்சி நீர் வற்றியதும் இறக்கி வாரத்திற்கு 2 முறை எண்ணெய்க்குளியல் செய்துவர நரை மாறும்.

# ஐ.தே.கவிற்கு எதிராகவே பொலிஸார் செயற்படுகின்றனர்

## அமைச்சர் கிரியெல்ல குற்றச்சாட்டு



(கொழும்பு)

நீதி அனைவருக்கும் பொதுவானது என்ற போதிலும், பொலிஸார் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு எதிராகவே செயற்பட்டு வருவதாக அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல குற்றம்சாட்டியுள்ளார்.

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு குறித்து நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வா ய்க்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் பங் கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "ஜனாதிபதிக்கு எதிராக இனமுறுகலை தோற்றுவிக்கக்கூடிய வகையிலான கடிதங்கள் வெளியிடப்பட்ட விவகாரம் தொடர்பாக எனது அமைச்சின் ஊடகத்தில் பணியாற்றுபவர்களுக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த விடயத்தில் காண்பிக்கும் அக்கறையை, கடந்த ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி புலனாய்வுத் தகவல் வெளியானவுடன் மேற் கொண்டிருந்தால் 300 உயிர்களை இழந்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது.

நீதி அனைத்து தரப்பினருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு எதிராகத்தான் பொலிஸார் செயற்படுகிறார்கள்.

பியல் நிசாந்த, 11 இராணுவத்தை கொலை செய்ததாகக் கூறியுள்ளார். இது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லையா? அவரை ஏன் இதுவரை கைது செய்யவில்லை. அவர் எப்படி நாடாளுமன்றுக்கு வரலாம்" எனக் கேள்வி எழுப்பினார். (இ-7)

# விபத்தில் 10 வயதுச் சிறுவன் பலி!

(செவனகம)

ஹபரணை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 10 வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளான். இந்த விபத்து நேற்று முன்தினம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹபரணை திருகோணமலை பிரதான வீதியில் செவனகம சந்தியில் திருகோணமலை நோக்கிச் சென்ற கப் ரக வாகனம் வீதியை கடக்க முற்பட்ட போது சிறுவன் மீது மோதியதில் பலத்த காயங்களுக்குள்ளான சிறுவன் ஹபரணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தான்.

கப் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# மாணிக்கக்கல் அகழ்வு குழியில் வீழ்ந்தவர் பலி

(இரத்தினபுரி)

இரத்தினபுரி - நிவித்திகலை பிரதேசத்தில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நபரொருவர் அக்குழியில் விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நிவித்திகலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தொலஸ்வலை பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நபரொருவர் அந்தக் குழியில் வீழ்ந்து கவலைக்கிடமான நிலையில் வத்துப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய துமிந்த மலவிசூரிய என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் அனுமதியுடனே மாணிக்கக்கல் அகழ்வுகளில் ஈடுபட்டுள்ளனர் என ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் நிரந்தர நீர்க்கொடுப்பனவு 100 ரூபா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் குழாய் மூலம் விநியோகிக்கப்படும் நீருக்கான நிரந்தரக் கொடுப்பனவுக் கட்டணம் நூறு ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற யாழ். மாநகர சபை அமர்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் ஜேசீலனால் கொண்டு வரப்பட்ட தீர் மானத்திற்கு சபை அங்கீகாரம் அளித்தது. யாழ்மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் விநியோகிக்கப்படும் குழாய் நீருக்கான கட்டணம் 200 ரூபாவாகக் காணப்பட்ட நிலையில் அடுத்த மாதம் தொடக்கம் நூறு ரூபாவாகக் குறைக்கப்பட வுள்ளது.

இத் தீர்மானம் தொடர்பில் அந்த உறுப்பினர் தெரிவிக்கும் போது யாழ்ப்பாணத்தில் நீருக்கான தேவை தற்போது அதிகரித்துள்ளது.

அதனடிப்படையில் நீரின் தேவை சுவடியவர்களுக்கு சாதகமாக காணப்படினும் மட்டுப்படுத்தப்பட்ட நீர் பயன்பாட்டில் உள்ளவர்களுக்கு மாநகர சபையால் நிர்மாணிக்கப்பட்ட அடிப்படை நிரந்தரக் கட்டணம் அதிகமாகக் காணப்பட்டமையால் இத்தீர்மானத்தை கொண்டு வரநேரிட்டதாகத் தெரிவித்தார். (இ-10)

# சுவிஸ் சிறைச்சாலையில் இலங்கையர் உயிரிழப்பு!

(லூசெர்ன்)

சுவிஸ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

42 வயது இலங்கையர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக சுவிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அபராதம் செலுத்த பணம் இல்லாத நிலையில் கடந்த இரண்டு நாட்களாக லூசெர்ன் நகரில் அமைந்துள்ள தடுப்பு காவல் மையத்தில் சிறைவைக்கப்பட்டிருந்த இலங்கையரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

திடீர் உடல் நலக்குறைவு காரணமாகவே குறித்த இலங்கையர் உயிரிழந்துள்ளதாக சுவிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந் நிலையில் அவரது மரணத்திற்கான சரியான காரணத்தினை கண்டறியும் நோக்கில் பிரேத பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, சுவிஸ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையர் செய்த குற்றம், அவரது பெயர் உள்ளிட்ட எந்த தகவலையும் சிறை நிர்வாகம் வெளியிட மறுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாடசாலைகளில் விளையாட்டு பயிற்சிகளை தற்காலிகமாக ஒத்திவைக்க அரசு தீர்மானம்

(கொழும்பு)

பாடசாலை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் விடயங்களுக்கு அப்பாலான செயற்பாடுகள் மற்றும் பாடசாலை நேரத்துக்கு பின்னர் இடம்பெறும் விளையாட்டு பயிற்சியை தற்காலிகமாக நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஆரம்ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய பாதுகாப்பு நிலைமையை கவனத்தில் கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

பாடசாலைகளில் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது. பாடசாலை வளவுக்குள் எந்தவித பாதுகாப்பற்ற நிலையும் இல்லை. மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். பாடசாலைகளில் பாதுகாப்பு தொடர்பில் கல்வி அமைச்சில் மட்டுமல்லாது பாதுகாப்பு பிரிவினரின் உறுதிமொழிக்கு அமைவாகவுமே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்படி சகல தரப்பினரதும் உடன்பாட்டுக்கு அமைவாகவே நாம் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோம். மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அவற்றை முழுமைப்படுத்த வேண்டும். அதன் பின்னர் விளையாட்டு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# புகையிரத திணைக்கள நிலங்களின் குத்தகையை சேகரிக்க நடவடிக்கை

## அமைச்சர் அர்ஜுன தெரிவிப்பு

(கொழும்பு)

புகையிரத திணைக்களத்துக்கு சொந்தமான நிலங்களை சட்டத்துக்குப் புறம்பாக மோசடி செய்வதனூடாக திணைக்களத்தின் வருமானம் பெரிதும் பாதிப்படைகின்றது என போக்குவரத்து சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எனவே புகையிரத திணைக்களத்தின் வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்காகவும் திணைக்களத்தின் வினைத்திறனான செயற்பாடுகளை அதிகரித்துக் கொள்ளும் நோக்கிலும் விரைவில் புகையிரத திணைக்களத்துக்கு சொந்தமான நிலங்களை குத்தகைக்கு விடுவதற்கும் குத்தகை வருமானத்தை சேகரிப்பதற்கும் தனியான இரு பிரிவுகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான மீளாய்வு குழு கூட்டம் நேற்று பத்தரமுல்லையில் அமைந்துள்ள காரியாலயத்தில் இடம்பெற்றது. இதன்போது, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புகையிரத திணைக்களத்துக்கு சொந்தமான நிலங்களை சட்டத்துக்கு புறம்பாக மோசடி செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும், அவர்களுக்கான அறிவித்தல்களை விடுப்பது தொடர்பில் புகையிரத திணைக்களத்துக்கு சொந்தமான நில அதிகாரிகள் கால தாமதத்தை ஏற்படுத்தி வருகின்றனர்.

புகையிரத திணைக்களத்துக்கு சொந்தமான இடம் என்பது திணைக்களத்தின் சொத்தாகும். இந்த இடங்களை முகாமைத்துவம் செய்வதனூடாக கிடைக்கும் வருமானத்தில் புகையிரத திணைக்களத்தின் முழுச்செயற்பாடுகளையும் முன்னெடுக்க முடியுமென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 60 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 70 | 70 | 120 |
| தக்காளி | 120 | 100 | 80 | 100 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 160 | 140 | 110 | 80 |
| கோவா | 80 | 80 | 60 | 60 | 80 |
| கரட் | 120 | 80 | 80 | 80 | 140 |
| பூசணி | 50 | 50 | 30 | 30 | 40 |
| புடோல் | 60 | 100 | 70 | 70 | 80 |
| வாழைக்காய் | 40 | 60 | 40 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 100 | 120 | 150 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 160 | 160 | 120 | 170 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 60 | 70 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 40 | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 70 | 70 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 70 | 80 |
| பீற்றூட் | 120 | 80 | 60 | 50 | 120 |
| கறிமிளகாய் | 100 | 70 | 80 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 180 | 200 | 100 | 70 | 120 |
| போஞ்சி | 180 | 300 | 120 | 300 | 300 |
| கத்தரித்தம்பாள | 60 | 70 | -- | 40 | 80 |
| கீரை -1பிடி | 30 | 45 | 40 | 20 | 40 |
| தேசிக்காய் | 300 | 250 | 300 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 35 | 30 | 30-50 |
| இராசவள்ளி | 180 | 160 | — | 100 | 120 |
| வெங்காயப்பூ | 200 | 300 | — | 240 | — |
| முள்ளங்கி | 60 | 80 | 60 | 30 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 30 | 10 | 20 |
| ஈரப்பலா | — | — | — | 110 | — |

## முல்லைத்தீவு கடற்பரப்பில்

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 14 மீனவர்கள் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு செம்மலை மற்றும் நாயாறு கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 14 மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு செம்மலை கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு ஒரு படகில் 4 மீனவர்கள் வந்துள்ளனர். அவர்களை கடற்படையினர் சோதனை செய்த போது படகிலிருந்து சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படும் வலைகள் மற்றும் உபகரணங்கள் காணப்பட்டுள்ளன. அதனையடுத்து கடற்படையினர் மீனவர்களைக் கைது செய்து முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்தனர்.

குறித்த மீனவர்கள் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர் வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் முல்லைத்தீவு நாயாறு கடற்பரப்பில் 2 படகுகளில் வந்து சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 10 மீனவர்கள் நேற்றுக் காலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களின் படகை சோதனையிட்டபோது இவர்கள் சுருக்கு வலை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டமை தெரியவந்துள்ளது.

குறித்த மீனவர்கள் கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப் படவுள்ளனர். (9)

# இளம் தாய் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா ஆச்சிபுரம் முதலாம் ஒழுங்கை பகுதியிலிருந்து நேற்று அதிகாலை இரண்டு பிள்ளைகளின் தாயொருவரின் சடலத்தை வவுனியா பொலிஸார் மீட்டுள்ளனர்.

ஆச்சிபுரம் முதலாம் ஒழுங்கையில் குறித்த பெண் அவரது இரு பிள்ளைகளுடன் வசித்து வந்துள்ளார். வேலை நிமித்தம் புதுக்குடியிருப்புக்கு சென்றிருந்த அவரது கணவர் நேற்றைய தினம் வீடு திரும்பிய நிலையில் நேற்று அதிகாலை குறித்த பெண் வீட்டிற்கு முன்பாகவுள்ள மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார்.

மேலும். 10 மற்றும் 6 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயான 32 வயதுடைய சதீஸ்குமார் நவநீதமலர் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில். சம்பவ இடத்திற்கு சென்ற கிராம சேவையாளர். வவுனியா பொலிஸாருடன் இணைந்து தடயவியல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (9)

# கிளி.முட்கொம்பன் பகுதியில் உள்ள வீட்டில் பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

## வீட்டின் உரிமையாளர் பொலிஸாரால் கைது





(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முட்கொம்பன் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து ஆயுதங்கள்,வெடி பொருட்கள் என்பன மீட்கப்பட்டுள்ளதுடன் வீட்டின் உரிமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முட்கொம்பன் பகுதியில் நேற்றுக் காலை பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

அப்போது முட்கொம்பன் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் உள்ளூர் துப்பாக்கிகள், தோட்டாக்கள் மற்றும் வெடிபொருள் மருந்துகளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன் வாள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக வீட்டில் இருந்தவர்களை விசாரணைக்குட்படுத்திய பொலிஸார் வீட்டின் உரிமையாளரை கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுளளனர். (9)

# கிழக்கில் இருந்து வந்து வடக்கில் வசித்தவர் கைது

(குருமன்காடு)

வவுனியா பட்டானிச்சூர் பகுதியில் கிழக்கு மாகாணத்தினை சேர்ந்த நபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் நேற்று காலை வவுனியா பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.




வவுனியா பெரும் குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பட்டானிச்சூர் பகுதிக்கு சென்ற பொலிஸார் குறித்த நபரிடம் விசாரணை மேற்கொண்டனர். விசாரணைகளின் போது அவரது அடையாள அட்டையில் அவர் கிழக்கு மாகாணத்தினை சேர்ந்தவர் என்பது தெரிய வந்தது. குறித்த நபரை பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்து வவுனியா குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரிடம் கையளித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(9-250)

# வெற்றுச் செல்கள் மீட்பு



(மன்னார்)

மன்னார் எழுத்தூர் பெரிய கமம் பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட காணியில் இருந்து ஒரு தொகுதி வெற்றுச் செல்கள் மூடப்பட்ட நிலையில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதி மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் குறித்த பகுதியில் சோதனைகளை மேற்கொண்டனர்.

குறித்த காணியில் கொட்டப்பட்டிருந்த குப்பையுடன் சுமார் 6 வெற்றுச் செல்கள் மூடிய நிலையில் கண்டு பிடிக்கப்பட்டன.

பின்னர் இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படையினர் சம்பவ இடத்திற்கு வந்து குறித்த வெற்றுச் செல்களை திறந்து பார்த்து மீட்டுச் சென்றுள்ளனர். (9-285)

## வீடுகள், கட்டடங்களை வாடகைக்கு வழங்குவோர்

# அங்கு தங்கியிருப்போரின் விபரங்களை பொலிஸ், கிராமசேவகருக்கு அறிவிக்க வேண்டும்

## பொலிஸார் அறிவித்தல்

(வவுனியா)

வவுனியாவில் வாடகைக்கு வீடுகளில் தங்கியிருப்பவர்களின் விபரங்கள் பொலிஸ் நிலையத்திற்கு உடனடியாக வழங்கப்பட வேண்டும் என வவுனியா பொலிஸ் நிலையத்தின் மக்கள் தொடர்பாடல் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிராமத்திற்கு புதியவர்களின் வருகை தொடர்பாக நீங்கள் விழிப்புடன் செயற்படுவதுடன் உங்களது உறவினர்கள் வந்து உங்களது வீடுகளில் தங்கும் போது அவர்கள் தொடர்பான விபரங்களை பொலிஸ் நிலையங்கள் மற்றும் கிராம அலுவலகரிடம் வழங்கவேண்டும்.

உங்களுக்கு இரண்டு, மூன்று வீடுகள் இருக்கலாம் அவ்வீட்டை நீங்கள் வாடகைக்கு வழங்கும் போது அங்கு தங்கியிருப்பவர்களின் விபரங்கள் அனைத்தும் கிராம அலுவலகருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். உங்களிடமும் பதிவுகள் இருப்பதுடன் பொலிஸாருக்கும் அதன் விபரங்களை வழங்கவேண்டும்.

தற்போது எமது நாட்டில் அவசரகாலச்சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் கடமைகள் வழங்கப்பட்டுள்ளது. எங்கு சென்றும் சோதனை நடவடிக்கை மேற் கொள்வதற்கு அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. ஒரு நபரைக் கைது செய்வதற்கு அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

உங்களது கிராமத்திற்கு வரும் நபர்கள் தொடர்பாக நீங்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

புதியவர்களின் நடமாட்டம் இருந்தால் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்க வேண்டும். வவுனியா பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட பகுதியில் 23 கிராம சேவையாளர் பிரிவுகள் இருக்கின்றன.

இங்குள்ள பொதுமக்கள் நான் கூறியவற்றை பின்பற்றி நீங்கள் செயற்படுவீர்களாக இருந்தால் ஆபத்தான சம்பவங்கள் இடம் பெறுவதைத் தவிர்க்க முடியும் என மேலும் தெரிவித்தார். (9)

கிளிநொச்சியில்

# புனரமைக்கப்படவுள்ள பாரிய நீர்ப்பாசன குளங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஏழு பாரிய நீப்பாசனக் குளங்கள் உலக வங்கியினால் புனரமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதனால் அதற்கான மதிப்பீடுகள் செய்யப் பட்டுள்ளதாக மாவட்ட நீர்ப்பா சனத்திணைக்களத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக்குளம் உள்ளிட்ட பாரிய நீர்ப்பாசனக்குளங்கள் கடந்த யுத்த சூழ்நிலைகளால் முற்பது வருடங்களுக்கு மேலாக புனரமைப்புப் பணிகள் எதுவும் இன்றிக் காணப்பட்டன.

யுத்தத்தின் பின்னரான துரித அபிவிருத்தியின் கீழ் இரணை மடுக்குளம் பாரிய நிதியொதுக் கீட்டின் கீழ் புனரமைக்கப்பட்டு விவசாயிகளிடம் கையளிக்கப்பட் டுள்ளது.

இந்த நிலையில் இரணை மடுக்குளம் தவிர்ந்த ஏனைய குளங்கள் அபிவிருத்தி செய்யப் பட வேண்டியுள்ளது.

இவ்வாறு இந்தக்குளங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் விவசாயச் செய்கைகளை மேலும் அதிகரிக்கக் கூடியதாக இருக்கும்.

இதன் அடிப்படையில் கிளி நொச்சி மாவட்டத்தில் கல்மடுக் குளம் உள்ளிட்ட ஏழு குளங்கள் உலக வங்கியினால் புனரமைப் பதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களத் தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது.

இவ்வாறு அபிவிருத்தி செய் யப்படவுள்ள குளங்களுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் கல்மடுக் குளத்துக்கு 500 மில்லியன் ரூபாவும் அக்கராயன் குளத்து க்கு 450 மில்லியன் ரூபாவும் பிரமந்தனாறுக் குளத்துக்கு 80 மில்லியன் ரூபாவும் குடமுருட் டிக் குளத்திற்கு 115 மில்லியன் ரூபாவும் கரியாலை நாகபடு வான் குளத்துக்கு 320 மில்லி யன் ரூபாவும் வன்னேரிக் குளத் துக்கு 80 மில்லியன் ரூபாவும் கனகாம்பிகை குளத்துக்கு 75 மில்லியன் ரூபாவும் தேவை யென்று மதிப்பீடுகள் தயாரிக்கப் பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள் ளது என்றும் மேற்படி ஏழு குளங் களும் உலக வங்கியின் நிதியுத வியுடன் புனரமைப்பதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படு வதாக மேற்படி திணைக்களத்தி னால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9)

# சிறி சபாரத்தினத்தின் 33 ஆவது நினைவு நிகழ்வு



(மன்னார்)

தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ) தலைவர் சிறி சபாரத்தினம் மற்றும் உயிர் நீத்த போராளிகளின் 33 ஆவது நினைவு தினம் நேற்று முன் தினம் மாலை மன்னாரில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் மாவட்ட தலைமை அலுவலகத்தில் அமைப்பாளர் ஏ.ரி.மோகன்ராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உயிர் நீத்த போராளி களை நினைவுகூர்ந்து சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத் தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து டெலோ போராளிகளின் பிள் ளைகளுக்கு பாடசாலை புத்த கப்பை வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், டெலோ கட்சியின் முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கலந்து கொண்டிருந்தனர். (9-285)



# வெளிநாட்டு அகதிகளை குடியேற்றுவது தொடர்பில் தீர்மானம் எதையும் எடுக்கவில்லை

## மனித உரிமைகள் ஆணைக்குழு பிராந்திய இணைப்பாளர்

(வவுனியா)

வெளிநாட்டு அகதிகளை குடியேற்றுவது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தீர்மானம் எவையும் எடுக்கப் படவில்லை என வவுனியா மாவட்ட மனித உரிமைகள் குழு ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் எம்.ஆர். பிரிய தர்சன தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டு அகதிகளை குடியமர்த்துவது தொடர்பில் பிழையாக வெளிவந்த தகவலே நாங்கள் இந்த ஊடக சந்திப்பை மேற்கொள்ளக் காரணமாகும். இந்த விடயம் தொடர்பாக பல்வேறுபட்ட பகுதிகளில் இருந்து கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு ள்ளன.

குறிப்பாக சர்வதேச நிறு வனங்கள் மற்றும் தூதரகங்க ளில் இருந்து சில அதிகாரிகள் தொடர்பு கொண்டு இவ்வாறான தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளதா? என்று எங்களிடம் வினாவினார்கள். நாங்கள் அத ற்கு அவ்வாறான தீர்மானம் ஒன்று நிறைவேற்றவில்லை எனத் தெரிவித்தோம்.

ஆனால் சிவில் சமூகப் பிரதி நிதிகளுடன் இது தொடர்பான கலந்துரையாடலை மேற் கொண்ட போது இந்த விடயம் குறித்தும் கலந்துரையாடல் செய் யப்பட்டது. ஆனால் எந்தவிதமான தீர்மானங்களும் எடுக்கப்பட வில்லை.

ஏனெனில் நாங்கள் தேசிய மனித உரிமைகள் ஆணைக் குழு என்ற ரீதியில் பொறுப் புணர்வுடனும் சர்வதேச சட்டங்கள் மற்றும் மனித உரி மைகள் சாசனங்களை கவன மாகக் கையாள வேண்டிய தரப் பினராக இருக்கின்றபடியினால் இந்த விடயம் தொடர்பாக நாங்கள் தலைமை காரியாலயத் திற்கு அறிவித்துள்ளோம்.

இலங்கையானது சர்வதேச அகதிகள் சாசனத்தை ஏற்றுக் கொண்ட ஒரு நாடு அல்ல. இங்கு வருகை தந்திருக்கின்ற பாகிஸ் தான், ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் போன்ற நாடுகளில் இருந்து வந்திருப்பவர்களும் கிறிஸ்தவ மற்றும் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த அரசியல் ரீதியாக துன்புறுத்தல்களுக்கு ஆளாகி இலங்கையிலே பாது காப்பை கோரியிருப்பவர்க ளாகவேதான் அவர்கள் இருக்கி றார்கள்.

எவ்விதத்திலும் இலங்கை சர்வதேச அகதிகள் சாசனத்தை ஏற்றுக்கொள்ளப்படாததால் அவர்களுக்கு அகதி அந்தஸ்து இங்கே கிடைப்பதற்குரிய வாய்ப் புக்கள் இல்லை. அதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் காரியாலயம் ஒன்று இங்கே இருப்பதன் காரணமாக அவர்க ளுக்கு அகதி அந்தஸ்து ஒன் றினை மூன்றாம் தரப்பு நாட்டிடம் கோருவதற்குரிய விண்ணப் பத்தை ஐ.நாவினுடைய காரியா லயத்தில் கையளிக்க முடியும்.

அத்துடன் இவ்விண்ணப்பப் படிவங்களை ஐ.நா. அதிகாரிகள் பரிசீலித்து தீர்வு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்கள். அது வரைக்கும் பாதுகாப்பை மட்டும் இந்த நாட்டில் பெற்றுக் கொள் வதற்கு சர்வதேச சட்ட விதிக ளுக்கு அமைய தேசிய அரசாங் கம் என்ற வகையில் வழங்கு வதற்கு கடமைப்பட்டிருக்கிறோம்.

இதுதான் அவர்களது சட்ட அந்தஸ்தாகும். அவர்கள் எவ்விதத்திலும் நிலத்தைப் பெறு வதற்கோ, வேலைவாய்ப்பை பெறுவதற்கோ சட்ட ரீதியாக எதுவும் இல்லை. இது ஒரு வீணான ஒரு குழப்பம் என்பதை அவதானிக்கிறோம். சர்வதேச சட்டங்களுக்கும் சர்வதேச மனித உரிமைகள் சாசனங்களுக்கும் மதிப்புக்கொடுக்க வேண்டிய கடப்பாடு எங்களுக்கு இருக்கிறது என மேலும் தெரிவித்தார். (9)

# குடிநீர் தாங்கி அன்பளிப்பு



வடக்கு மாகாண சமாதான நீதவான்கள் சங்கத்தினால் கிளி நொச்சி செல்வா நகர் கிராம மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய் யும் வகையில் நீர்த்தா ங்கி ஒன்று புதிதாக அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புச் சம்ப வத்தில் கொல்லப்பட்ட அப்பாவி உயிர்களின் ஆத்ம சாந்திக்கான அஞ் சலி நிகழ்வை கிளிநொச் சியில் மேற்கொண்ட குறித்த சங்கத்தினர் அதன் பின்னர் புதிதாக அமைக்கப்பட்ட நீர்த் தாங்கியை கிராம மக்க ளிடம் கையளித்தனர். (9)

வவுனியாவில்

# மூன்று கல்வி நிலையங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன

(வவுனியா)

வவுனியா நகரசபைக்குட் பட்ட பகுதிகளில் இயங்கும் நூறிற்கு மேற்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் மூன்று நிலையங்கள் மட்டுமே பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்டு நகரசபைக்கு வருடா வருடம் தொழில் வரி செலுத்தி வரு வதாக நகர சபையினர் தெரிவிக் கின்றனர்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினூடாக நகர சபைக் குட்பட்ட பகுதிகளில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட நிலையங்க ளின் விபரங்களை கோரிய போதே மேற்கண்டவாறு நகர சபையினால் தகவல் வழங்கப் பட்டுள்ளது.

வவுனியா நகரில் தனியார் கல்வி நிலையங்கள் நூறுக்கு மேற்பட்டவை இயங்கி வரும் நிலையில் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்டு நகரசபைக்கு தொழில் வரி செலுத்திவரும் தனியார் கல்வி நிலையங்களாக மூன்று நிலையங்கள் மட்டுமே பெயர் குறிப்பிட்டு அறிவிக் கப்பட்டுள்ளது.

நகரில் இயங்கும் பல தனி யார் கல்வி நிலையங்களை அரச சேவையிலுள்ள ஆசிரியர் களே இயக்குநர்களாக வழி நடத்தி வருகின்ற நிலையில் அரச சட்டங்களை நடைமுறை ப்படுத்தி பிரதேச செயலகம், நகர சபையின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக செயற்பட தவறியுள்ளதையே இவ்விடயம் எடுத்துக்காட்டி நிற்கின் றது. (9)

# வட்டாரத்தின் தேவைகளை முதன்மை அடிப்படையில் தெரிவு செய்ய வாக்கெடுப்பு

## வவு.தெற்கு பிரதேச சபையில் முன்னெடுப்பு

வவுனியா தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட 13 வட்டாரங் களிலும் முன்னுரிமை அடிப் படையில் அடையாளங்காணப் பட்ட தேவைகளை வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யும் கூட்டம் வவுனியா தெற்கு பிரதேச சபை தவிசாளர் து.நடராஜசிங்கம் தலைமையில் நேற்று காலை இடம் பெற்றது.

வட்டார அடிப்படையில் பொது மக்களினால் அடையாளம் காண ப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்வதற்காக முதன்மை அடிப்ப டையில் வட்டாரங்கள் தெரிவு செய்யும் கூட்டத்தில் பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை அதிகாரிகள், உத்தியோகத் தர்கள், ஊழியர்கள், பிரதேச சபைக்குட்பட்ட பொது அமைப் புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிரு ந்தனர்.

குறித்த கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வேலைத்திட்டங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன் முதன்மை வேலைத்திட்டத்தின் வாக்கெடுப்பு நடவடிக்கையும் இடம்பெற்றிருந்தது.


முதல் சுற்று வாக்கெடுப்பின் போது முதலாவது வேலைத் திட்டமாக சமயபுரம் - சுந்தரபுரம் பாடசாலை வீதி தார் இடல் - 6 கிலோமீற்றர் வேலைத் திட்டம் தெரிவு செய்யப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (9-250)



# பாரதம்

# பயங்கரவாதத்தை ஒழிக்க வியூகம் வகுக்கும் இந்தியா

## அதிநவீன செயற்கைக்கோள் தயாரிப்பு



(சென்னை)

இந்தியாவை முழுமையாகக் கண்காணிப்பதற்கும் எல்லை தாண்டி வரும் பயங்கரவாதிகளை உடனுக்குடன் கண்டுபிடிக்கும் வகையிலும் அதிநவீன ரேடார் செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தவுள்ளதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த செயற்கைக்கோள் எதிர்வரும் 22ஆம் திகதி ஸ்ரீ ஹரி கோட்டாவில் இருந்து விண்ணில் செலுத்தப்படவுள்ளது. ரிசாட்-2 பி.ஆர்.1 என பெயரிட்டுள்ள இந்த செயற்கைக்கோளில் அதிநவீன கருவிகள் பொருத்தப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி ஒரு நாளைக்கு ஒரே இடத்தை 3 தடவை ஒளிப்படம் எடுக்கும் ஆற்றல் கொண்ட கருவி பொருத்தப்பட்டுள்ளதுடன் எல்லை தாண்டி வரும் பயங்கரவாதிகள் மற்றும் கடல் வழியாக பயங்கரவாதிகள் உள்நுழைவதை தடுக்கவும் குறித்த செயற்கைக்கோள் உதவியாக இருக்கும் என விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை நிலவை ஆய்வு செய்வதற்காக சந்திராயன் 2 விண்கலத்தை ஏவுவதற்கு இஸ்ரோ விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# எரிபொருள்

# 58பேர் பரித

## நைஜீரியா விமா

(நியாமி)

**நைஜீரியா விமான நிலை யம் அருகே எரிபொரு தாங்கி வெடித்து சிதறிய தி 58 பேர் பரிதாபமாக உயி ழந்தனர்.**

ஆபிரிக்க நாடான நைஜீரியா தலைநகரம் நியாமில் சர் விமான நிலையம் அருகே நின்றிருந்த எரிபெ தாங்கியிலிருந்து பெற்றோல் கசிந்து வெளியே ஊ கொண்டிருந்தது. அதைப் பார்த்த மோட்டார் சைக்கிள் கா மற்றும் பொதுமக்கள் கீழே ஊற்றிக் கொண்டிருந்த பெற்றே பிடித்துக் கொண்டனர்.

அப்போது எரிபொருள் தாங்கி திடீரென வெடித்து தீப்பி இந்த விபத்தில் 58 பேர் உடல் கருகி அதே இட

## ஏழு பேர் விடுதலை விவகாரம்

# அமைச்சரவையின் தீர்மானத்திற்கு ஆளுநர் அங்கீகாரம் வழங்க வேண்டும்

## நளினி மனுத்தாக்கல்



(சென்னை)

7 பேர் விடுதலை விவகாரத்தில் அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அங்கீகாரம் வழங்க ஆளுநருக்கு உத்தரவிடக்கோரி நளினி சார்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த மனு சென்னை உயர்நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நளினி சார்பில் தாக்கல் செய்யப்பட்டது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையிலுள்ள நளினி உள்ளிட்ட 7 பேரை விடுதலை செய்ய தமிழக அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்திற்கு அங்கீகாரம் வழங்க ஆளுநருக்கு உத்தரவிடக்கோரியே குறித்த மனுவை அவர் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# மியன்மாரின் உள்நாட்டுப் பாது

## சிறையிலிருந்த இரு பத்திரி

(யாங்கூன்)

மியன்மார் இராணுவமும் ரோஹிஞ்யா கிளர்ச்சியாளர்களும் போரிடுவது தொடர்பான உள்நாட்டுப் பாதுகாப்பு இரகசியங்களை கசியவிட்டதாக 2 பத்திரிகையாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். இருவரையும் தற்போது மியன்மார் அரசு விடுவித்துள்ளது.

மியன்மாரின் ராக்கீன் மாகாணத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு ரோஹிஞ்யா முஸ்லிம்கள் இராணுவத்தின் அடக்குமுறைக்குள்ளாகி அகதிகளாக பங்களாதேஷில் தஞ்சமடைந்தனர். இதனால் சர்வதேச ஊடகங்கள் மியன்மாரில் இருந்து செய்தி சேகரித்து வந்தன.

இதற்கிடையே, சட்ட விதிமுறைகளை மீறி செய்தி சேகரித்து



அதை வெளிநாட்டுக்கு அனுப்பியதாக ரொய்ட்டர்ஸ் நிறுவனத்தில் பணியாற்றும் வா லோன், டியாவ் சோய் ஊ என்ற இரு

# 4500 ஆண்டுகள் பழைமையான கல்லறைத் தோட்டம் கண்டுபிடிப்பு



(கெய்ரோ)

எகிப்து நாட்டின் தலைநகர் கெய்ரோ அருகே சுமார் 4,500 ஆண்டுகள் பழைமையான கல்லறைத் தோட்டம் ஒன்றை தொல்லியல் துறையினர் கண்டு பிடித்தனர்.

எசிப்து நாட்டின் தலைநகர் கெய்ரோ அருகேடர்ளா கீசா பீட பூமியின் தெற்குப் பகுதியில் அந்நாட்டு தொல்லியல் துறையினர் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது, சுமார் 4,500 ஆண்டுகள் பழைமையான கல்லறைத் தோட்டம் ஒன்றை அவர்கள் கண்டு பிடித்தனர். இந்தக் கல்லறைத் தோட்டத்தில் அந்தக் கால மன்னராட்சியில் முக்கிய பொறுப்புகள் வகித்த பெனுய் கா மற்றும் நிவை ஆகிய இருவரின் கல்லறைகள் உட்பட பல்வேறு காலகட்டங்களில் உயிரிழந்தவர்களின் கல்லறைகளும் உள்ளதாக தொல்லியல்துறை ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

மேலும், இந்த பழைமையான கல்லறைத் தோட்டத்தில் அலங்கரிக்கப்பட்ட சவப்பெட்டிகள், சுண்ணாம்புக் கற்களால் செய்யப்பட்ட ஒரே குடும்பத்தின் சிலைகள் மற்றும் விலங்குகள் உருவம் ஆகியவை கண்டறியப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# அமெரிக்காவில் ஆ

# வேகத்தைக் கட்டுப்படுத்

## தேசிய பாதுகாப்பு ஆனை

(நியூயோர்க்)

போயிங்-737 விமானம் தரையிறங்கும் போது அதன் வேகத்தை கட்டுப்படுத்தும் கருவிகளில் ஒன்று வேலை செய்யாமல் போனதே விபத்துக்குக் காரணம் என

# வெளிநாடு

## ள் தாங்கி வெடித்ததில் ரிதாபமாக உயிரிழப்பு!

### மான நிலையம் அருகே சம்பவம்

நிலை
ாருள்
ய தில்
உயிரி

பாமில் சர்வதேச
, எரிபொருள்
ரியே ஊற்றிக்
க்கிள் சாரதிகள்
ந்த பெற்றோலை

த்து தீப்பிடித்தது.
அதே இடத்தில்



பலியாகினர். 37 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (7)

## காஸாவில் போர் நிறுத்தம் அமுல்

### ஹமாஸ் இயக்கம் அறிவிப்பு



(ரமல்லா)

காஸாவில் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்துவிட்டதாக ஹமாஸ் பயங்கரவாத இயக்கம் அறிவித்தது. இஸ்ரேல்-பாலஸ்தீனம் இடையே நீண்ட காலமாக எல்லை பிரச்சினை நீடித்து வருகிறது. இருநாடுகளின் எல்லையில் தொடர்ந்து மோதல் நடக்கிறது.

குறிப்பாக பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் உள்ள ஹமாஸ் பயங்கரவாத இயக்கம் இஸ்ரேல் மீது ரொக்கெட் குண்டுகளை வீசுவதும், அதற்கு பதிலடியாக இஸ்ரேல் இராணுவம் வான்தாக்குதல் நடத்துவதும் வாடிக்கையாக உள்ளது.

அந்த வகையில், கடந்த சனிக்கிழமை இஸ்ரேல் மீது ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டதை தொடர்ந்து, காஸாவில் பெரிய அளவிலான தாக்குதலை இஸ்ரேல் நடத்தியது. இந்த நிலையில் நேற்று அதிகாலை 4.30 மணி முதல் காஸாவில் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்துவிட்டதாக ஹமாஸ் பயங்கரவாத இயக்கம் அறிவித்தது. (7)

## ாதுகாப்பு இரகசியங்கள் கசிவு; திரிகையாளர்களும் விடுவிப்பு



பத்திரிகையாளர்களை யாங்கூன் பொலிஸார் கடந்த 2017ஆம் ஆண்டு டிசெம்பர் 15 ஆம் திகதி கைது செய்தனர்.


பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டதற்கு சர்வதேச அளவில் கடும் எதிர்ப்பு கிளம்பியது.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட 2 பத்திரிகையாளர்களை விடுதலை செய்ய வேண்டும் என ஓராண்டுக்கும் மேலாக மியன்மார் அரசுக்கு பல்வேறு நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தன.

இது பத்திரிகை சுதந்திரம் மீது நடத்தப்பட்ட தாக்குதல். எனவே நங்களது செய்தியாளர்களை மியன்மார் அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும் என ரொய்ட்டர்ஸ் நிறுவனமும் கோரியது.

இதையடுத்து கடந்த 2017 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட வா லோன், யாவ் சோய் ஊ ஆகியோரை மியன்மார் அரசு நேற்று விடுவித்துள்ளது. (7)

## வீட்டில் தயாரிக்கப்பட்ட விமானத்திற்கு பாகிஸ்தான் விமானப்படை அங்கீகாரம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் பாப்கார்ன் விற்பனை செய்யும் ஒருவர், வீட்டிலேயே விமானம் ஒன்றை தயாரித்துள்ளார். இந்த விமானத்திற்கு பாகிஸ்தான் விமானப்படை மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

பாகிஸ்தானில் தபூர் பகுதியில் வசிப்பவர் முகமது பயாஸ். இவர் கடந்த சில வருடங்களாக பாப்கார்ன் விற்று வியாபாரம் செய்து வருகிறார். சிறுவயது முதலே விமானப்படையில் இணைந்து பணியாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடனும் ஆர்வத்துடனும் இருந்துள்ளார்.

ஆனால் குடும்பத்தில் நிலவிய வறுமையின் காரணமாக படிப்பைத் தொடர முடியவில்லை. இவர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் இணையத்தள வசதி மூலம் காற்றின் அழுத்தம், வேகம் ஆகியவற்றை துல்லியமாக கற்றுக் கொண்டு விமானம் செய்வது தொடர்பான அத்தனை நுணுக்கங்களையும் தெரிந்து கொண்டுள்ளார்.

இதனையடுத்து பணி நேரம் போக, வீட்டில் இருக்கும்போது துரிதமாகச் செயற்பட்டு விமானம் ஒன்றை தயார் செய்துள்ளார். இவர் விமானம் உருவாக்கி வருகிறார் என்பதை அறிந்த பாகிஸ்தான் விமானப்படையினர் அடிக்கடி அவர் வசிக்கும் வீட்டிற்கு வந்து இது குறித்து விசாரித்து வந்துள்ளனர்.

மேலும் அவரது பணியினை கண்காணிப்பது மட்டுமின்றி விளக்கம் கேட்டும் வந்துள்ளனர். இந்த விமானத்தின் பணிகள் முடிவடைந்த நிலையில், விமானப்படையினர் அவரது திறமையை பாராட்டும் வகையில் சான்றிதழ் வழங்கி கௌரவித்துள்ளனர். (7)

## டுற்றுக்குள் விழுந்த விமானம்; த்தும் கருவி செயலிழந்ததே காரணம்

### ணையத்தின் விசாரணையில் தகவல்

ம்
ல்
ன

கண்டறியப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் குவாண்டனாமோ கடற்படை தளத்தில் இருந்து கடந்த 2 ஆம் திகதி போயிங்-737 ரக பயணிகள் விமானம் 143 பேருடன் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்துக்குச் சென்றது.

புளோரிடாவில் ஜேக்சன்வில்லே கடற்படை தளத்தில் தரை இறங்கியபோது ஓடுபாதையில் இருந்து சறுக்கிய விமானம் அருகில் உள்ள புனித ஜான்ஸ் ஆற்றில் விழுந்தது.

இதில் பயணிகள் அனைவரும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

எனினும் 21 பேருக்கு லேசான காயங்கள் ஏற்பட்டன.

எப்படி அந்த விமானம், ஓடுதளத்தில் இருந்து சறுக்கி ஆற்றில் விழுந்தது என்பது குறித்து அமெரிக்க தேசிய போக்குவரத்து பாதுகாப்பு ஆணையம் விசாரணை மேற்கொண்டது.

இதில், விமானம் தரையிறங்கும் போது அதன் வேகத்தை கட்டுப்படுத்தும் கருவிகளில் ஒன்று வேலை செய்யாமல் போனதே விபத்துக்குக் காரணம் என கண்டறியப்பட்டுள்ளது.

அந்த கருவி வேலை செய்யாததால் ஓடுதளத்தில் நிற்காமல் ஓடிய விமானம் ஆற்றுக்குள் விழுந்துவிட்டது என தேசிய போக்குவரத்து பாதுகாப்பு ஆணையத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர். (7)

# தீவிரவாதிகளுக்கு உதவிய நீதிபதி

## மேல் மாகாண ஆளுநரின் கருத்தால் சர்ச்சை



(கொழும்பு)

தடைசெய்யப்பட்ட தீவிரவாத அமைப்பான தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புடன் நீதிபதிக்கு தொடர்பு இருப்பதாக மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி தெரிவித்துள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பிரதேச சபை மற்றும் பொது மக்கள் எதிர்ப்புக்கு மத்தியில் குறித்த குழுவினரின் செயற்பாட்டு மையம் ஒன்றை உருவாக்க கிழக்கு மாகாணம், வாழைச்சேனை பகுதியைச் சேர்ந்த நீதிபதியொருவர் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டுள்ளதற்கான தகவல் மற்றும் ஆவணங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும்,

இது தொடர்பாக ஜனாதிபதியிடம் ஆவண மூலமான முறைப்பாடொன்றை வழங்கப் போவதாகவும் ஆளுநர் அசாத் சாலி ஊடகங்களுக்கு தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நீதிபதிகள் தவறிழைத்தால் முறைப்படி முறையிடவும்

## அசாத் சாலிக்கு தலதா இடித்துரைப்பு



(கொழும்பு)

நீதிபதிகளின் செயற்பாடு தவறாகக் காணப்பட்டால் அது குறித்து தம்மிடமும் பிரதம நீதியரசரிடமும் முறையிடுமாறு மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலியிடம் நீதியமைச்சர் தலதா அத்துகோரள கோரிக்கை விடுத்துள்ளார்.

அதனைவிடுத்து ஊடகங்களிடம் தெரிவித்துக்கொண்டிருக்க வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நீதிபதியொருவர் பயங்கரவாதிகளுக்கு உதவியுள்ளாரென அசாத்சாலி நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளியிட்ட கருத்திற்கு பதிலளித்துள்ள நீதியமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நீதிபதிகள் தவறிழைத்ததாக ஊடகங்களிடம் தெரிவிப்பது முறையற்ற செயற்பாடென தெரிவித்துள்ள நீதியமைச்சர், அது சகல நீதிபதிகளையும் பாதிக்குமெனவும் குறிப்பிட்ட நீதிபதிகளின் செயற்பாட்டில் திருப்தியில்லை என்றால் அதுகுறித்து உரிய முறையில் முறையிடுமாறும், குற்றங்கள் நிரூபணமாகும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஒருபோதும் பின்நிற்காதென்றும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை நீதிபதிகளின் சுயாதீனத்தன்மை, வெளிப்படை மற்றும் திறமையின் அடிப்படையில் உள்நாட்டில் மட்டுமன்றி உலகளவில் நன்மதிப்புக் காணப்படுவதாக தெரிவித்த நீதியமைச்சர், ஆளுநரின் விமர்சனம் கண்டனத்திற்குரியதெனவும்தெரிவித்துள்ளார்.(இ-7)

# போலியான பிரசாரங்களை புறந்தள்ளி பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பிய பெற்றோருக்கு கல்வியமைச்சர் நன்றி

(கொழும்பு)

குறுகிய அரசியல் நோக்கத்திற்காக செயற்படும் குழுக்களின் போலியானபிரசாரங்களை புறந்தள்ளி பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிய பெற்றோர்களுக்கு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் நன்றி தெரிவித்துள்ளார்.

அனைத்துப் பாடசாலைகளினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதாக பாதுகாப்புத் துறை அறிவித்ததன் பின்னர் நாடளாவிய ரீதியிலுள்ள பாடசாலைகள் அனைத்தும் நேற்று முன்தினம் இரண்டாம் தவணைக்காக ஆரம்பிக்கப்பட்டது.

இது தொடர்பில் கல்வி அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மாணவர்களின் வரவு குறைந்த மட்டத்தில் இருந்ததாகத் தெரிய வருகின்றது. கொழும்பு நகரப் பாடசாலைகளின் வரவு பெருமளவில் குறைந்திருந்த போதிலும் கிராமியப் பாடசாலைகளின் வரவு அதிகரித்திருந்ததாக கல்வி அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.



அத்துடன் இன்றைய அனைத்து பாடசாலைகளிலும் ஆசிரியர்களினதும் பாடசாலை ஊழியர்களினதும் வருகை உயர்ந்த மட்டத்தில் இருந்தமை விசேட அம்சமாகும் என மேலும் அவர் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நெஞ்சு வலி

ஒருவர் மிகவும் பயந்து போய் வந்து கொண்டிருந்தார். ஏன் சேர் இப்படி ஒரு மாதிரியாக வந்து கொண்டிருக்கின்றீர்கள்? என்று கேட்டார் இன்னொருவர்.

நெஞ்சு வலிக்கின்றது சேர்...அதுதான் பயமாக இருக்கின்றது என்றார் அவர்.

நெஞ்சு என்ற ஒன்று இருந்தால் வலி என்ற ஒன்று இருக்கத் தானே செய்யும்...என்று அலட்சியமாகக் கூறி விட்டுச் சென்றார் அவர்.

அந்தந்த வலி அவர்களுக்கு வந்தால் தான் தெரியும்! என்று நினைத்துக் கொண்டார் அவர்.

பொதுவாக நெஞ்சு வலி வந்தால் எல்லோருக்கும் பயமாகத் தான் இருக்கும்!

அந்தப் பயத்திற்கு என்ன காரணம் என்றால் அது மாரடைப்பாக இருக்கின்ற நினைப்புத்தான்.

ஒரு முக்கியமான விடயத்தை நாம் எல்லோரும் மனதில் வைத்திருக்க வேண்டும். நெஞ்சு வலி வந்தால் அதற்குக் காரணம் மாரடைப்பாகத்தான் இருக்க வேண்டும் என்கின்ற கட்டாயம் இல்லை! நெஞ்சுப்பகுதியில் வலி வந்தால் உடனே அது இதய வலி தான் என்று முடிவு செய்யக்கூடாது.

நம்முடைய நெஞ்சுக்குள் இருதயம் மட்டுமா இருக்கின்றது? நுரையீரலும் அங்கே தான் இருக்கின்றது. எலும்பு, தசைகள், விலா எலும்புகள், இரத்தக்குழாய்கள், கொஞ்சம் கீழே மண்ணீரல், கல்லீரல், இரப்பை, பித்தப்பை போன்றனவும் உள்ளன.

அங்கே எல்லாம் ஏதாவது நோய் வந்தால் கூட நெஞ்சுப் பகுதியில் வலி வரலாமே! அதனால் அவசப்பட்டு எதையாவது நினைத்துக் கொண்டு மனதை போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கக் கூடாது.

நுரையீரலில் உணர்ச்சி நரம்பு முடிச்சுக்கள் இல்லை. அதனால் அங்கே நோய் வந்தால் மட்டும் வலி தெரிவதில்லை. இருந்தால் கூட நுரையீரல் சவ்வுப் பகுதியில் அழற்சி ஏற்பட்டிருக்கும் என்று வைத்துக் கொள்ளுங்கள்... மூச்சை உள்ளே இழுக்கின்ற போது ஒவ்வொரு தடவையும் வலி ஏற்படும். ஏன் என்றால் அந்தப் பகுதியில் உணர்வு நரம்பு முடிச்சுகள் அதிகமாக இருக்கின்றன.

நெஞ்சு வலிக்கு பல காரணங்கள் இருக்கின்றன. நெஞ்சுப் பகுதியில் இருக்கின்ற தசையிலே அழற்சி உண்டானால் வலி ஏற்படலாம். மார்பு எலும்பின் தன்மையிலே ஏதாவது மாற்றம் உண்டானால் கூட இந்த வலி வரலாம்.

இதய தசையிலே ஏற்படுகின்ற மாற்றங்கள் கூட நெஞ்சு வலியை உண்டாக்கலாம்.

இப்படியெல்லாம் பல காரணங்கள் இருக்கின்ற போது நெஞ்சிலே வலி வந்தவுடனே Heart Attack தான் வந்து விட்டது என்று நினைத்து பயந்து விடக் கூடாது.

இதயத் தமனியிலே அடைப்பு ஏற்பட்டு, இரத்த ஓட்டம் தடைப்படுகின்றதனால் இதயத்தசை, ஒட்சிசனும் போதுமான இரத்தமும் இல்லாமலே அதிர்ச்சிக்கு உள்ளாகின்றது. அதுதான் Heart Attack நெஞ்சு வலி மாதிரியே இருக்கும். வலி அறிகுறிகள் உண்டு. இருந்தாலும் வலியினுடைய தன்மை நீண்டநேரம் இருக்கும். மணிக்கணக்கிலும் நாள் கணக்கிலும் நீடித்து இருக்கும். இரத்த அழுத்தம் முதலில் கொஞ்சம் அதிகமாக இருக்கும். பின் குறைய ஆரம்பிக்கும். உடல் முழுவதும் வியர்க்கும். படபடப்பு– அமைதியின்மை– தாங்க முடியாத வலி இதெல்லாம் அதற்கு அடையாளம். இதயத் துடிப்பு சீராக இருக்காது. துடிப்பின் அளவு குறையும். மூச்சை இழுத்து விடுவதில் சிரமம் இருக்கும்.

இதய நோய் வராமல் இருக்க வேண்டும் என்றால் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்கின்ற விபரம் எல்லாம் ஏற்கனவே சொல்லியிருக்கின்றோம். இன்றைக்குத் தகவல் என்னவென்றால் நெஞ்சில் வலி வந்தால் உடனே பயந்து போகக் கூடாது என்பது தான். ஏன் என்றால் பயமே பாதி வியாதிக்கு சமம்!

ஒருவருக்கு திடீர் என்று நெஞ்சு வலி வந்து விட்டது. பயந்து போய்விட்டார். வேறு யாரும் உள்ளே வரக் கூடாது என்றார்.


மற்றவர்கள் எல்லோரும் வெளியிலே உட்காந்திருந்தார்கள். சிறிது நேரம் ஆகி விட்டது. அவர் வெளியே வந்து ஒரு ஆணி இருந்தால் கொடுங்க என்று கேட்டார். அது எதற்கு என்று யோசித்தார்கள். இருந்தாலும் கொடுத்தார்கள்.

அதை வாங்கிக் கொண்டு கதவை மூடிக் கொண்டார். உள்ளே கடாமுடா என்று உள்ளே சத்தம். வெளியே உட்காந்திருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. 15 நிமிடம் கழித்து அப்பாடா வெற்றி, சக்ஸஸ்! என்று சொல்லிக்கொண்டே வெளியே வந்தார்.

என்ன நடந்தது என்று எல்லோரும் ஆர்வமாகக் கேட்டார்கள். நான் எடுத்துக் கொண்டு வந்த மருந்துப் பெட்டியை திறந்து விட்டேன்! இனிமேல் நான் வைத்தியத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றார் அவர்.

# நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த கடுமையாக செயலாற்றி வருகிறோம்

## வதந்திகளைப் பரப்பாதீர்கள் - பாதுகாப்புச் செயலர் கோரிக்கை



(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக கடுமையாக செயலாற்றிவருகின்றோம் ஆனால் சிலர் வதந்திகளைப் பரப்பி வருகின்றனர் என பாதுகாப்புச் செயலாளர் சாந்த கோட்டேகொட குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைமை குறித்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே சாந்த கோட்டேகொட மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

"தற்போது ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலையில், நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்த அனைத்து பாதுகாப்பு அதிகாரிகளும் பொறுப்புடன் செயலாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் சிலர் வெறும் வார்த்தைகளால், நாட்டில் பாதுகாப்பு இல்லையென வதந்திகளை பரப்பி மக்களிடத்தில் அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றனர்.

இத்தகைய செயற்பாட்டால் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்புவதற்குக்கூட பெற்றோர்கள் தயங்குகின்றனர்.

ஆகையால் நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து பொய்யான தகவல்களைப் பரப்புவதை யாராக இருப்பினும் உடனடியாக தவிர்த்துகொள்ள வேண்டும்" என மேலும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# நாலக டி சில்வா மீள மறியலில்

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வாவை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி வரையில் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கௌர்லைச் சதித் திட்டம் சம்பந்தமாக வெளியிடப்பட்ட ஒலிப்பதிவு சம்பவம் தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மதரஸா பாடசாலைகள் குறித்த அறிக்கை பிரதமரிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

மதரஸா பாடசாலைகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை குறித்த அறிக்கை ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மதரஸா பாடசாலைகள் தொடர்பாக பிற நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், மதரஸா பாடசாலைகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பான சட்டங்கள் சட்டமா அதிபரின் ஆலோசனைகளை பெற்றுக் கொண்டதன் பின்னர் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலைத் தொடர்ந்து இது குறித்து ஆராய்வதற்காக முஸ்லிம் விவகார அமைச்சர் எம்.எச்.ஏ.அப்துல் ஹலீமால் இக்குழு நியமிக்கப்பட்டது.

மதரஸா பாடசாலைகளில் இஸ்லாமிய அடைப்படைவாதம் கற்பிக்கப்படுவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்த நிலையிலேயே இது குறித்து ஆராய நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இரண்டு குழுக்களுக்கிடையே தலவாக்கலையில் மோதல்

(கொழும்பு)

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை நகர மத்தியில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இரண்டு குழுக்களுக்கு இடையே இடம் பெற்ற மோதலில் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானமையாலேயே இந்த மோதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

இச் சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏதும் ஏற்படாத போதிலும் ஒரு சிறிய விடயத்தை முன்வைத்து நகரத்தில் குழப்பத்தை ஏற்படுத்த முற்பட்டமை காரணமாக இவர்கள் அனைவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பேருந்தில் மர்மப்பொதி மீட்பு

## பொலிஸார் தீவிர விசாரணை

(கொழும்பு)

கொழும்பு- கோட்டை- ரெலிகொம் நிறுவனத்துக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பேருந்து ஒன்றில், பொதியொன்றை வைத்துச் சென்று மக்களை அச்சுறுத்த முயற்சி செய்த சம்பவமொன்று நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

குறித்த பேருந்தில் பொதியொன்று இருப்பதைக் கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில்; அங்கு விரைந்த பொலிஸார் அது குறித்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், குறித்த பொதியானது பொதுமக்களை பீதியடைச் செய்வதற்காக யாரேனும் வைத்துள்ளனரா? என்று ஆராய்ந்தனர்.

அத்துடன் அப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி கமரா காட்சி ஊடாக சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு, இதனை யார் செய்தார்கள் என்பது தொடர்பில் கண்டறியலாமென்றும்; மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்தனர்.

மேலும் குறித்த பேருந்தை வீதியில் நிறுத்தி சென்றமை குறித்து பேருந்தின் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)

# கிரிபத்கொடயில் விபத்து மூன்று கடைகள் தீக்கிரை

(கொழும்பு)

கிரிபத்கொட, ஈரியவடி பகுதியில் திடீரென ஏற்பட்ட தீயால் மூன்று கடைகள் முற்றாகத் தீக்கிரையாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. ஆனால் உயிர்ச்சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை. கம்பஹா தீயணைப்பு பிரிவின் அதிகாரிகள் மற்றும் அப்பிரதேச மக்கள் ஒன்றிணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

பிளாஸ்ரிக் பொருட்கள் விற்பனை நிலையத்திலேயே முதலில் தீ விபத்து ஏற்பட்டதாகவும் பின்னர் அருகிலிருந்த இரு கடைகளுக்கும் தீ பரவியதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் இன்னும் கண்டறியப்படாத நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-7)

# ஹற்றனில் இராணுவச் சீருடைகள் மீட்பு

(கொழும்பு)

ஹற்றன், டிக்கோயா பகுதியில் இராணுவ சீருடைகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹற்றன், டிக்கோயா நகர சபையால் குவிக்கப்பட்டிருந்த குப்பை கூழத்தில் இருந்தே இராணுவ சீருடைகளை நேற்று செவ்வாய்க்கிழமை காலை பொலிஸார் மீட்டுள்ளனர்.

ஹற்றன் டிக்கோயா நகர சபை கழிவு அகற்றும் ஊழியர்கள், ஹற்றன் பிரதான பேருந்து தரிப்பிடத்துக்கு அருகில் கொட்டப்பட்டிருந்த குப்பை கூழத்தினை சுத்தம் செய்துள்ளனர்.

இதன்போது இராணுவ தொப்பி மற்றும் காற்சட்டை ஆகியவற்றை கண்ட ஊழியர்கள், ஹற்றன் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.



குறித்த தகவலுக்கமைய அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் சீருடைகளை மீட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை ஆடையகங்களில் இராணுவ சீருடைகளுக்கு ஒப்பான துணிகள், உடைகள் இருப்பின் அவற்றை பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு பாதுகாப்புத் தரப்பினரால் வலியுறுத்தப்பட்டு வந்தநிலையில் குப்பை கூழத்திலிருந்து இராணுவ சீருடைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான

# கொச்சிக்கடை தேவாலயம் ஆராதனைகளுக்காக திறப்பு

## கடற்படை அறிவிப்பு

உயிர்த்த ஞாயிறன்று தாக்குதலுக்கு இலக்கான, கொழும்பு- கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயமானது, ஆராதனைகளுக்காக நேற்று முதல் திறக்கப்பட்டதாக இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளது.

காலை 7 மணியிலிருந்து இரவு 7 மணிவரை ஆராதனைகள் இடம்பெறவுள்ள நிலையில், திருப்பலி பூஜைகள் இடம்பெறாது என்றும் கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

எனவே தேவாலயத்துக்கு வருகை தருபவர்களின் பாதுகாப்புக்காக விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# பழிவாங்கும் படலம் வேண்டவே வேண்டாம்

## நீர்கொழும்பு வன்முறை தொடர்பில் மகிந்தவுக்கு கிடைத்துள்ள தகவல்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு பழிவாங்கும் வகையில் நீர்கொழும்பில் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது என தனக்கு தகவல் கிடைத்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பழிவாங்கும் படலம் வேண்டவே வேண்டாம். மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ்வதையே நாம் விரும்புகின்றோம்.

இந்த வன்முறையில் யார் ஈடுபட்டிருந்தாலும் அவர்கள் அனைவரையும் அரசு கைது செய்ய வேண்டும் எனவும் மகிந்த வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# NTJ இன் கொழும்பு அமைப்பாளருக்கு 21 ஆம் திகதி வரை விளக்கமறியல்



(கொழும்பு)

தேசிய தௌஹீத்ஜமாத் அமைப்பின் கொழும்பு மாவட்ட அமைப்பாளரான மொஹமட் பாருக் மொஹமட் பவாஸை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த நபர் கொழும்பு மேலதிக நீதவான் பிரியந்த லியனகே முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்.

முன்னதாக குறித்த நபர் 72 மணி நேரம் தடுத்து வைத்து விசாரணை செய்யப்பட்டதன் பின்னர் கடந்த 02 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

குறித்த நபர் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் கொழும்பு மாவட்ட அமைப்பாளராக செயற்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக இதன் போது பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் குறித்த நபரிடமிருந்து தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புடன்தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் வீடியோ காட்சிகளும் கைப்பற்றப்பட்டுள்ளதால் அது தொடர்பில் மேலும் விசாரணை நடத்த வேண்டும் என்று பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். இந்நிலையில் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை குறித்த நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (இ-7)

# ரம்ழான் மாதம் ஆரம்பம்

## பள்ளிவாசல்களில் அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கி பயன்படுத்தத்தடை

பள்ளிவாசல்களில் அதிக சத்தத்துடன் ஒலிபெருக்கி பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று ரம்ழான் நோன்பு ஆரம்பமான நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக திணைக்கள அதிகாரி எம். ஆர். எம். மலிக் தெரிவித்துள்ளார்.

பள்ளிவாசல்களுக்கு வெளியில் கேட்கும் வகையில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தக் கூடாது என சகல பள்ளிவாசல்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ரம்ழான் நோன்பினை நிறைவு செய்த பின்னர் இரவில் இடம்பெறும் மத நடவடிக்கைகளின் நேரத்தை குறைத்துக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கையில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு சவுதி பொறுப்பு உயர்ஸ்தானிகராலயம் மறுப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதல்கள் தொடர்பாக இலங்கை ஊடகமொன்றில் வெளியான செய்தியை கொழும்பிலுள்ள சவுதி உயர்ஸ்தானிகராலயம் நிராகரித்துள்ளது.

கடந்த உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு சவுதி அரேபியா பொறுப்புக்கூற வேண்டும் என மறைமுகமாக தெரிவிக்கப்பட்டு இலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. லெபனான் ஊடகமொன்றை மேற்கோள்காட்டி இந்த செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

ஆனால் குறித்த ஊடக தகவலை நிராகரிப்பதாக கொழும்பிலுள்ள சவுதி உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது. அத்துடன், அது தொடர்பாக தமது அதிருப்தியையும் கண்டனத்தையும் சவுதி உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ளது. (இ-7)

# ஆட்சியைக் கவிழ்த்து அரசை கைப்பற்றவோ அரசியல் செய்வதற்கோ இது நேரமல்ல! காவிந்த எம்.பி.எச்சரிக்கை



ஆட்சியை கவிழ்த்து அரசாங்கத்தை கைப்பற்றுவதற்கோ அல்லது அரசியல் செய்வதற்கான நேரமோ இது அல்ல. தேசிய பாதுகாப்பு நலன் கருதி முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறின்றேல் அரசாங்கத்துக்கு தான் ஆதரவளிக்கப் போவதில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்தன எச்சரித்தார்.

அரசியலில் இருந்து விடுபட்ட நாட்டில் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் சூழ்நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் நோக்கில் இனவாதம், அடிப்படைவாதம், பயங்கரவாதம் ஆகியவற்றுக்கு எதிராக மக்கள் அமைப்பால் நாட்டு மக்களின் பாதுகாப்புக்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு முன்வைத்துள்ள 10 யோசனைகள் உள்ளடாங்கிய அறிக்கையின் பிரதிகளை அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகாநாயக்க தேரர்களுக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை கையளித்தார். அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# கருத்தைத் திருத்திக்கொள்ளவும்

## ஜமியதுல் உலமா சபைத் தலைவருக்கு பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை கடிதம்

(கொழும்பு)

அண்மையில் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சர்வமதத் தலைவர்களின் கூட்டத்தின் போது அகில இலங்கை ஜமியதுல் உலமா சபைத் தலைவர் அஷ்-ஷெய்க் ரிஸ்வி முப்தி தெரிவித்த கருத்து தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்.கே.ஜீ.கே. நம்மவத்த அவருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தின் பின்னர் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற சர்வ மதத் தலைவர்களுக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அகில இலங்கை ஜமியதுல் உலமா சபைத் தலைவர் அஷ்-ஷெய்க் ரிஸ்வி முப்தி, ஐ.எஸ். தீவிரவாத குழுவுடன் தொடர்புடைய இலங்கையர்கள் சிலர் இந்நாட்டினுள் இருப்பதாக ஜமியதுல் உலமா சபை 2015 ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சருக்கு அறிவித்திருந்ததாக தெரிவித்திருந்தார்.




இருப்பினும் பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜேயவர்த்தனவிற்கு இது தொடர்பான எவ்வித அறிக்கையும் வழங்கப்படவில்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்.கே.ஜீ.கே. நம்மவத்த ஜமியதுல் உலமா சபையின் தலைவருக்கு குறித்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே அவர் தெரிவித்த கருத்தை திருத்திக் கொள்ளுமாறும் அவ்வாறு இல்லாவிடின் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்




## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

இந்த அரசியற் சூழ்நிலையில் தமிழர், சிங்களவர் ஆகிய இரு சாராருமே தமக்கு சட்ட நிருபணசபையிலும் இலங்கை அடங்கலுமான முழுக் கட்டுப்பாடும் அளிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தத்திற்காக மேலும் தீவிரமாகப் போராட ஆரம்பித்தனர்.

எச். ஜே.சி.பெரேரா, இலங்கைத் தேசாதிபதியை இந்தியாவில் சந்தித்து, அரசியலமைப்புச் சீர்திருத்தம் பற்றிக் கலந்துரையாடியதன் பின்னர் இப் போராட்டம் மேலும் சூடு பிடித்திருக்கலாம்.

இலங்கைக்கு சுயாட்சி வழங்க வேண்டும் என முன்னர் திட்டமிட்டிருந்த இலங்கைக்குப் பொறுப்பான அமைச்சர் மிலான், இப்போது தனது மனதை மாற்றிக் கொண்டார் என அவர் இலங்கைத் தேசியக் காங்கிரசுக்குத் தெரிவித்தார்.

இந்த ஒன்றிணைந்த போராட்டம் தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையே காணப்பட்ட ஒற்றுமைக்குச் சான்றாகும். இதையிட்டு இந்து சாதனம் கூறுவதாவது,

இந்த நாட்டின் மக்களாகிய சிங்களவரும் தமிழரும் நாட்டின் நன்மையைப் பெரிதாகக் கருதி தமது வேறுபாடுகளை மறந்து தேசிய காங்கிரஸின் தீர்மானங்களுக்கிணங்க செயற்பட முடிவு செய்துள்ளனர்.

உலகத்தில் நாகரிகம் நிலவும் இக் காலத்தில் அதன் பயனாக பல இனங்கள் மத்தியில் விடுதலை வேட்கை வளர்ந்து வருகின்ற வேளையில் இலங்கையிலுள்ள நாமும் சுதந்திரத்தை விரும்புவது குற்றச் செயல் அல்ல.

நாகரிகமடையாத சில இனங்கள் கூட ஆட்சியாளரிடமிருந்து பலவகையான சுதந்திரங்களைப் பெறும் இக் காலத்தில் ஆதியிலிருந்தே நாகரிகத்தின் உச்சியிலிருந்த நாம் எமது சுதந்திரத்திற்காக எமது ஆட்சியாளரிடம் கோரிக்கைகளை விடுப்பது எமக்கு விநோதமாகத் தோன்றவில்லை.

தமிழரும் சிங்களவரும் ஒன்றுபட்ட முன்னணியானதும் இலங்கைத் தேசியக் காங்கிரஸின் உருவாக்கமும் அரசியல் இயக்கங்களில் பங்கு பற்றிய அநேகமானோர் ஏன் இலங்கைப் பொது மக்களும் கூட தாம் விரைவில் விடுதலையடைந்த ஒரு தேசமாவோம் என நம்பியிருக்கச் செய்திருக்க வேண்டும்.

இந்தியாவில் எவ்வாறு இந்திய தேசியக் காங்கிரஸ் பிரித்தானிய ஆட்சிக்கு ஒரு ஆபத்தாக விருந்ததோ, அதே போன்று இலங்கையிலும் இலங்கைத் தேசியக் காங்கிரஸினால் பிரித்தானிய ஆட்சிக்கு ஆபத்து நேரக் கூடும் எனத் தேசாதிபதி மனிங் உணர்ந்திருக்க வேண்டும்.

இலங்கைத் தேசியக் காங்கிரஸின் கீழ் ஒன்றுபட முன்னர் சிங்கள அரசியல் தலைமை, பிரதேச பிரதிநிதித்துவத்தை விரும்ப தமிழர் இன ரீதியான பிரதிநிதித்துவத்தை ஆதரித்த மையையும் அவர் உணர்ந்திருத்தல் வேண்டும்.

கண்டியச் சிங்களவருக்கும் கரையோரச் சிங்களவருக்கும் இடையே இருந்த சாதியப் பகைமை பற்றியும் அவர் அறிந்திருத்தல் வேண்டும். 1920 இல் சிறுபான்மை ஒன்றின் விருப்பத்தை அனுசரிப்பதற்காக தேசாதிபதி மனிங், சிங்களவர் மத்தியில் உள்ள வேறுபாடுகளையும் சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையிலான வேறுபாடு களையும் தன்க்குச் சாதகமான வகையில் பயன்படுத்தி, கண்டிய சிங்களவருக்குக் கூடுதலான பிரதிநிதித்துவம் வழங்கப்படும் வகையில் இனரீதியான பிரதிநிதித்துவத்தினை தொடர்ந்தும் கொள்கையாகக் கொண்டதொரு அரசியலமைப்பு ஒழுங்கை அறிமுகம் செய்தார்.

பிரதேச அடிப்படையிலான பிரதிநிதித்துவத்தைச் சிங்களவரும் தமிழரும் ஏற்றுக் கொண்டு அதையே இரு இனங்களும் கோரி, அவற்றைத் தேசாதிபதிக்கு அறிக்கையாகச் சமர்ப்பித்திருந்த போதும் இந்த அரசியலமைப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

இனரீதி, பிரதேச ரீதி என்னும் இருவகைப் பிரதிநிதித்துவங்களையும் கலந்ததொரு பிரதிநிதித்துவத்தை மனிங் அமுல்படுத்தினார் என்றே கூற முடியும்.

தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை நசுக்கி வைத்து தமது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக வேண்டுமென்றே திட்டமிட்டு பிரித்தானியரின் பழைய சாம்ராச்சிய பிரித்தாளும் கொள்கையைப் பயன்படுத்தி மனிங் இவ்வாறு செய்தார் போல் தோன்றுகின்றது.

இக்கருத்தை டி. சில்வாவின் கூற்றுக்கள் ஆதரிக்கின்றன. உண்மையான அரசியல் சீர்திருத்த ஏற்பாடுகளுக்கான தேவையை மனிங் முற்று முழுதாக உணராதிருந்தார். அரசியலமைப்புக் கட்டுமானத்தில் செய்யப்படும் மாற்றம் இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்குக் குந்தகமாகும் எனவும் எனவே அதைத் தலையைக் கொடுத்தாவது தவிர்க்க வேண்டுமெனவும் அவர் உண்மையாகவே நம்பினார்.

மனிங் இலங்கைக்கு வரும் காலத்தில் இலங்கைத் தேசியக் காங்கிரஸ் அதன் ஆரம்ப உருவாக்க நிலையில் இருந்தது. இதன் நடவடிக்கைகளை இவர் காமாலைக் கண்களுடனேயே கண்டார்.

புதிதாக நிறுவப்பட்ட அமைப்பு கட்டியங் கூறுவது போலிருந்த அரசியல் மாற்றுக் கற்பனைக் காட்சிகள் அவருடைய பழைமை உணர்வுகளை உரசின. அரசியலமைப்புச் சீர்திருத்தம் கோரியவர்கள் தமது உழைப்பின் வெற்றியைக் கொண்டாடிக் கொண்டிருந்த அதே வேளையில் மனிங் அச்சீர்திருத்தங்களைக் கவிழ்க்கத் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார்.

(தொடரும்)

# பொலிஸாருக்கு தகவல் வழங்கியவரை கொலை செய்த அடிப்படைவாதிகள்?

(அத்தனகல்ல)

அடிப்படைவாத செயற்பாடுகள் குறித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கிய ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அத்தனகல்ல, அலவல பிரதேசத்தில் இவ்வாறு குறித்த நபர் கொலை செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மொஹமட் ஹாதில் என்ற நபரே கொலை செய்யப்பட்டுள்ளார் எனவும் அவர் பிரதேசத்தில் வடை விற்பனை செய்து வந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்கப்பட்டு ஆபத்தான நிலையில் இருந்த இந்த நபர் வத்துப்பிடிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

கொலை செய்யப்பட்ட நபர் முஸ்லிம் அடிப்படைவாத நடவடிக்கைகள் குறித்து பல சந்தர்ப்பங்களில் பொலிஸாருக்கு தகவல்களை வழங்கி வந்துள்ளார். இதனால், அடிப்படைவாதிகள் இந்த நபரை கொலை செய்திருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

கொலைச் சம்பவம் தொடர்பாக நிட்டம்புவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# இலங்கைக்கான ஆறு புதிய தூதுவர்களின் நற்சான்றுப் பத்திரம் ஜனாதிபதியிடம் கையளிப்பு





(கொழும்பு)

இலங்கைக்கான 6 புதிய தூதுவர்களும் ஒரு உயர்ஸ்தானிகரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நியமிக்கப்பட்டவர்கள் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தமது நற்சான்றுப் பத்திரங்களை கையளித்தனர்.

அசர்பைஜான், ஆர்ஜென்டீனா, லைட்வியா, லிதுவேனியா, லாவோஸ் மற்றும் பஹ்ரேய்ன் ஆகிய நாடுகளின் தூதுவர்களும் அவுஸ்திரேலியாவின் உயர்ஸ்தானிகருமே இவ்வாறு புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். (7)

# கோத்தா வெளிநாடு செல்ல அனுமதி

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிரான வழக்கு கொழும்பு விசேட நீதாய மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது.

டீ.ஏ.ராஜபக்ஷ நினைவுத் தூபி மற்றும் நூதனசாலை அமைப்பதற்கு 90 மில்லியன் ரூபாய் அரச நிதியைப் பயன்படுத்தியதாக கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட 7 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்தால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு சம்பத் அபேகோன் (தலைவர்), சம்பத் விஜயரத்ன மற்றும் சம்பா ஜானகி ராஜரத்ன ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டது.

இதன்போது கோத்தபாய ராஜபக்ஷ வைத்தியப் பரிசோதனைக்காக சிங்கப்பூர் செல்ல உள்ளதால் அதற்கு அனுமதி வழங்குமாறு அவரது சட்டத்தரணி அலி சப்ரி நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.


அதன்படி எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த வழக்கில் ஏனைய பிரதிவாதிகளாக நில மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பிரசாத் ஹர்ஷன டி சில்வா மற்றும் அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களான பத்ரவதி கமலதாச, சுதம்மிகா ஆட்டிகல்ல, சமன் குமார கலாபத்தி, டி.மெண்டிஸ் சலிய மற்றும் மல்லிகா குமாரி சேனதீர ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1714

### அகிலன்

வாழ்க்கையும் ஐஸ்கிறீம் மாதிரித்தான் டேஸ்ட் பண்ணாலும் கரையும் வேஸ்ட் பண்ணாலும் கரையும்னு சொல்றாங்க... சரி நாம டேஸ்ட் பண்ணியே கரைப்போம்



### பவிதா

பொறுமைசாலியான பெண்ணா வேண்டுமா? போன்ல உசி யூஸ் பண்ற பெண்ணா பாருங்க



### முரளி

ஒருசிலர் எங்க படுத்தாலும் அசந்து தூங்கிடுறாங்க! எப்படின்னு தெரியல! நமக்கு ஆபிஸ்ல லஞ்சுக்கு அப்புறம்தான் தூக்கம் தள்ளுது




### வினுஜா

ஒருவாரமா என் காது சரியாக கேட்கவே மாட்டேங்குது டாக்டர் நீங்க சொல்லியே கேட்காத காது நான் சொன்னா மட்டும் கேட்கவா போகுது




### மங்கை

உன்னை மதிப்பவர்களுக்கு மலராய் இரு...
உன்னை மிதிப்பவர்களுக்கு முள்ளாய் இரு...



### கண்மணி

செலவு VS வருமானம்
வாழ்க்கை இப்படித்தான் போகுது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை 9 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (5)

---

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி- சப்பச்சி மாவடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நாளை 9 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும்.

இதில் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (5-30)




## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு ஸ்ரீ வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரர் (சிவன் கோயில்) ஆலய வருடாந்த சங்காபிஷேகம் நாளை மறுதினம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து திருக்கல்யாண நிகழ்வும் சுவாமி வீதி வலம் வரும் காட்சியும் நடைபெறவுள்ளன. (5)

## பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வரலாற்றுத் தொன்மைமிக்க பலநூற்றாண்டு பழைமையும் சிறப்பும் கொண்ட ஏழாலை அருள்மிகு முடிமன்னர் ஆலயத்தில் வருடாந்தப் பொங்கல் உற்சவம் எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து விசேட பூசை வழிபாடுகள் மற்றும் அபிஷேக ஆராதனைகள் என்பன நடைபெறவுள்ளன. (5)

# சங்கிலியன் நினைவு தினச் செயற்குழு அங்குரார்ப்பணம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசித் தமிழ் மன்னனாகிய சங்கிலி மன்னனின் நினைவு தினத்தை வருடா வருடம் கொண்டாடும் முகமாக தமிழ் மன்னன் சங்கிலியன் நினைவுதினச் செயற்குழு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

குறித்த அங்குரார்ப்பண நிகழ்வு இலங்கை சிவசேனை அமைப்பாளர் சச்சிதானந்தம் தலைமையில் கைதடி ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இக்குழுவின் தலைவராக கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் பா.பாலகணேசன்,செயலாளராக வலிகாமம் கல்வி வலய இந்து சமய பாட ஆசிரிய ஆலோசகர் என்.பி சிறீந்திரன்.பொருளாளராக இலங்கை இந்து சமயத் தொண்டர் சபை ஆணையாளர் வை.மோகனதாஸ்.போசகராக மறவன்புலவு சச்சிதானந்தம் ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்களாக செ.பிரணவஜோதி , ப.சிவலோகநாத தேசிகர், சிவஸ்ரீ க.சுமுகலிங்க சிவாச்சாரியார் , வீ.நமசிவாயம் , க.பிரபாகரன் சி.செல்வா. க.கிரிதரன்.வை.ஜெகதாஸ் சிவஸ்ரீ வேலு சுரேஸ்வரசர்மா கு.ஜெயராணி சாமியம்மா. அ.சிறீஸ் கந்தராஜக் குருக்கள்.ரா.ராஜ்குமார். ச.சுதாகர்.பா.சிறீகாந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கலந்துரையாடலில் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை சங்கிலி மன்னனின் 400 ஆவது சிரார்த்த தினத்தை 25 மாவட்டங்களிலும் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்தல், தேசிய விழாவாகக் கொண்டாடுதல், அஞ்சல் தலைப்பு வெளியிடுதல், சங்கிலியன் தோப்பை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தல், தேசிய ரீதியில் போட்டிகள் நடத்துதல். இந்த நிகழ்வுகளை ஆவணப்படுத்தல்.சுற்றுலாத்தலமாக மாற்றி அமைத்தல் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. (5-9-114)

## யாழ்.இந்துக் கல்லூரியில் புதிய மாணவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

க.பொ.த (உ/த) கலைப் பிரிவு, வர்த்தகப்பிரிவு (ஆங்கில மொழிமூலம்) 2021 ஆண்டுக்கான மாணவர் விசேட அனுமதிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவற்றில் இணைந்து கற்க விரும்புவோர் 13.05.2019 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் எஸ். நிமலன் அறிவித்துள்ளார். (5)

# சட்டவிரோத மணல் கடத்தல் சாரதிகள் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் எந்தவிதமான அனுமதிப்பத்திரங்களும் இன்றி சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்ட மணல் மற்றும் டிப்பர்கள் சாவகச்சேரி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் டிப்பர் சாரதிகள் மூவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட டிப்பர்கள் தனங்கிளப்பு.நாவற்குழி மற்றும் கனகம்புளியடிச் சந்திப் பகுதிகளில் வைத்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

இக் கைது நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எம்.ஏ.கே கோனார தலைமையிலான பொலிஸ் குழுவினர் முன்னெடுத்திருந்தனர்.தென்மராட்சியில் பல பகுதிகளிலும் பொலிஸ், இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள போதிலும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் தென்மராட்சியின் கெற்பேலி மற்றும் தனங்கிளப்புப் பகுதிகளில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(5-30)

# ‘பொலிஸாருக்கு தகவல் கொடுக்க பொதுமக்கள் அஞ்சக் கூடாது’

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் நீண்ட காலத்திற்குப் பின்னர் கடந்த சனிக்கிழமை சிவில் பாதுகாப்புக் கூட்டம் இடம்பெற்றது.கோவிற்குடியிருப்பு கிராம உத்தியோகத்தர் கார்த்திகேயன் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் சாவகச்சேரி பொலிஸ் நிலைய உப பொலிஸ்பரிசோதகர் உ கௌசிகன் கலந்துகொண்டு சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுடன் பாதுகாப்பு தொடர்பாக கலந்துரையாடினார். கோவிற்குடியிருப்பு, சங்கத்தானை மற்றும் சாவகச்சேரி நகர் ஆகிய மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கி கோவிற்குடியிருப்பு கடற்றொழிலாளர் ஓய்வு மண்டபத்தில் இக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அத்துடன் மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கும் பொறுப்பான பொலிஸ் உத்தியோகத்தர்கள் அறிமுக நிகழ்வும் இடம்பெற்றது. கோவிற் குடியிருப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு குலசேகர, சாவகச்சேரி நகர் பகுதிக்கு ஆனந்த, சங்கத்தானை கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு அமரசூரிய ஆகிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு தகவல் கொடுக்க பொதுமக்கள் அஞ்சக் கூடாது எனவும், அச்சம் இருப்பின் கிராம உத்தியோகத்தர் ஊடாக பொலிஸாருக்கு தகவல்களை வழங்க முடியும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5-30)

# தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் இன்றும் நாளையும்

தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டை முன்னிட்டு 08 ஆம் திகதி மற்றும் 10 ஆம் திகதி களில் டெங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதன் மூலமே அதிகரித்து வரும் டெங்குப் பரவலிலிருந்தும் நோய்த் தாக்கத்திலிருந்தும் விடுபட முடியும். இந்த தேசிய நிகழ்வு. அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அமைந்திட சகலரும் ஒத்துழைப்புக்கள் வழங்கி தங்கள் வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச்சந்தைகள், மயானங்களின் சுற்றுச்சூழலை துப்புரவாக பேணுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இம்முறை டெங்கு பெருக்கத்திற்கு சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்து அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதுடன் அன்றைய தினம் தங்கள் வீடுகளில் தரித்திருந்து களத் தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனடிப்படையில் இன்று 8 ஆம் திகதி புதன்கிழமை பஜார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலும் (ஜே/74.ஜே/78) நாளை மறுதினம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வண்ணார் பண்ணை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலும் (ஜே/100, ஜே/ 101) களத் தரிசிப்புக்கள் நடைபெறவுள்ளன. (5)

# மகாஜனவில் 2021ம் ஆண்டுக்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

(ஈச்சமோட்டை)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் 2021 ஆம் ஆண்டுக்கான உயர்தர வகுப்புக்கள் நாளை 9 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக கல்லூரி அதிபர் ம.மணிசேகரம் அறிவித்துள்ளார். கணித, விஞ்ஞான, தொழில்நுட்ப, கலை, வர்த்தக வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கல்லூரியில் 2018 இல் க.பொ.த. (சா/த) கல்வி கற்று சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் வேறு பாடசாலைகளில் கல்வி கற்று மகாஜனக் கல்லூரிக்குப் புதிதாக அனுமதி பெற்ற மாணவர்கள் அனைவருக்கும் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (5-105)

# சுவாமி சின்மயானந்தரின் 103 ஆவது ஜெயந்தி தினம்


(யாழ்ப்பாணம்)

குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் 103 ஆவது ஜெயந்தி தினம் இன்று 8 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணி முதல் 6 மணிவரை இல.9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷனில் சுவாமி சிதாகாசானந்தா தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் குருபாதுகா பூஜை, பஜனை, சத்சங்கம் என்பன இடம்பெறவுள்ளன. (5)

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கைது; எதிர்காலச் செயற்பாடு குறித்து ஆராய்வு





(யாழ்ப்பாணம்)


கைது செய்யப்பட்ட மாணவர்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலை நடத்துநர் ஆகியோருக்கு எதிரான வழக்குத் தொடர்பிலும் எதிர்காலத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்று ஆராயும் பொருட்டும் நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், கைது செய்யப்பட்ட மாணவர்கள் விடுதலை செய்யப்படக் கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாகவும் எமது சக மாணவர்களின் விடுதலைக்காக பல்வேறு வழிகளிலும் போராடும் நல் உள்ளங்களுக்கு நாம் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அதுமட்டுமல்லாது எமது மாணவர்களின் விடுதலை தொடர்பில் அமைதி காத்து வருவதாகவும் மாணவர்கள் விடுதலை கேள்விக்குறியாகும் பட்சத்தில் எதிர்காலத்தில் காத்திரமான முடிவுகளை மாணவர்கள் எடுக்க வேண்டும் எனவும் இக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டதோடு நீதிமன்றத்தில் நடைபெற்ற மாணவர்களுக்கு எதிரான வழக்கைப் பார்வையிடுவதற்கும் மாணவர்கள் சென்றிருந்தனர். அங்கு சட்டத்தரணிகளும் பிரசன்னமாகியிருந்தனர். (இ-10)




# புத்திசாலி இராணுவ வீரர்



அமெரிக்கா ஒரு காலத்தில் இங்கிலாந்திடம் அடிமைப்பட்டுக்கிடந்தது. அமெரிக்க மக்கள், இங்கிலாந்து மக்களிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்காகப் போராட்டம் நடத்தினர். அது கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டு.

அமெரிக்க இராணுவப் படை, இங்கிலாந்து இராணுவப் படையுடன் கடுமையாக மோதியது. போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் கிறிஸ்மஸ் பண்டிகை வந்தது. ஆகவே, இரண்டு தரப்பினரும் போர் நிறுத்தம் செய்தனர்.

அச்சமயம் அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகளில் ஒருவரான இஸ்ரேல் பொட்னாம் என்பவர் இங்கிலாந்தைச் சேர்ந்த இராணுவ அதிகாரி ஒருவரைச் சந்தித்தார். இருவருக்குமிடையே கடுமையான வாக்குவாதம் நடந்தது.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த அமெரிக்க அதிகாரி, ஆங்கிலேய அதிகாரியை மிகவும் திட்டி விட்டார். இதைக் கேட்ட ஆங்கிலேய அதிகாரி கொதித்தெழுந்தார்.

"இவ்வளவு தூரம் நீ பேசி விட்டாய் அல்லவா...? நாளை நீ என்னுடன் சண்டைக்கு வர வேண்டும். நீ உன் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வா. நான் என் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வருகின்றேன். இருவரும் துப்பாக்கியால் சண்டை போடுவோம். யார் வெல்கிறார்கள் என்று பார்க்கலாமா?" என்றார்.

இஸ்ரேல் பொட்னாம் இதைக் கேட்டு பதில் எதுவும் பேசவில்லை. அமைதியாக அங்கே கிடந்த மரப்பீப்பாய் ஒன்றின் மேல் உட்கார்ந்திருந்தார். போர்க்களத்தில் இந்த மரப் பீப்பாய்கள் அதிகமாகக் காணப்படும். காரணம், இம்மாதிரிப் பீப்பாய்களில் தான் போருக்குத் தேவையான வெடி மருந்துகள் நிரப்பி வைத்திருப்பர்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஆங்கிலேய அதிகாரி அதிகமான கோபம் அடைந்தார்.

"அப்படியானால் நீ ஒரு கோழை என்பதை வெளிப்படையாகவே ஒப்புக் கொள்ள வேண்டியதுதானே! மௌனம் ஏன்?" என்று சீண்டினார்.

நான் உன்னைப் போன்ற கோழை இல்லை. வாய்ச் சொல்லில் வீரம் பேசவும் எனக்குத் தெரியாது. நான் செயல் வீரன். நீ உனக்குச் சாதகமான முறையில் துப்பாக்கிச் சண்டை செய்யலாம் என்று கூறினாய். உனக்குத் துப்பாக்கி சுடுவதில் நல்ல பயிற்சி உண்டு என்பது எனக்குத் தெரியும்.

ஆகையால் நீ துப்பாக்கிச் சண்டையைத் தேர்ந்தெடுத்தாய். என் விடயம் அப்படி இல்லை. எனக்குத் துப்பாக்கி சுடுவதில் அத்தனை அனுபவமில்லை. யார் வீரன் என்பதை நிரூபிக்க ஒரு பொதுவான வழிமுறையை உன்னால் சொல்லத் தெரியவில்லையே!

"ஏன், நீதான் செயல் வீரனாயிற்றே! பொதுவான ஒரு வழியைச் சொல்லு பார்க்கலாம்" என்று குமுறினார் ஆங்கிலேய அதிகாரி.

"சரி! நானே சொல்கிறேன். இங்கே இரண்டு பீப்பாய்கள் இருக்கின்றன. இந்தப் பீப்பாய்கள் எதற்காக உபயோகப்படுத்தப்படுகின்றன என்பதை நீயும் அறிவாய். வெடிமருந்து போட்டு வைக்க உபயோகப்படுத்தும் பீப்பாய்கள் இவை என்பதை நீ மறந்தாலும் நான் உனக்கு நினைவூட்டுகிறேன்.

இப்போது இந்த இரண்டு பீப்பாய்களிலும் நான் ஒரு துளையை இடுகிறேன். நீ ஒரு பீப்பாயின் மேல் அமர்ந்து கொள். நான் ஒரு பீப்பாயின் மேல் அமர்ந்து கொள்கிறேன்.

இந்த இரண்டு பீப்பாய்களில் எதன் மீதாவது அமரவும் உனக்குச் சுதந்திரம் உண்டு.

"இதன் பிறகு நான் ஒரு வயரைச் செருகி வைப்பேன். அதன் முனையையும் பற்ற வைத்து விடுவேன். அது மெல்ல மெல்லக் கனிந்து பீப்பாய்க்குள் போகும். இவ்வாறு பற்ற வைத்த பின்னாலும் யார் ஒருவர் நீண்டநேரம் வரை கீழே இறங்காமலேயே அந்தப் பீப்பாயின் மேல் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்களோ அவர்களே வெற்றி பெற்றவர். சம்மதமா? அதற்கான தைரியம் உன்னிடமிருக்கிறதா?" என்று கேட்டார் இஸ்ரேல் பொட்னாம்.

"சரி" என்று வீராவேசமாக ஒப்புக் கொண்டார் ஆங்கிலேய அதிகாரி.

பொட்னாம் எழுந்தார். இரண்டு நீண்ட "ப்யூஸ்" வயர்களை இணைத்து அதைப் பீப்பாய்க்குள் செலுத்தி விட்டு நுனியைப் பற்ற வைத்துவிட்டு அமைதியாகப் பீப்பாய் மேல் வந்து அமர்ந்தார். ஆங்கிலேய அதிகாரியும் ஒரு பீப்பாய் மேல் அமர்ந்திருந்தார்.

நெருப்பு சிறிது சிறிதாகக் கனிந்து பீப்பாயை நோக்கி வர ஆரம்பித்தது. அது பாதித் தொலைவில் வந்தவுடனேயே ஆங்கிலேய அதிகாரி நடுங்கினார்.

"இவன் நம்மைத் துண்டு துண்டாகச் சிதற வைக்கத் திட்டம் தீட்டித்தான் இம்மாதிரி ஏற்பாடு செய்திருக்கிறான்!" என்று எண்ணினார். நெருப்பு மெல்ல மெல்ல ஊர்ந்து வந்து கொண்டிருந்தது.

"இது மிகவும் பைத்தியக்காரத்தனமான ஒன்று. இதனால் நாம் இருவருமே வெடித்துச் சிதறி இறந்து விடுவோம். இது பயத்துக்குரிய ஒன்று"

இஸ்ரேல் பொட்னாம் பேசவில்லை. அவர் முகத்தில் எவ்விதச் சலனமும் இல்லை. பீப்பாயை விட்டு அவர் இறங்கவுமில்லை. இன்னும் நன்றாக வசதியாக அமர்ந்து கொண்டார் அவர். திரி எரிந்து பீப்பாய்க்கு வெகு அருகில் வந்து விட்டது.

இன்னும் முப்பது வினாடிகள் தாமதித்தால் நெருப்பு பீப்பாய்க்குள் போய்விடும். அப்படிப் போய் விட்டால்...?

நினைத்தால் கூடத் தப்பி ஓட முடியாது.

அதற்கு மேல் ஆங்கிலேய அதிகாரியால் அமைதியாக இருக்க முடியவில்லை.

பீப்பாயிலிருந்து துள்ளிக் குதித்து இறங்கினார். திடுதிடுவென அந்த இடத்தைவிட்டு ஓட ஆரம்பித்தார். பாதுகாப்பான இடத்தில் நின்று திரும்பிப் பார்த்தார். பீப்பாய்க்குள் நெருப்பு நுழைய ஒரு விநாடி இருந்தது. அப்போதும் பொட்னாம் பீப்பாயை விட்டு எழவில்லை.

ஆங்கிலேய அதிகாரியைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தார்.

"கோழை யார் என்பது புரிந்ததா?' என்று சத்தமாகக் கேட்டார்.

அவர் அவ்வாறு கேட்டு முடித்தவுடன், பீப்பாய் வெடித்துத் துண்டு துண்டாகச் சிதறிவிடும் என்று ஆங்கிலேய அதிகாரி எதிர்பார்த்தார். அவ்விதமான அசம்பாவிதம் எதுவும் நடைபெறவில்லை. பீப்பாய்க்குள்ளும் நெருப்புப் போய்விட்டது.

பொட்னாம் அமைதியாகவே இருந்தார். ஐந்து நிமிடங்களுக்குப் பின் முழுதாக இறங்கி வந்தார் பொட்னாம்.

"இந்தப் பீப்பாய்க்குள் இருப்பது வெடி மருந்து என்றுதானே நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய். இல்லை, அது வெங்காயம்.

வெங்காயத்தைச் சமையல் அறையில் கொட்டிய பின் தான் வெடி மருந்து அதில் நிரப்பப்பட வேண்டும்!" என்று அமைதியாகக் கூறினார்.

ஆங்கிலேய அதிகாரி மிகப் பெரிய அவமானத்தை அடைந்தார். அன்று இரவோடு இரவாக அந்த அதிகாரி அந்தப் பகுதியிலிருந்து வேறு பகுதிக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு சென்று விட்டார்.

இந்த அமெரிக்கச் சுதந்திரப் போரில் ஈடுபட்ட அந்த அதிகாரி இஸ்ரேல் பொட்னாம் பின்னாளில் அமெரிக்காவின் இராணுவத் தளபதியானார்.

புத்தி இருந்தால் எதையும் சாதிக்கலாம்.

## விடுகதைகள்

• வீட்டிலிருப்பான் காவலாளி, வெளியில் சுற்றுவான் அவன் கூட்டாளி, அவர்கள் யார்?

**பூட்டும் திறப்பும்**

• மரத்தின் மேலே தொங்குவது மலைப் பாம்பல்ல, அது என்ன?


**விழுது**

• பேச்சுக் கேட்குது பேசுபவர் தெரியவில்லை, அது என்ன?

**வானொலிப்பெட்டி**

• விரல் இல்லாமலே ஒரு கை, அது என்ன?

**தும்பிக்கை**



**வாத்தியார் :** தென்னை மரத்தில் இருந்து 6 ஓலையும், பனையிலிருந்து 6 ஓலையும் கீழே விழுது, இரண்டையும்? கூட்டினால் என்ன வரும்?

**மாணவன் :** குப்பை தான் சேர்.

## சிந்தனைத்துளிகள்

• மரியாதை பெறும் ஒரே வழி அதனை முதலில் கொடுப்பதாகும்.

• திருப்தியும் பேரின்பமும் எம்முள் இருப்பின் நாம் மற்றவர்களால் விரும்பப்படுவோம்.

• எல்லா சந்தர்ப்பத்திலும் சமநிலையுடன் இருப்பது தான் மகிழ்ச்சி.

• நிரந்தரமற்றதன் மீது அன்பு செலுத்துவது உன் தோல்வியின் முதல்படியாக அமையும்.

• பிடிவாதமும் கோபமும் உன் இயலாமையின் வெளிப்பாடாகும்.

நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதுமே மண்டியிடுவதில்லை.

– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நயத்தக்க நாகரிகத்தை பேணாத கலாசாரம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் அவர்களை அந்தப் பதவியிலிருந்து முடிவுறுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஜனாதிபதிக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தின் கீழ் துணைவேந்தர் பதவியில் இருந்து நீக்குவதான கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரைப் பதவி நீக்கம் செய்தமை யாழ்.பல்கலைக்கழக சமூகத்தில் பரபரப்பை ஏற்படுத்தவே செய்கிறது.

பதவி நீக்கத்துக்கான காரணம் என்ன என்பது பற்றி பதவி விலக்கல் கடிதத்தில் எதுவும் பிரஸ்தாபிக்கப்படவில்லை.

இவ்வாறு காரணம் குறிப்பிடாமல் பதவி நீக்கம் செய்யும்போது ஊகங்களும் அவரவர் முன்வைக்கின்ற காரணங்களும் மேலெழுந்து பரபரப்பை மேலும் வலுப்படுத்தவே செய்யும்.

இங்கு பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஒருவரைப் பதவி நீக்கம் செய்தல் என்ற விடயத்தில் அதிகாரமளிக்கப்பட்டவர்கள் தனிமனித கௌரவத்தையோ அன்றி கல்வியாளர்களுக்கான மதிப்புயர்வையோ இம்மியும் சிந்திக்காமல் நடந்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

பொதுவில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கான நியமனத்தை வழங்குகின்ற அதிகாரம் ஜனாதிபதிக்கு உரியதாகும்.

இவ்வாறு துணைவேந்தர் பதவிக்குரியவரை நியமிப்பதற்கு முன் ஏற்பாடாக அந்தந்த பல்கலைக்கழகங்கள் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பத்தைக் கோரி அதில் விண்ணப்பிக்கின்றவர்களில் உரிய தகைமையை நிறைவேற்றியவர்களுக்கு மூதவை உறுப்பினர்கள் அளிக்கின்ற விருப்பு வாக்குகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர்களை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கின்ற நடைமுறை உண்டு.

இங்குதான் அரசியல் தலையீடு, அரசியல் செல்வாக்கு என்ற விடயங்கள் உள்நுழைகின்றன.

பல்கலைக்கழகங்கள் இந்த நாட்டின் உயர் கல்விப் பீடங்கள் என்ற அடிப்படையில், எந்த வித அரசியல் செல்வாக்குகளுக்கும் இடமளிக்காமல் செயற்படுவது அதிகாரமளிக்கப்பட்டவர்களின் தலையாய கடமையாகும்.

இங்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரைப் பதவி நீக்கம் செய்த விடயத்தைப் பார்க்கும்போது, ஓர் அரசியல்வாதியை அல்லது ஓர் அரசியல் பதவியை நீக்குவதற்காக எடுக்கப்பட்ட அதிரடி நடவடிக்கை போல தெரிகிறது.

ஆம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத் துணைவேந்தரைப் பதவி நீக்கம் செய்த விடயத்தில் பல்கலைக்கழக சமூகம் சார்ந்த எவரும் எந்த வகையிலும் மகிழ்வடைய முடியாது.

ஏனெனில் இந்தக் கலாசாரம் இன்று அவருக்கெனில் நாளை மற்றவருக்கானதாக இருக்கும்.

எனவே யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் அவர்களை பதவி நீக்கம் செய்வதென ஜனாதிபதி மட்டத்தில் முடிவு செய்திருந்தால், அவரை அழைத்து காரணங்களை எடுத்துக்கூறி அந்தப் பதவியில் இருந்து சுயவிருப்போடு இராஜினாமாச் செய்யுமாறு கோரியிருக்க வேண்டும்.

அவ்வாறு செய்திருந்தால் அது நயத்தக்க நாகரிகமாக இருந்திருக்கும்.

இதைவிடுத்து அதிரடியான நடவடிக்கைகள் உயர் கல்விச் சமூகத்தில் நம்பிக்கையீனங்களை ஏற்படுத்திவிடும்.

எனவே எதை எவர் செய்தாலும் அங்கு நாகரிகமும் தனி மனித கௌரவமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கருத்து.

# பதவி நீக்கத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்கின்றார்

## முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து தன்னை தற்காலிகமாக நீக்கியதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை மனிதஉரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யவுள்ளார் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர.

தனது சட்டத்தரணிகளுடன் இது குறித்து ஆராய்ந்துள்ளதாகவும், அடுத்த இரண்டு வாரங்களிற்குள் உச்ச நீதிமன்றத்தில் அவர் வழக்கு தாக்கல் செய்வார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபரை பதவியிலிருந்து அகற்றுவதற்கு 19வது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டப்படி முறைகளை ஜனாதிபதி பின்பற்றவில்லையென்று பூஜித தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்ட பின்னர் பூஜித ஜயசுந்தரவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், பொலிஸ்மா அதிபரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் தங்கியுள்ள பூஜித ஜயசுந்தர, உச்ச நீதிமன்ற தீர்ப்பு வரை அங்கேயே தங்கியிருக்க வாய்ப்புள்ளதாக தெரிகிறது. (ம-3)

# திக்கம் வடிசாலை புனரமைப்பு இவ்வருடத்தில் பூர்த்தி செய்யப்படும்

## ப.அ.சபை பொது முகாமையாளர் தெரிவிப்பு

திக்கம் வடிசாலைப் புனரமைப்புக்கு அடிக்கல் நாட்டப்பட்டும பயன்கிட்டவில்லை. அதிகாரிகள் அசமந்தம் உற்பத்தியாளர்கள் விசனம் என்ற தலைப்பில் வெளிவந்த வலம்புரிச் செய்திக்கு பனை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் எம்.பி.லோகநாதன் தனது விளக்கத்தை தெரிவித்துள்ளார். அவரது விளக்கம் வருமாறு.

2018ம் ஆண்டு திக்கம் வடிசாலைக்கு 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்ட நிதிக்கமைய அமைச்சினால தெரிவு செய்யப்பட்ட ஆலோசனை சேவை மூலம் வடிசாலைக்கான கட்டடத்துக்கான கேள்வி அறிவித்தல், தெரிவு ஒப்பந்தகாரருடான பேரம் பேசல் வரை நடைமுறைப்படுத்தப்பட்டது.

எனினும் ஐப்பசி 26ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்துடன் கேள்வி அறிவித்தல் நடைமுறைகள், ஒப்பந்தகாரருடன் பேரம பேசுதல் (Negotiation) ஆகியன இடைநிறுத்தப்பட்டது.

தற்பொழுது கைத்தொழில் அபிவிருச்சபை, கட்டடத் திணைக்களத்தின் அனுசரணை பெற்று மீண்டும் திக்கம் வடிசாலைக்கான இயந்திரங்கள் வடிவமைத்தல். கௌ்வனவு செய்தல், கட்டடங்களை கட்டுவதற்கான வேலைகளை ஆரம்பிப்பதற்கான கேள்வி அறிவித்தல்கள் மீண்டும் பத்திரிகைகளில் பிரசுரித்து நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வேலைகள் எதிர்பாராத, எமது சக்திக்கு அப்பாற்பட்ட தடைகள் எதுவும் ஏற்படாதவிடத்து இவ்வருடத்தில் பூர்த்தி செய்யப்படும் என தெரிவித்துள்ளார். (ம)

# புதிதாக 38 பிரதேச செயலகங்களை ஆரம்பிக்க அமைச்சரவை அனுமதி

நாடு முழுவதும் 38 புதிய பிரதேச செயலகங்களை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதுகுறித்த யோசனையை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன அமைச்சரவையில் சமர்ப்பித்தார்.

இந்தநிலையில், அமைச்சரவை கூட்டம் நேற்று முற்பகல் ஜனாதிபதி தலைமையில், ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றபோது அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை சனத்தொகை விகிதாசார அடிப்படையில், பிரதேச செயலகங்கள் உரிய வகையில் பகிரப்படாமை காரணமாகவே, 38 புதிய பிரதேச செயலகங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நுவரெலியா மாவட்டத்திற்குட்பட்ட பிரதேச செயலகங்களின் எண்ணிக்கையை 10 ஆக அதிகரிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரத்திற்கு அனுமதி கிடைக்கப் பெற்றமையானது தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு கிடைத்த வெற்றி என அதன் இணைத்தலைவரும் அமைச்சருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார். (ம-3)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீவிஸ்வநாதசுவாமி ஆலய மஹோற்சவம் நாளை 9ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாட்கள் நடைபெறவுள்ளன.

இம்மஹோற்சவத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை காலை 9 மணியளவில் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (5)

✦✦✦✦✦✦✦

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை 9ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

இம்மஹோற்சவத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (5)

# பாம்புக்கடிக்கு இலக்கான இளைஞன் வைத்தியசாலையில்

(சாவகச்சேரி)

தென்மராட்சி மட்டுவில் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இளைஞன் ஒருவர் பாம் புக்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வருகின்றார்.

மட்டுவிலைச் சேர்ந்த 29 வயது மு. ஜீவநீதன் என்ற இளைஞனே பாம்புத்தீண்டலுக்கு இலக்காகி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (5-30)

# சந்தைகள், கடைகளை பார்வையிடலாம்

வேலணை பிரதேச சபையினால் எதிர்வரும் 17.05.2019ஆம் திகதி வெள்ளிக்கிழமை சந்தைகள், கடைகள் என்பவற்றை பகிரங்க ஏலம் மூலம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இதில் பங்குபற்ற விரும்புபவர்கள் இது தொடர்பான மேலதிக விடயங்களை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகம் உப அலுவலகங்களில் பார்வையிடலாம் என வேலணை பிரதேச சபை தவிசாளர் நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி அறிவித்துள்ளார். (ம)

# உயிரிழந்தவர்களின் நினைவாக வீடுகளில் வெசாக் தோரணங்கள்

## அமைச்சர் சம்பிக்க கோரிக்கை

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத்தில் மேற்கொள்ளப்பட்ட குண்டு வெடிப்புக்களில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் முகமாக சகல வீடுகளிலும் வெசாக் தோரணங்களைத் தொங்க விடுமாறு பெருநகர் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பயங்கரவாதச்செயற்பாடுகள் காரணமாக வெசாக் வலயம் அமைத்தல் மற்றும் தானசாலைகள் அமைத்தல் குறித்து பாதுகாப்பு பிரிவு மற்றும் மஹாநாயக்க தேரர்களால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

எனினும் பிரதான வெசாக வழிபாடுகள் நடத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

எனவே நாடளாவிய ரீதியில் சகல வீடுகளிலும் வெசாக் தோரணங்களை தொங்கவிட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் இம்முறை, வெசாக் தினத்தை கொண்டாடுமாறும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை மணிவரை வவுனியா பிரதேசத்தில் கணேசபுரம் கிராமம், லக்ஸபானா கிராமம், மதவுவைத்தகுளம், தோணிக்கல், பண்டாரிக்குளம், தவசிகுளம் ஆகிய இடங்களிலும், மன்னார் பிரதேசத்தில் ஆத்திக்குளி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# ஆன்மீகச் சிந்தனைகள்

## எது நம்முடைய நேரம்?

✦ உலகில் மக்கள் செய்யும் பிழைகளுக்கெல்லாம் தலையாய பெரிய பிழை அறிவு தரும் நல்ல நூல்களைக் கல்லாமையே ஆகும். நல்ல நூல்களைக் கற்கும் போது, அறிவு மேம்படும். அதனால் தான் இறைவனை கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி என்பர்.

✦ மனிதனை உயர்த்துவது பணமன்று, பதவியும் அன்று, குலமும் அன்று, பருமனும் அன்று, உயரமும் அன்று. அது எதுதான் என்றால் அறிவு மட்டுமே. வள்ளுவர் இதனையே அறிவுடையார் எல்லாம் உடையார் என்று குறிப்பிடுவார்.

✦ மலை புரண்டுவரினும், கடல் கொந்தளித்துப் பொங்கினாலும், வானம் இடிந்து தலை மீது விழுந்தாலும் தர்மம் காட்டிய நல் வழியில் சத்தியத்தை விடாது கொண்டிருக்கும் செயலே வீரச் செயலாகும்.

✦ பொறுமை கடலினும் பெரிது என்பர். பொறுமை ஒருவனுக்கு புகழைத் தரவல்லதாகும். புண்ணியவான்களிடமே பொறுமை குடிகொண்டிருக்கும்.

✦ உலகம் கூட அழிந்துவிடும். ஆனால், பொறுமை மிக்கவரின் புகழ் அழிவதில்லை.

✦ மறக்காமல் மனதில் வைத்துக்கொள்ள வேண்டிய கருத்துக்கள் இரண்டாகும். அவை, அறவழியில் செலவழித்த பொருளும், பூஜைக்காக செலவழித்த நேரமும் ஆகும்.

# உலகக் கிண்ணப் போட்டியில் விளையாட இங்கிலாந்திற்குப் புறப்பட்டது இலங்கை




உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் பங்கேற்க இலங்கை அணி வீரர்கள் இங்கிலாந்துக்கு புறப்பட்டார்கள்.

ஐ.சி.சி. உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 30 ஆம் திகதி இங்கிலாந்தில் தொடங்கவுள்ளது.

இந்தத் தொடரில் பங்கேற்கும் இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் நேற்றுக் காலை இங்கிலாந்துக்கு புறப்பட்டார்கள்.

பேருந்தின் மூலம் இலங்கை வீரர்கள் புறப்பட்ட நிலையில் பின்னர் விமானத்தில் இங்கிலாந்து செல்கின்றனர்.

இதையடுத்து பேருந்து புறப்படும் இடத்துக்கு இலங்கை வீரர்களின் மனைவிகள், குழந்தைகள் வந்திருந்து அவர்களை மகிழ்ச்சியுடன் வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்கள்.

இது தொடர்பான வீடியோ இலங்கை கிரிக்கெட் அணியின் அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (க)

# உலகக் கோப்பையை இங்கிலாந்து வெல்லும் இந்திய முன்னாள் வீரர் சுனில் கவாஸ்கர்




உலகக்கோப்பையை வெல்ல இங்கிலாந்து அணிக்கு நிறைய வாய்ப்பு இருப்பதாக இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் சுனில் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.


ஐ.சி.சி. உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி தொடங்குகிறது. இந்நிலையில் இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் சுனில் கவாஸ்கர் இங்கிலாந்து அணிக்கு கோப்பையை வெல்ல நிறைய வாய்ப்பு இருப்பதாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், 2015 ஆம் ஆண்டு உலகக்கோப்பை தொடரில் மோசமான தோல்வியை சந்தித்த பிறகு இங்கிலாந்து அணியின் விளையாட்டில், வீரர்களைத் தேர்வு செய்வதில் பல நல்ல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் கடந்த இரண்டு முறையும் உலகக்கோப்பை தொடரை நடத்தும் அணி தான் கோப்பையை வென்றுள்ளது என அவர் கூறியுள்ளார். (க)

# சுப்பர் ஸ்ரார் ரஜினியை சந்திக்க வேண்டும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வீரர் பிராவோ



சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்தை சந்திப்பதில் ஆர்வமாக இருக்கிறேன் என சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் சகல துறை வீரர் பிராவோ தெரிவித்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் அணி வீரரான பிராவோ நீண்ட காலமாக ஐ.பி.எல். போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார்.

ஆங்கில பத்திரிகைக்கு இவர் அளித்துள்ள பேட்டியில், சென்னை அணியில் விளையாடி வருவதால் இங்குள்ள உணவுகள் மற்றும் கலாசாரம் மிகவும் பிடிக்கும்.

சித்திரம் பேசுதடி 2' என்ற தமிழ் படத்தில் பாடி இருக்கிறேன். மீண்டும் வாய்ப்புக் கிடைத்தால் பாடும் ஆர்வம் எனக்கு இருக்கிறது.

சுப்பர் ஸ்ரார் ரஜினியை பற்றி அதிகம் கேள்விப்பட்டிருக்கிறேன், அவரைச் சந்திக்கும் ஆர்வம் இருக்கிறது. என்றாவது ஒருநாள் அவரை சந்திப்பேன் எனக் கூறியுள்ளார்.

இம்ரான் தாஹிர், ஹர்பஜன் சிங் ஆகியோர் தமிழில் 'டுவிட்' செய்வதுபோல் நானும் ஒரு நாள் தமிழில் டுவிட் செய்வேன் என கூறியுள்ளார். (க)

# ஒட்டுமொத்த வீரர்களின் சிறப்பான செயற்பாடே கொல்கத்தாவுடனான வெற்றிக்குக் காரணம்

## மும்பை பயிற்சியாளர் ஜெயவர்த்தன




கொல்கத்தா அணிக்கெதிரான போட்டியில் பந்து வீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டதே வெற்றிக்குக் காரணம் என்று மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்சியாளர் ஜெயவர்த்தன கூறியுள்ளார்.

ஐ.பி.எல். தொடரின் இறுதி லீக் போட்டியில் ரோகித் சர்மா தலைமையிலான மும்பை அணியும், தினேஷ் கார்த்திக் தலைமையிலான கொல்கத்தா அணியும் மோதின. கட்டாய வெற்றியை நோக்கி விளையாடிய கொல்கத்தா அணி மிகவும் மோசமான தோல்வியை சந்தித்ததால், பிளே ஓப் சுற்றுக்கான வாய்ப்பை இழந்தது.

பலம் வாய்ந்த கொல்கத்தா அணியை 133 ஓட்டங்களுக்குள் சுருட்டி வெற்றி பெற்ற மும்பை அணி புள்ளிப்பட்டியலில் முதல் இடம் பிடித்தால், அந்தணிக்கு வாழ்த்துகள் குவிந்து வருகிறது. இந்நிலையில் போட்டி முடிந்த பின்பு மும்பை அணியின் தலைமை பயிற்சியாளரும், இலங்கை அணியின் முன்னாள் வீரருமான ஜெயவர்த்தன கூறுகையில், இதற்கு முன் முடிந்த கொல்கத்தா போட்டியில் அந்தணியினர் சாதாரணமாக எங்களை கணித்துவிட்டனர்.

இதனால் இந்த முறை அவர்கள் தங்கள் திட்டங்களை கணித்துவிடக்கூடாது என்பதற்காக, விக்கெட்டுகளை வீழ்த்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்கினோம். ஹர்திக் பாண்டியா 2 விக்கெட்டுகளை முக்கிமான நேரத்தில் வீழ்த்தி நம்பிக்கை கொடுத்தார். பின்னர் மலிங்கா தனது அனுபவ பந்துவீச்சால் சில விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதற்கிடையே ஓட்டங்களை கட்டுப்படுத்தி குருணல் பாண்டியா எதிரணிக்கு நெருக்கடியை அதிகரித்தார் என்று தெரிவித்துள்ளார். (க)

# குடும்பத்துடன் சென்று வாக்களித்தார் டோனி





இந்திய அணியின் விக்கெட் கீப்பர் டோனி தனது குடும்பத்துடன், சொந்த ஊரான ராஞ்சிக்குச் சென்று வாக்களித்துள்ளார்.

மக்களவை தேர்தலுக்கான 5 ஆம் கட்ட வாக்குப்பதிவானது உத்திர பிரதேசம், ராஜஸ்தான், மேற்கு வங்கம், மத்திய பிரதேசம், பிகார், ஜார்கண்ட், ஜம்மு காஷ்மீர் ஆகிய 7 மாநிலங்களில் உள்ள 51 தொகுதிகளில் நேற்று முன்தினம் காலை முதல் நடை பெற்று வருகிறது. இந்த நிலையில் இந்திய அணியின் விக்கெட் கீப்பரும் சென்னை அணியின் தலைவருமான டோனி, தன்னுடைய குடும்பத்துடன் சொந்த ஊரான ராஞ்சிக்கு சென்று ஜவஹர் வித்யா மந்திர் வாக்குச் சாவடியில் வாக்கினை பதிவிட்டுள்ளார்.

மேலும் தன்னுடைய மகளுடன் இருக்கும் ஒரு வீடியோ ஒன்றினை இணையத்தில் பதிவிட்டுள்ளார். அந்த வீடியோவில், "என்னுடைய அப்பாவை போல அனைவரும் உங்களுடைய வாக்குகளை பயன்படுத்துங்கள்" என ஷிவா கூறியுள்ளார். (க)

## சட்டத்துக்குப் புற...

நடவடிக்கை முன்னரே திட்டமிடப்பட்ட ஒன்று. அதனை அறிந்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அலுவலகத்தில் இருந்தவற்றை அகற்றியிருக்க முடியாதா? எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவையால் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய பீடாதிபதிகள் மற்றும் பதிவாளர் ஆகியோர் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியை நேற்று செவ்வாய்க்கிழமை பலாலியில் சந்தித்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் மற்றும் சிற்றுண்டிச்சாலை நடத்துநர் ஆகியோரின் விடுதலை குறித்து இந்த சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது.

இதன்போது, நாட்டில் நிலவும் தற்போதைய சூழ்நிலையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கையினை மீளவும் ஆரம்பிப்பதற்கு இராணுவத்தின் உதவி அவசியமானது என பீடாதிபதிகள் யாழ்ப்பாண மாவட்டத் தளபதியிடம் சுட்டிக்காட்டினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாட்டின் அனைத்து பாகங்களையும் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்பதனால் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்பினை கோருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், கடந்த 3ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் தேடுதல் நடவடிக்கை இடம்பெற்ற போது சில விரும்பத்தகாத விடயங்கள் இடம்பெற்றதனை இராணுவத் தளபதியிடம் தெரிவித்த அவர்கள் அந்த விடயங்கள் தமக்கு மன வேதனையை அளிப்பதாகவும் தெரிவித்தனர்.

மேலும் கைது செய்யப்பட்ட இளைஞர்களின் எதிர்காலத்தினை கருத்திற்கொண்டு அவர்கள் மீதான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் பீடாதிபதிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த யாழ்ப்பாண மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி, தனது அதிகார வரம்புக்கு உட்பட்ட விடயங்களை செய்து தருவதாக உறுதியளித்தார்.

அத்துடன், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மட்டுமல்லாது இலங்கையில் அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் தேடுதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோன்றதொரு தேடுதலே யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தேடுதல் நடவடிக்கை முன்னறிவுப்புடனேயே நடத்தப்பட்டது. ஆகவே அங்கு வைக்கப்பட்டிருந்த ஒளிப்படங்கள், பதாகைகளை அகற்றியிருக்க உங்களால் முடியவில்லையா?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்காலத்தில் இவ்வாறான சட்டத்துக்குப் புறம்பான விடயங்கள் இடம்பெறாது என உறுதிப்படுத்தப்படவேண்டும் என்றார். (ம-3-10)

## 41 வங்கிக் கண...

பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தற்கொலை வெடிகுண்டு தாக்குதலில் தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர ஹோட்டல்களில் இருந்த பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

அத்தோடு தற்கொலை குண்டுதாக்குதலுடன் தொடர்புடையோர் எனும் சந்தேகத்தில் பலர் பொலிஸாரல் கைது செய்யப்பட்டு வருவதோடு, பயங்கரவாதிகளின் வங்கிக் கணக்குகள் மற்றும் அவர்களின் வீடுகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## யாழ். பல்கலை...

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் க.கந்தசாமி நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த நியமனம் தொடர்பான விசேட வர்த்தமானி நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீமினால் வெளியிடப்படும் என்று உயர் கல்வி அமைச்சு வட்டாரங்களில் இருந்து அறியவந்துள்ளது. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதும், யாழ்ப்பாண பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரிக்கான நியமனம் குறித்து உயர் கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்படும் என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

பல்கலைக்கழக சட்டத்துக்கமைவாக புதிய துணைவேந்தருக்கான தேர்தலை நடத்தி, பல்கலைக்கழக பேரவையின் சிபார்சுடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரை அடிப்படையில் புதியவரொருவர் ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் வரை மூன்று மாத காலத்துக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பௌதிகவியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியரான க. கந்தசாமி, தனது பல்கலைக்கழக சேவையில் பௌதிகவியல் துறைத் தலைவராகவும், விஞ்ஞான பீடாதிபதியாகவும் பதவி வகித்ததுடன், யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடம், தொழில்நுட்ப பீடம் அகியவற்றின் ஸ்தாபக பீடாதிபதியாகவும் இருந்தவராவார்.

அத்துடன் இலங்கை தேசிய கல்வி ஆணைக்குழுவின் ஐந்து உறுப்பினர்களுள் ஒருவராகவும் செயற்படுகிறார். (ம-3-9)

## ஐ.எஸ் அமைப்பி...

வெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற சோதனை நடவடிக்கை காத்தான்குடி பகுதியில் தீவிரமாக இடம்பெற்று வருகிறது.

அந்த வகையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காத்தான்குடி பகுதியில் அரச புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் பதினொரு பேர் கைது செய்யப்பட்டனர்.

மேலும் நேற்று செவ்வாய்க்கிழமை சோதனை நடவடிக்கை மேற்கொண்டதில் மேலும் ஐவர் கைது செய்யப்பட்டு காத்தான்குடி பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

இரண்டு நாட்களுமாக அரச புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட சோத்னை நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட பதினாறு பேருக்கும் அவர்களது சொந்த பெயரை விட ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் வழங்கப்பட்ட பெயர்கள் இருப்பதாகவும் அவர்கள் ஆயுதப் பயிற்சி, ரி-56 ரக துப்பாக்கி சுடும் பயிற்சி, வெடி பொருட்களை தயாரிக்கும் பயிற்சிகளை பெற்றிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.(ம-60)

## பயங்கரவாத...

பாராளுமன்றத்தில் நேற்று விசேட அறிவிப்பு ஒன்றினை விடுத்தபோதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த பிரதமர்,

புனித உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலுடன் தொடர்புபட்ட பல உண்மைகள் விசாரணைகளில் வெளிவந்துள்ளது.

இந்த பயங்கரவாத தாக்குதல் ஐ.எஸ். இஸ்லாமிய அமைப்பினால் நடத்தப்பட்டுள்ளது. கடந்த 2014 ஆம் ஆண்டு இந்த அமைப்பின் தலைவரினால் இஸ்லாமிய இராச்சிய அழைப்பு விடுத்தபோது பல நாடுகளில் இருந்து முஸ்லிம்கள் சிரியா சென்று இணைந்து கொண்டனர். இலங்கையில் இருந்தும் சிலர் சென்றதாக புலனாய்வு அறிக்கை கூறுகின்றது. 2014 ஆம் ஆண்டில் இவர்கள் சென்றுள்ளதாக புலனாய்வு தகவல்கள் தெரிவிக்கின்றது. துருக்கி ஊடாக சென்றதாகவே கூறப்படுகின்றது.

எனினும் 2014 ஆம் ஆண்டின் பின்னர் இஸ்லாமிய இராச்சியம் உருவாக்கப்பட்ட பின்னர் இங்கிருந்து சிரியா சென்று ஆயுத பயிற்சி பெற்று இங்கு வந்ததாக தகவல்கள் கிடைத்துள்ளது. கொல்லப்பட்ட நபர்கள் அனைவரும் சிரியா சென்று ஆயுத பயிற்சி பெற்றுள்ளனர். அதேபோல் கைது செய்யப்பட்டுள்ள சிலரும் சிரியா சென்று பயிற்சி பெற்றதாக அறியமுடிந்துள்ளது.

இந்த தாக்குதலின் பிரதான நபராக கருதப்படும் சஹ்ரான் என்ற நபர் 2015ஆம் ஆண்டு சிரியா சென்றுள்ளதாகவும் துருக்கியில் இருந்து சிரியாவுக்கு சென்ற போது அவர்து பெற்றோர், உறவினர்களும் சிரியாவுக்கு சென்றுள்ளனர் என்ற தகவலும் கிடைக்கப் பெற்றுள்ளது.

அவரது பெற்றோர் சிறிது காலம் சிரியாவில் தங்கியிருந்து 2016 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் திகதி மீண்டும் இலங்கைக்கு வந்துள்ளனர்.

அவர்கள் குறித்தும் விசாரணை நடத்தப்படுகின்றது. இந்த பயங்கரவாத நகர்வுகளில் 18 தாக்குதல்க்ள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. எனினும் அதற்கான இடம் வழங்கப்படவில்லை என்பதும் பாதுகாப்பு அறிக்கை கூறுகின்றது.

எவ்வாறு இருப்பினும் இதனை சர்வதேச ஒத்துழைப்புடன் முடிவுக்கு கொண்டுவர வேண்டும். அதற்கான சகல தரப்புடன் இணைந்து புலனாய்வு தகவல்களை பரிமாற்றிக் கொண்டு செயற்பட வேண்டும் என்றார்.(ம-3)

## முஸ்லிம்களை...

கிக்கணக்குகள், 4 மோட்டார் சைக்கிள்கள், ஜெலிக்னைட் குச்சிகள், டெட்டனேட்டர்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த தாக்குதலுக்கு உதவிய ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்சம் 20 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. ஒரு கோடியே 80 இலட்சம் ரூபாய் இப்படி வழங்கப்பட்டுள்ளது.

இது சர்வதேச பிரச்சினை. அந்த இயக்கங்களின் பெயர்களை நான் பாவிக்கவில்லை. அவர்களிற்கு அங்கீகாரம் கிடைத்து விடும் என்பதால் தவிர்த்து விடுகிறேன்.

பயங்கரவாதிகள் அழிக்கப்பட வேண்டுமென்பதை நான் கூறியுள்ளேன். சிங்கள மக்கள், முஸ்லிம் மக்களை அச்சத்துடனும், சந்தேகத்துடனும் பார்க்கிறார்கள். தமிழர்களும் அதேவிதமாகத்தான் பார்க்கிறார்கள்.

ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். வடக்கில் இராணுவம் தேவையென்ற தமிழ் தலைவர்களின் நிலைப்பாட்டை வரவேற்கிறேன்.

நான் நாட்டின் ஆறாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி. எனக்கு முன்னர் இருந்த ஐந்து ஜனாதிபதிகளின் காலத்திலும் நாட்டில் குண்டுவெடிப்புக்கள் நடந்தன.

தமிழர்கள் எல்லோரும் புலிகள் என முன்னர் வந்த சந்தேகத்தால் பேரழிவு வந்தது. 1983 கலவரத்தால் புலிகள் பலம் பெற்றார்கள். சிங்கள- முஸ்லிம் உறவு பாதிக்கப்படாமலிருக்க செயற்பட வேண்டும். தவறான செய்திகளை நம்பி செயற்பட வேண்டாமென சிங்கள மக்களை நான் கேட்டுக் கொள்கிறேன். முஸ்லிம்களின் மனம் நோகாமல், அவர்கள் பாதுகாப்பாக இருப்பதை உறுதிப்படுத்தி செயற்பட உத்தரவிட்டுள்ளேன்.

பாதுகாப்பு செயலர், அதிகாரிகளுக்கு முழு அதிகாரத்தை வழங்கியுள்ளேன். நான் பொலிஸ் திணைக்களத்தை பொறுப்பேற்று நான்கு மாதங்கள்தான் ஆகிறது. கசிப்பு காய்ச்சுவதை தடுப்பதற்கு கூட அதிகாரமில்லாமல்தான் பொலிஸ் திணைக்களம் இருந்தது. இப்போது அப்படியல்ல. இன்னும் சில நாட்களில் எஞ்சிய எல்லா சந்தேகநபர்களையும் பிடிப்போம் என்றார். (ம-3)

## தௌஹீத் ஜமாத்...

மேலும் அநுராதபுரம் சேனபுர பகுதியில் பொலிஸார் நடத்திய சோதனை நடவடிக்கையின் போது இராணுவ சீருடைகள் மற்றும் இராணுவ சீருடைகளை ஒத்த உடைகள் பலவும் கைப்பற்றப்பட்டதாக அநுராதபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## சஹ்ரான் வீட்டை...

தற்கொலை குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற தெமட்டகொட - மஹவில கார்டினில் அமைந்துள்ள வீடே இவ்வாறு பொறுப்பேற்றுகொண்டதாக குற்றப்புலனாய்வு பிரிவினர் நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்தனர்.

இதேவேளை. தற்கொலை குண்டுதாரிகளின் 14 கோடி ரூபாய் பணமும் 700 கோடி ரூபாய்க்கும் அதிகமான சொத்துக்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவற்றில் ஒரு தொகை பணத்தை குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதுடன் ஏனைய பணத் தொகை வங்கியில் வைப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (ம-3)

## சபையில் சமர்ப்...

செயலாளரின் மூலமாக சபைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கவுள்ளதாக சபாநாயகர் கரு ஜெயசூரிய சபையில் தெரிவித்தார்.

கடந்த 21 ஆம் திகதி தாக்குதலையடுத்து ஜனாதிபதியினால் மூவர் அடங்கிய விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழு அறிக்கையை ஜனாதிபதியிடம் ஒப்படைத்துள்ளனர். எனவே இந்த அறிக்கையை சபைக்கு ஒப்படைக்க வேண்டும்,

பாராளுமன்றத்தில் ஒரு பிரதியை பெற்றுத்தரவேண்டும் எனவும் இதன் தன்மைகள் குறித்து அறிந்துகொள்ள வேண்டும் எனவும் ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க சபையில் கோரிக்கை ஒன்றினை விடுத்தார்.

இதன்போது பதில் தெரிவித்த சபாநாயகர், இந்த அறிக்கையின் பிரதியை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க கடிதம் மூலமாக அறியப்படுத்தி ஜனாதிபதியின் செயலாளர் மூலமாக அதற்கான நடவடிக்கையை எடுக்க அறிவிக்கின்றேன்.

இதனையடுத்து ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய சாந்த பண்டார எம்.பி. இந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கும் மக்களுக்கும் அறியத்தர நடவடிக்கை எடுக்கவிருப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்றார். (ம-3)

## நான் ஜனாதிபதி ஆவதை மகிந்த விரும்புகின்றார்!

### கோத்தபாய ராஜபக்ஷ



(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதாக தெரிவித்துள்ள முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிட முடியாததன் காரணமாக நான் போட்டியிட வேண்டுமென விரும்புகின்றார் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் த வீக்கின் லக்ஸ்மி சுப்பிரமணியத்திற்கு வழங்கியுள்ள பேட்டியில் கோத்தபாய ராஜபக்ஷ இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மக்கள் மத்தியில் அதிக செல்வாக்குள்ள தலைவர் மகிந்த ராஜபக்ஷ எனினும் அரசமைப்பின் 19 வது திருத்தம் காரணமாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாது. இதன் காரணமாக அவர்,நான் போட்டியிட வேண்டும் என எதிர்பார்க்கின்றார் எனவும் கோத்தபாய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை என்னால் பல விடயங்களை செய்ய முடியும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர் எனவும் தெரிவித்துள்ள அவர் நான் அமெரிக்க பிரஜாவுரிமையை கைவிட்டுவிட்டேன் எனவும் தெரிவித்துள்ளார். (ம-3)

செவன
திகதி 2019/05/07
சீட்டிழுப்பு இலக்கம் 182
V 08 10 11 24

நீரோகா
திகதி 2019/05/07
சீட்டிழுப்பு இலக்கம் 543
லக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 22 27 41 54

கொவிசெத
திகதி 2019.05.07
சீட்டிழுப்பு இலக்கம் 2112
N 49 55 59 70

மஹஜன சம்பத
திகதி 2019/05/07
சீட்டிழுப்பு இலக்கம் 3912
Q 4 9 8 6 3 7

## பெருந்தொகையான வெடிபொருட்...

அநுராதபுரம், கலாவெவ பகுதியில் பெருந்தொகையான வெடிபொருட்கள் நேற்று செவ்வாய்க்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளன.

அநுராதபுரம் - இப்லோகம பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவல் ஒன்றையடுத்தே குறித்த வெடிபொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இதன்போது, குறித்த வெடி மருந்துகளை வைத்திருந்த வர்த்தகர் ஒருவர் கலாவெவ பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கலாவெவ, விஜிதபுர பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும், அவரிடமிருந்து 243 ஜெலட் நைட் குச்சிகள், 12.5 கிலோ கிராம் வெடி மருந்துகள், 145 டெடனேடர்கள் மற்றும் 36 கிலோ கிராம் அமோனியா நைத்திரேற்று என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த சந்தேகநபரிடம் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும், விசாரணையின் பின்னர் சந்தேகநபர் அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3)

## பளையில் கஞ்சாவுடன் இளைஞன்...

தாக்குதல்களை அடுத்து அனைத்து பகுதிகளிலும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த நிலையில் பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை நண்பகல் சோதனை நட வடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில், தலையடி பகுதியில் அமைந்துள்ள வீடொன்றை சோதனைக்கு உட்படுத்திய போது குறித்த வீட்டிலிருந்து 2 கிலோ கிராம் 206 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

அதனையடுத்து சந்தேகத்தின் பேரில் இளைஞரொருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் 21 வயதுடைய தலையடி பகுதியை சேர்ந்தவர் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)


**Group & Personal Classes**
**123/2 Temple Road, Jaffna.**

**Tamil, English Medium வகுப்புக்கள்**

தரம் 6 - O/L வரையான வகுப்புக்கள் நடைபெறுகிறது

- பாதுகாப்பான சூழல்
- அலகுப்பரீட்சைகள், தவணைப்பரீட்சைகள்
- மாணவர்களில் தனிப்பட்டகவனிப்பு

ரக்கா லேன் சந்தியில் இருந்து 50m, இராசம்மா திருமண மண்டபத்திற்கு அருகில்

**Contact No - 0776679544, 0763432521** (8714)



## வாடகைக்கு

அறைகள் வாடகைக்குண்டு (தளபாட வசதிகளுடன்) அரச – தனியார் நிறுவனங்களில் வேலை பார்ப்பவர்கள் விரும்பத்தக்கது.

**Tel No : 070 105 0495** (8769)



## உடனடி வேலைவாய்ப்பு

நீங்கள் வேலை தேடும் ஆர்வமுள்ள 18 வயதிற்கு மேற்பட்டவரா எம்முடன் இணைய அரியதோர் வாய்ப்பு வட மாகாணங்களில் உள்ள எமது கிளை நிறுவனங்களுக்கு பதவி வெற்றிடங்களை நிரப்ப உள்ளதால் இளைஞர், யுவதிகளை இணைக்கவுள்ளோம்.

உயர் கல்வி தொடர முடியாமல் இருந்தால் உங்கள் கல்வித் தகைமைக்கு ஏற்ப பயிற்சி நெறியுடன் கூடிய வேலையினை எமது நிறுவனத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும். (8712)

**தொடர்புகளுக்கு : 076 898 7442, 077 868 9699**



## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

**தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)** (8669)


## விடுதலைப்புலி...

அங்கு தொடர்ந்து தெரிவித்த ஜனாதிபதி, இந்த பயங்கரவாதிகளை பிரதிபலிக்கும் எழுத்துக்களை நான் ஒரு போதும் உச்சரிக்கப் போவதில்லை.

அதனை உச்சரிப்பது அவர்களை நாம் ஏற்றுக் கொண்டதாக அமையும். எனவே, எந்தவொரு அரச தலைவரும் அதனை உச்சரிப்பதில்லை. இந்த பயங்கரவாதிகளையும், அதனுடன் தொடர்புடையவர்களையும் ஒழிக்க வேண்டும் என்பதே எனது ஆலோசனை.

இவ்வாறானதொரு தருணத்தில் முஸ்லிம் மக்களின் நிலைப்பாட்டை புரிந்துகொண்டு செயற்படுவது அனைத்து அரசியல் தலைவர்களினதும் பொறுப்பாகும்.

கடந்த யுத்த காலத்தில் அரசாங்கத்தின் தமிழ் மக்கள் மீதான நம்பிக்கையின்மை காரணமாகவே விடுதலைப் புலிகள் பலம் பெற்றனர். எனவே அக்காலப்பகுதியில் தமிழர்களை பார்த்த அதே கண்ணோட்டத்துடன் முஸ்லிம் மக்களையும் நோக்காதீர்கள் என வேண்டுகோள் விடுக்கிறேன். முஸ்லிம் மக்களின் மனம் புண்படாத வகையில், அவர்களின் பாதுகாப்பை உறுதிபடுத்துவதன்மூலமே இந்த பயங்கரவாதத்தை ஒழிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)


## SB TRAVELS AND TOURS PVT LTD
(விமான பயணச்சீட்டு நேரடிமுகவர்)

சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுகளை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். இந்தியாவிற்கான வீசாவினை எமது நிறுவனத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| சென்னை | - | R/T - 25,500/= |
| மதுரை | - | R/T - 26,800/= |
| திருச்சி | - | R/T - 38,800/= |
| பிரான்ஸ் | - | R/T - 125,300/= |
| லண்டன் | - | R/T - 122,300/= |
| சிங்கப்பூர் | - | R/T - 41,800/= |

டுபாய், சீனா, மலேசியா போன்ற நாடுகளுக்கு வீசா ஒழுங்கமைத்து செய்து தரப்படும்.

No 212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 9555 / 076 691 1080, 82,83 (8694)



## வேலைவாய்ப்பு

நீங்கள் வேலை தேடும் ஆர்வம் உள்ள 18 வயதிற்கு மேற்பட்டவரா? எம்முடன் இணைய அரியதோர் வாய்ப்பு.

வடமாகாணங்களில் உள்ள எமது கிளை நிறுவனங்களுக்கு பதவி வெற்றிடங்களை நிரப்பவுள்ளதால் இளைஞர் யுவதிகளை இணைக்கவுள்ளோம்.

உங்கள் தகுதிக்கு உரிய பதவிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

வேலை அனுபவம் இல்லாவிட்டால் தகுந்த பயிற்சி வழங்கப்படும்.

சம்பள அளவுத்திட்டம் - 15,000/= தொடக்கம் 45,000/= (8681)

**தொடர்புகளுக்கு : 0769393965, 0776253242, 0213142828**


## 85 குண்டுகள் வவுனியாவில்...


வவுனியா ஈரப் பெரியகுளம் பொலிஸாரால் சொப்பர் விமானங்களைத் தாக்கும் 85 குண்டு கள் மீட்கப்பட்டுள்ள தாக பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

வவுனியா ஈரப் பெரியகுளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவ லின் அடிப்படையில் நேற்று முன்தினம் மாலை அலகல்ல அளுத்கம பகுதியிலுள்ள காட்டுப் பகுதிக்கு மோப்ப நாயின் உதவியுடன் சென்ற பொலிஸார் சொப்பர் விமானங்களைத் தாக்கும் 85 குண்டுகளை மீட்டுள்ளனர்.

நீதிமன்ற அனுமதியுடன் அப்பகுதியில் மேலும் குண்டுகளைத் தேடி விசேட அதிரடிப்படையினர் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக ஈரப்பெரியகுளம் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-9)

# மரண அறிவித்தல்

## வயித்தியான் ஞானப்பிரகாசம்



இராஜேந்திரா வீதி, யாழப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வயித்தியான் ஞானப்பிரகாசம் நேற்று 07.05.2019 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயித்தியான் - ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செபஸ்ரியான்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், மாகிறேற்றின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை, சவிரியான் சின்னமணி மற்றும் சூசைப்பிள்ளை, மரியம்மா, செபமாலையின் அன்புச் சகோதரனும், யூட் கிறிஸ்ரியன் (மதன் - கடை), யூட் கிறேஷியன் (யூட் - அமெரிக்கா), அமலராணியின் அன்புத் தந்தையும், மேரி மெற்றில்டா, யமுனா கிருஷாந்தி (அமெரிக்கா), மதுராந்தகனின் அன்பு மாமனாரும், ஜோன்ஏட்ரியன், ஜெனிலியா, ஜோன் பிரட்ரியன், ஜோன் ஏட்ரிசியன், ஜொகானா, இன்ஷகா, சிலோக், மேரிஷரோனா, பிறினாவின் அன்பும் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.05.2019) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**28 A, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.** (8711)

**தகவல் : குடும்பத்தினர்.**


## CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள். (C-6311)



CNR World Wide Express
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 8655413



## வாகன கண்காணிப்பு கருவி



உங்களின் வாகனத்தின் நடமாட்டத்தை தொலைபேசி மூலம் அவதானிக்கலாம். Milage, Over Speed, Parking, Engine Report உண்டு அத்துடன் Distributor களுக்கு விசேட சலுகைகள், Package உண்டு.

**Garudan PVT LTD** (8713) **077 444 5909**



## சகலபோட்டிப் பரீட்சைகளுக்குமான விசேடவகுப்புக்கள்

சனி, ஞாயிறு மற்றும் மாலை நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன

சமய பாடஆசிரியர், வருமானப் பரிசோதகர், நீதிமன்ற பதிவாளர், முகாமைத்துவ உதவியாளர், சட்டமாணி; SLAS, SLEAS உட்பட அனைத்து பரீட்சைகளுக்கும்

**தொடர்புகளுக்கு : 076 688 3394** (C-6324)

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ்.ஆஸ்பத்திரி வீதியில்)



## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 Kg க்கான கட்டணம் (8684)

| | |
|---|---|
| UK | 600/= |
| France | 700/= |
| Germany | 700/= |
| Swiss | 850/= |
| Canada | 1000/= |

ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு. பொதிகள் அனுப்பி வைக்கப்படும்

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும். 077 755 4528

**திருமுருகன் கொம்நெற் (பிறைவெட்) லிமிடெட்**

321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.(முட்டாஸ் கடை சந்தி அருகாமையில்)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. DHL aramex
04, மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி. கிளிநொச்சி, மன்னார்.

3 - 5 Working Days



## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

| | |
|---|---|
| UK - 550 | /=Kg |
| கனடா - 900 | /=Kg |
| ஜேர்மனி - 700 | /=Kg |
| நெதர்லாந்து - 700 | /=Kg |

(C-6332)

0768226240

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

V2 TRAVELS



## வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION **070 330 5500** WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.